துயிலணை விடுக்கலின்றி பொய்த்துயில் கொண்டனர், அப்போது திருநாராயணர் துரியோதனனை நோக்கித் தருமபுத்திரன் கண்ணனைப் பெற்றிடைப் படைத் துணைவனாகப் பெறுதற்குமுன்பு நீபெற்ற படைத்துணைவனைப் பெறுவாயென்று கூறத் துரியோதனன் கண்ணமூர்த்தி யிடைச்சென்று திருமுடிப்பக்கத்திட்ட ஆசனத்திருந்தனன்.

சென்ற வருளமுநிவ வருச்சுனனுக்குக் கூற அவன் தருமபுத்திரன் பட்டனையாய் கண்ணமூர்த்தி யிடஞ்சென்று திருவடிப் பக்கத்திட்ட ஆசனத்திலிருந்து, அவர் திருவடியை யணைந்து கொண்டபோது துயிலுணர்ந்தவர்போ லெழுந்து அருச்சுனனை முற்பு நோக்கித் துரியோதனனைப் பின்னர்ப்பார்த்து உங்கள் இருவரும் பாதுகைக்கே வந்தீர் யென்று துரியோதனன் உம்மைப் படைத்துணைவராகப் பெறவந்தேனென்ன அருச்சுனன் எனக்கு முன் அவன் வந்தாலும் தேவரீரையான் முன்னங்கண்டு என்மனக் கருத்தைத் திருவடி சொப்புவித்தமையால் எனக்கே துணையாக வேண்டுமென்றனன், துரியோதனனை நோக்கியபோது அவர்நிமித்தம் எங்கள்மேற் போரி லாயுத மெடாதொழிய வேண்டுமென்று விடைபெற்று கண்ணமூர்த்தியருளிய கோபாலராகிய படைத்துணைவரோடு பலராமரைக்கண்டு அவராற் சில வீரரைப்பெற்று அத்திருப்புரிசேர்ந்தனன்.

கண்ணமூர்த்தி யருச்சுனன் தேர்மேலெழுந்தருளி யுபப்பிலாவியந்திற்குச் சென்று தருமபுத்திரனை நோக்கி யினியேனும் உலகாளக்கருத்தோ, அன்றி முன்போலக் காடாளக் கருத்தோவென்று வினவத் தருமபுத்திரன் துரியோதனாதி யரைக் கொன்று, நாடு ருவதைப் பார்க்கிலும் நீரே தூதாகத் துரியோதனனிடத்துச் சென்று எங்கள் நாடு தாரா தாயினும் ஐந்தூராயினும் ஐந்துவீடாயினும் வேண்டுக தாராதிருப்பிற் போர் செய்வது திண்ணமென வதுகேட்ட வீமனுமுதலிய நால்வருங் கோபிக்க அதைத் தவிர்வுசெய்து கண்ணமூர்த்தியைத் தூதாக அனுப்பினன், தூதாகவந்த கண்ணமூர்த்தியைச் சகுனியாலெதிர்கொள்ளாது, துரியோதனனிருக்க, எதிர்கொண்ட விதுரன் வீட்டுக்கு எழுந்தருளித் திருவமுது செய்து அன்றிரவு

அங்கிருந்தருளி, மறுநாள் விதுரன் [illegible] யெழுந்தருள்க வெ
ன்க் கண்ணமூர்த்தி யெழுந்தருளி, துரியோதனன் கோயிலுட
சென்றனன்.

அவர் வருகையை யறிந்த துரியோதனன் தன் சபையிலு
ள்ள அரசரைநோக்கி கண்ணனிடம் [illegible] நீங்கள்
எதிர்கொண்டு உபசரியாதிருக்க [illegible]
ய் அவ்வாறே யிருந்து அவர் [illegible]
து வருகையையறிந்து [illegible] சபையிற் [illegible]
ரில்லில் உண்டது [illegible], கண்ணமூர்த்தி [illegible] வீட
டில் உண்டு பின்னர் உபயோக [illegible] செய்து [illegible]
வென்னத் துரியோதனன் [illegible] குலத்தாரையெல்லாம்
வினவத், [illegible] முதலியோர் [illegible] காலங்
கழிந்தன. ஆதலால் [illegible] வென்ன,
கொடேனென்று துரியோதனன் [illegible] வீடாயினு
அவர்கட்குக்கொடு, கொடாதொழியின் [illegible], நீயிழப்
பாயென்றுகூறத் துரியோதனன் அவரையிகழ்ந்து, தனியிடத்
திற் சென்று விதுரனையழைத்து [illegible] அவன் தன்கையில்வில்
முறித்துத் தன் வீடுநோக்குச் சென்றனன்.

கண்ணமூர்த்தி குந்தியினிடம் போய்க் கன்னிப்பரு
வத்திற் சூரியனுக்கொரு புத்திரனைப்பெற்று ஒன்றும் பய
கையில் விடப்பட்டவன் கன்னன். அவனுகையில் அச்சுவசேன
னென்றொரு சர்ப்ப மிருக்கின்றது அதை அருச்சுனன்மேல்
இரண்டாந்தடவை பிரயோகஞ் செய்யாம லிருப்பாயென்று
குந்திதேவிக்குக்கூறி விதுரனில்லிற் சென்றனர் இரவுகழித்து
உப்பிலாவியத்திற்குச் செல்லத் தேரின்மே லெழுந்தருளினர். அப்
போது துரியோதனன் கண்ணமூர்த்தியை வஞ்சனையாற்சிறை
ப்படுத்தக் [illegible]ச் சஞ்சயனுல் வருவித்துப் பொய்யாசனமிட்ட
னன் அவ்வாசனத்திருந்த கண்ணமூர்த்தியிது வஞ்சனையென்
றறிந்து விசுவரூபங்கொண்டதன்கீழிருந்த அரக்கர்முதலாயி
னோரைக்கொன்று துரியோதனனை நோக்கி யின்றேயுங்களோடே
[illegible]வேன் களைந்தால் வீமன்முதலியோர் கூறிய சபதம்
பொய்க்குமேயென்று கூறிக் கோபம் தணிந்து பழைய திருவு

ருவங்கொண்டு அவன் கோயிலினின்று நீங்கிக் கன்னனை நோக்
கிப்பிறப்புவகையை எடுத்துக்கூறி, தன்னுடன் வந்த அசுவத்
தாமாவினிடத்துத் துரியோதனனுக்கு ஐயப்வரச் சிலகுறிகளைக்
காட்டித் தேவேந்திரனையழைத்து உன்புத்திரனாகிய அருச்சு
னன் கன்னனை வெற்றிகொள்ள அவன் கவசகுண்டலங்களை
வாங்கிவருவாயெனக் கட்டளையிட்டருளினார்.

தேவேந்திரன் ஒருமுதிய வேதியன் வடிவமாய்க் கன்ன
னிடத்துவந்து புகழ்ந்தென் கருத்துக்குடன் படுவாயாகில் யா
ன்கருதியதைச் சொல்வேனென்றளவில் கன்னன் நீவேண்டிய
து கொடேனாகில் "மன்றில்வலிந்தோன்" முதலியோர்செய்த
பாவத்திற் செல்வேனென, கேட்ட தேவேந்திரன் உன்னிலி
ன்று நீங்காத கவசகுண்டலங்களைத் தருவாயென்றிரக்கவிவை
யென்னோடு பிறந்தன. ஆதலால் கொடுத்தற்கரிது. நீயே கொள்
ளென்று கன்னன்கூறியவளவில் தேவேந்திரன், தன்மகன்
அருச்சுனன்போரில் உன்னைவெல்லுவதற்குவந்து இரக்கிறான்.
நீகொடாதொழிகவென்று சூரியன் அசரீரியாகக்கூற, உணர்ந்த
கன்னன், கொடுத்ததைமறுக்கே னென்றிருந்தவளவில் தேவே
ந்திர னவற்றைக்கொண்டு கண்ணமூர்த்தியிடத்துக் கொடுத்த
னன். மீட்டும்கன்னனிடத்தில் ஓர் சிகாமணியுண்டு அதனையும்
வாங்கிவருகவெனக் கண்ணமூர்த்தியணிக்க அதுகேட்டுத் தே
வேந்திரன் முன்புசென்றதிருவுருவோடு சென்றிரக்கக் கன்ன
ன்கொடுத்தவுடனே இவனைப்போலும் வள்ளன்மைபூண்டோர்
உலகிலொருவருமில்லையெனக்களிகூர்ந்து ஒரு வேற்படையை
க் கன்னனுக்குக் கொடுத்துமீண்டு கண்ணனிடத்துவந்து அச்சி
காமணியைத்தந்து தன்னுலகிற்குச் சென்றனன்.

அப்பால் கண்ணமூர்த்தி குந்திதேவி கோயில்குறுகி யிங்கி
ருக்கும் கன்னனென்பவன் முன்பு கன்னிப்பருவத்தில் பெற்று
உன்னாற்பெட்டகத்திற் [illegible]த்[illegible]றில் விடப்பட்டவன் அவன்
டத்தில் அச்சுவசேனனென்றொரு சர்ப்பமுண்டு [illegible]தனை யிரண்
டாந்தடவை அருச்சுனன்மேலெய்யாமல் ஒருவரங்கேட்டுவரு
கவென்றுகூறக், குந்திதேவிகேட்டு மனங்கலங்கி அவனிடத்திற்
சென்றபோது க[illegible]னும் அவள்வருகையைக்கேட்டு எதிர்வந்

து திருவடிபணிந்து அன்னாய் நீயிங்குவருகையென் பெருந்தவ மென்றுநிற்ப, குந்திதேவி அப்பாசெல்வக்குழந்தாய் நீ ஐவருக்குமுன் பிறந்தவன் உன்னையிறுகாறும் பிரிந்திருந்தேனென்றுகண்ணீர்ததும்பி வாய்குழறிக்கூற அதுகேட்ட கன்னன் இங்கு என்தாய்மாரெனவந்த பலரும் இந்த ஆடையைப்பார்த்து மாண்டார்கள் அவர்கள்போல நீர் மாளாமல் உடன்குறியைன்டுவதைப் பெற்றுக்கொண்டு போமென்றுசொல்ல, நான் உன்னைப் பெறேனாகில் என்னை யிந்தஆடை யழிக்கவென விழித்துப்போர்த்துத் தன் மகனையிருத்த குந்திதேவியின் திருவடி மேல்விழ, அவனெடுத்து மடியின்மேல் வைத்துக் கையால் உடம்பை தீவி அப்பா உன்தம்பிமாராகிய ஐவரோடுங் கலந்து நீயரசாள உனக்குச் சொல்லவந்தேன் நீவருக என்று சொல்லினாள்.

அன்னாய் நீயன்றேகூறாமல் இன்றுகூறவந்தாய நான் செய்யக்கடவதியாது துரியோதனனன்றோ இன்றுமெனக் குறியாது எனக்கு முடிசூட்டி யாசியல் தந்து என்னெஞ்சிலேயும் உண்டான். அவன்செய்த நன்றியை விண்றுப்பவையுள இவ்வாறிருக்க அவனுக்குப் போர்வந்தகாலத்தில் செஞ்சோற்றுக் கடன் கழிக்காமல் தம்பிமார்களைச் சார்ந்திருந்தேனாகில் பழியாயியக ளழியாமல் நிற்கும் என்றுகூற, குந்திதேவி கேட்டுக் கவலையடைந்து. அப்பா போர்முகத்தில் தருமன் முதலிய நால்வரையுங் கொல்லாதொழி அருச்சுனன்மேல் அச்சுவசேனனென்னுஞ் சர்ப்பத்தை இரண்டாந்தடவை போடாதொழி இந்தவரந்தான் உன்னை வேண்டாநின்றேனென்றுகூற, கன்னன் அருச்சுனனைக் கொல்லுவேன் அல்லாமல் அவன்கையா லிறட்பேன் என்று முன்னே பலரும் அறியச் சபதங்கூறினேன். ஆதலா லவனோடன்றி மற்றையோரோடு போர் செய்யேன். நான் வீரனுகையால் தொடுத்த பாணந் தப்பில் மீட்டும் அதனைத் தொடேன் ஆதலா லிவற்றைத் தந்தேன். நீர் அருளும் வரம் ஒன்று அதாவது போரில் அருச்சுனனால் மடிந்தால் உமது புதல்வனென்று பலருமறிய முலைப்பாலூட்டி என்தம்பிமாரால் இக்கடன் நீர்க்கடன் முதலியவற்றைச் செய்விப்பீர்.

இதனை யருளுவீரென்று வேண்டக் குந்திதேவி கண்ணீர்வார, புலம்பலங்கித் தழுவியெழுந்து முன்பிடிக் கண்ணமூர்த்தி யெழுந்தருளிய கோவிலுட் சென்று டைந்தவர்க்கு விடாது [illegible]

கண்ணமூர்த்தியும் அங்கிருந்து மெழுந்தருளிப் பாடிவீட்டிற் குச்சென்று தருமனைக் கண்டு துரியோதனனைக் கண்டதும் ஐந்தூரேனும் வேண்டினதும் அவன் கொடேனென்றதும் விதுரன்வீட்டிலுண்டதும் கர்ணனை வசமாக்கப் பலவினைந் தேனென்றதும் வாங்கியதும் எடுத்துரைத்து தருமன் மனமிழந்து நீரே யெங்களுக்கொருதுணையென்று புகழ்ந்து கூறி யிருந்தனன், இப்பால் யாதுநிகழ்ந்ததெனின் துரியோதனனை நோக்கி அப்பா தருமன் முதலிய ஐவர்களும் ஒருகுலத்திற் பிறந்தோர்கள். நீங்கள் பங்காளிகள் ஆகையால் வேண்டுமளவும், திருதராஷ்டிரன் நீ அவர்கள் பாகத்தைத் தாராயாகில் அருச்சுனன் கொல்லாமலொழியான் கூற, அவன் இசையாதிருந்ததை நோக்கி சஞ்சயனை யழைத்து, கண்ணமூர்த்தி தருமன் முதலியோரிடத்துச் சென்று வெற்றியைத் தவிர்ப்பது யாவருக்கும் அரிது ஆகலாம் போர்த்தொழில் முன்போலக் காட்டிற்குச் செல்லும்படி தருமனுக்குத் தெரிந்துக் கூறுவாயென்றனுப்பச், சஞ்சயன் போய் பிணியபத்திற் குயர்ந்த கண்ணமூர்த்தியை வணங்கி அவர் அனுமதியால் திருதராஷ்டிரன் கூறியதைத் தருமபுத்திரனுக்குக் கூற, பாகத்தைக் கொடாத துரியோதனனோடு இனிப் போர்செய்து பாகம்பெறவே இருக்கிறேனென்று கூறினன்.

அதுகேட்ட சஞ்சயன் அத்தினபுரிக்குச் சென்று திருதராஷ்டிரன் முதலியோர்க்குக் கூறத் துரியோதனன் கோபங் கொண்டு தன்னை நோக்கிப் பாண்டவர்க்கும் துரியோதனாதியர்க்கும் போர்மூண்டது, ஆதலால் இன்றேவருகவென நமது படைத்துணைவர்களாகிய அரசர்களுக்குத் திருமுகமெழுதுகவென அவன் பற்பல தேசத்தரசர்களுக்கும் ஓலைபோக்கினன். அப்பால் கண்ணமூர்த்தி தருமன் முதலியோரைநோக்கி உங்களுக்குக் காடாளக்கருத்தோ, நாடாளக்கருத்தோ வென்றுவின

வ நீரே யெங்களுக்குத் துணையாய் நிற்கத் துரியோதனனி[illegible]ரை வென்று நாடாளுதலரிதோ வென்றுகூறிக் கண்ணமூர்த்தியி னனுஞையால் தமக்குப் படைத்துணைவராகும்படி பற்பல தேசத்தரசர்களுக்குந் தருமன் ஓலை போக்கினன். இவ்விரு திறத்தினா லு[illegible]ங்கண்ட பற்பல தேசத்[illegible]களுங் கடல் புரண்டு வருவதுபோலத் தமது சேனைகளோடும் வரத் துரியோதனன் தனது சேனைகளுக்குத் தலைவனாக வீஷ்மனையும், தருமன் தனதுசேனைகளுக்குத் தலைவனாகச் சுவேதனையும் பட்டங் கட்டினர்கள். அப்பால் தருமபுத்திரன் ஏவலாற் கடோத்கசன் துரியோதனனிடத்துச்சென்று இன்றைக்குப் பன்னிரண்டாநாள். பாரதயுத்தமென்றுகூற, துரியோதனன் பாண்டவர்கள் பொருட்டேந் தூதுவந்து பாகம் பெறு தொழிந்தவர் உள்பட்டோமா வென்றுசீறி, போரிற்கு முகூர்த்தநாள் வைப்பருவம் களப்பலியாவாரும் இன்றேனா வீஷ்மருந் தெரிந்து விசுவகன்மா கொடுத்த யந்திரவூர்தியேறிச் சாதேவனிடத்துச்சென்று போரிற்கு முகூர்த்தம் வைத்துக்கொண்டு இராவான் களப்பலியாதற்கு உடன்படுத்தி மீண்டனன்.

இவற்றையுணர்ந்த கண்ணமூர்த்தி தருமனைநோக்கி நீரே பகைவர்க்கு நன்றிசெய்பவர்களா யிருக்க எம்மாற் செய்யக்கூடிய தென்னவிருக்கிறதென்று கோபித்துக்கூறத் தருமன் அவற்றை யுணர்ந்து எங்க ளறியாமையைப் பொறுத்தருள்க வென்றுவேண்டக் கோபந்தணிந்து துரியோதனனுக்கு வைத்த முகூர்த்தநாளை வேறுபடுத்தி இராவானைக் களப்பலி தந்தனர். அப்பால் துரியோதன னரசர்களைநோக்கிப் பலவான்களுக்குக் களப்பலி யூட்டுதலும் வேண்டுமோ நீர் போர்க்கோலங் கொள்ளுங்கள் என்றுகூறி வீஷ்மரைநோக்கி அதிரதர் முதலாகிய தலைவர்களைவகுக்க என, வீஷ்மர்வகுத்து அர்த்தரதரில் கன்னனைத் தலைவனாகவகுக்க, கன்னன் கோபங்கொண்டு வாளெடுக்க, வீஷ்மர் நாமிருவரும் போர்செய்வோம். நம்முள் வெல்வாரே அதிரதரென்று கன்னன்முன்பு போர்க்குச் செல்ல இதனை யுணர்ந்த துரியோதனன் இவர்களைப் போரினின்று விலக்கத் தேரேறி யிடையிற்சென்று தடுக்க, கன்னன் இவ்வீஷ்மன்

போரில் இறக்குமளவும் போர் செய்யேனென்று கூறித் தன் கோயிலிற்செல்ல, சிவேதனும் வீஷ்மனும் தஞ்சேனைகளை வியூகம் வகுத்தனர், அன்று பலதேவன் கண்ணனை நோக்கி நீ தரும புத்திராதியோர்க்குத் துணையாகநிற்க நான் துரியோதனாதியர்க்குத் துணையாகநின்று போர்செய்வது நமது குடிப்பிறப்புக்குத் தக்கசெய்கை யன்றென்று விதுரனோடு தீர்த்தமாடச் சென்றனன், இவ்விருதிறத்தார்சேனைகளும் போர்க்களத்திற் றலைப்பட்டுக் கைகலக்கத் துரியோதனன் வீஷ்மனைநோக்கி இவர்களை வெல்லும் வீரரார் கூறுவாயென, அவ்வீஷ்மன் இச்சேனைகளை முப்பதுநாழிகையில் நான்கொல்லாநிற்பேன், துரோணனே மூன்று நாளையிற் கொல்லாநிற்பன், கன்னனே ஐந்துநாளையிற்கொல்லாநிற்பன், அசுவத்தாமனே ஒருநாழிகையிற் கொல்லாநிற்பன், அருச்சுனனே நொடிப்பொழுதிற் கொல்லாநிற்பன், அவ்வருச்சுனனுக்குக்கண்ணமூர்த்தியே தேர்ப்பாகனாயிருந்தனால் வெற்றிக்குவகையறியேனென்று கூறிவாளாவிருந்தனன், சகுனி துரியோதனனை நோக்கிக்காட்டிற்சென்று கந்தமூல பலாதிகளைத்தின்று தவஞ்செய்து காலம்போக்கிய பாண்டவர்களிதுகாறும் யாதுவீரங் காட்டினார்கள் நீ யஞ்சேலென, துரியோதனன் வீஷ்மனை நோக்கி நீ யெங்களுக்குத்துணையாக நிற்கும்போது இக்கண்ணமூர்த்தி யப்பாண்டவர்களுக்குத் துணையாகநிற்பினும் எங்களை யாதுசெய்யக்கூடுமென மனந்தேற்றியிருந்தனன், அருச்சுனன் போர்க்களத்தில்நின்று வீஷ்மர்முதலிய உறவினரைநோக்கி இவர்களைக்கொன்று அரசாள விரும்பேனென்று தேர்த்தட்டில் வாளாவிருக்க, அவ்வருச்சுனனுக்கும் கண்ணமூர்த்தியாவுந் தானாயிருக்குந்தன்மையைத்தெரிசனங்கொடுத்தருள, தேறி யக்கண்ணமூர்த்தி திருவடிகளைவணங்கி நினது நிலையையுணராது சிறியேன் பிதற்றியபுன்மொழிகளைப் பொறுத்தருள வேண்டுமென்றனன், அப்போதுகண்ணமூர்த்தியனுஞ்ஞையால் தருமன் வீஷ்மனையணுகிவணங்கி எமது தந்தையே நீசேனாபதியாய்நிற்க எம்மால் வெல்லத்தரமோ விளம்பவேண்டுமென, பத்தாநாட்போரில் யாகசேனன் புதல்வன்

சிகண்டி யென்பவன் என்முன்வந்தால் நிராயுதனாய்நிற்பேன்
பின் அருச்சுனன்கணையா லிறப்பேனென்றுகூற, துரோணாசா
ரியனையணுகிவணங்கியெமது பரமாசிரியனே நீயிச்சேனையில்
நிற்கில் பிரமன் முதலோரானும் வெல்லமுடியுமோவென்று
தருமன்கூற, என்புத்திரனாகிய அசுவத்தாமா எனக்குமுன்
இறந்தானென்று பலரும்அறியக்கூற வல்லையேல் நான்பாணந்
தொடேன் துருபதன் புத்திரனாகிய திட்டத்துய்மன் கையாலி
றப்பேனென்று கூற அதுகேட்டுத் தன்பாடிபுகுந்தனன்.

முதலாநாள் யுத்தம்.

அப்பால் துரியோதனன், விகன்னன்முதலிய தம்பிமா
ரையும் சல்லியனையும் வீஷ்மனுக்குப் போர்த்துணைவராக வனு
ப்ப அருச்சுனனோடு தலைப்பட்டுப் போர்செய்யும்போது அபி
மன்னன் முதலிய ஐந்து வீரர்களும் அருச்சுனனுக்குப் போர்த்
துணைவராக வந்து வீஷ்மனது பனைக்கொடி மேலும் அவன்
கவசத்தின்மேலும் பாணப்பிரயோகஞ்செய்தனர், அவர்களுள்
அபிமன்னன் அவ்வீஷ்மனுடைய தேரிற்கட்டிய நான்கு குதி
ரைகளையுங் கொன்றான், ஒருபால் சல்லியனும் உத்தரனும் போ
ர்செய்யும்போது சல்லியன் உத்தரனைக் கொல்லத் தன் தம்பி
பட்டமையைச் சிவேத னுணர்ந்து சினந்து அவன் வில்லைப்
பன்னிரண்டு துண்டாகத் துண்டுபடுத்தி எதிர்ந்த வீரரையுங்
கொன்றனன். ஒருபால் வீமன்மேல் இலட்சம் வீரர்கள் வந்து
சூழ அவர்களை மடித்துச் சாத்தகி முதலியோரோடு போர்
செய்யும் துரியோதனன்தேரிற் பூட்டிய குதிரைகளைக்கொன்று
திரிந்தனன், அப்பால் சிவேதன் சல்லியனுக்குத் துணையாக
வந்த வீஷ்மனது வில்லையும் அவன் கொடியையும் கொடிச்
சீலைகளையும் அறுத்துத்தள்ள அவ்வீஷ்மன் வேறொரு வில்
வளைத்துப் போர்க்குவர அவ்வில்லையு மறுத்துத் தேரையும்
அழித்தலால் வீஷ்மன் போர்த்தொழிலைக் கைவிட்டுப் புறங்
கொடுத்தான், அவனுக்குத் துணைவராகவந்த குருராசன் முத
லிய வறுவரையுங் கொன்று போர்க்களத்திற் றிரியத் தேவேந்
திரன் கூறிய அசரீரியால் சிவேதனையெதிர்ந்து உன்றந்தை யா

கிய விராடன் உனக்கு விற்பயிற்சி யொன்றேயொழிய வேறு பயிற்சி கற்பிக்கலனோவென்று புன்னகை யரும்பிக்கூற, நான் வேறுபயிற்சியிலும் வல்லேனென்று உடைவாளுருவிச் செல்ல வீஷ்மன் அவன் தோள்களைத் துண்டுபடுத்தி யவனுயிரைப் போக்கினான் பின்பு சூரிய னத்தமித்தலா லவ்விருவர் சேனைகளும் தத்தம்பாடி வீடு புகுந்தன.

இரண்டாம் நாள் திட்டத்துய்மன் சேனாபதியாய்த் தன் சேனைகளை வியூகம் வகுத்துப் போர்க்களத்துக்குக் கொண்டு வந்தனன், ஒருபால் வீமன் செயத்திரதன் முதலியோர் சேனைகளை வதைத்துத் திரிய, வீஷ்மனுக்குத் துணையாகவந்த திரிகத்தன் முதலியோர் அருச்சுனனை வளைந்து அவன் பாணத்தாலே றுண்டு தத்தம் போர்த்தொழிலை மறந்து திகைத்து நின்றனர், துரியோதனன் அசுவத்தாமன் முதலியோரை யவர்களுக்குத் துணையாகவனுப்பத் தருமன் அருச்சுனனைப் பாதுகாக்க நகுலன் முதலியோரைத் துணையாகவனுப்பினன், ஒருபால் அசுவத்தாமனுங் கடோற்கசனும் போர்செய்யத் துரியோதனன், வீமசேனன் கவசங்கிழிபடப் பிரயோகஞ்செய்து சிங்கநாதஞ்செய்யச் சாத்தகி துரியோதனனோடும் அவன் தம்பிமாரோடும் போர்செய்ய எதிர்ந்தான். அப்போது சூரியனத்தமித்தலால் இருவர் சேனைகளும் தத்தம்பாடி வீடுபுகுந்தன.

மூன்றாம்நாள் இருவர்சேனைகளும் போர்க்களத்தில்வந்து போரிற்றலைப்பட்டன, வீஷ்மன் முதலிய அதிரதர்கள் அருச்சுனனையும் கண்ணமூர்த்தியையும், துரியோதனனும் அவன் தம்பிமாரும் வீமனையுஞ்சூழ்ந்து போர்செய்யக் கடோற்கசன் துரியோதனன்மேல் அம்பெய்து அவன் மூர்ச்சித்து வீழச்செய்ய அபிமன்னு அவன் தேர்ப்பாக னுயிரை வவ்வினன், இச்செய்தி வீஷ்மன்கேட்டுத் துரியோதனனை யெடுத்தணைத்துத் தன் தேர்மே லேற்றி யச்சோகத்தை நீக்கி மிக்க கோபங்கொண்டு வீமனோடு பெரும்போர் செய்து காட்டி லெரிபற்றியதுபோலக் கொன்று எங்குந் திரியாநிற்கக் கண்ணமூர்த்தி யதுகண்டு தேரினின்றிழிந்து பெருங் கோபங்கொண்டு சக்கரத்தை யெடுக்க

அருச்சுனனும் வீஷ்மனும் நோக்கித் தமதுசரணடையக் கோடமாறித் தேரின்மே லேறினர், அருச்சுனனுந் தேரின்மே லேறி யதிசினங்கொண்டு எதிர்ந்த வீரர்களையெல்லாங்கொன்று கோடமாறித் தன்பாடி வீடு புகுந்தனன்.

நாலாநாள் இருவர் சேனையும் போர்க்களத்தில் வந்து நிற்கையில் வீஷ்மர் சேனை வீமன்மேற் சென்று தாக்க அச்சேனைகளைக் கையாற் பிசைந்தும் அள்ளி யெறிந்தும் கொன்று திரியும்போது துரியோதனனோக்கி அவன் வில்லையுங் கவசத்தையு மறுத்துத் தள்ளினன். வீமன் அவன்கொடியை யறுத்து பாரடைத் துணித்தனன், அதுநோக்கி யவன் தம்பிமாரும் சகுனி முதலியோருந் துரியோதனனுக்குத் துணையாகவர. வீமன் துரியோதனன் வில்லையறுத்துந் தேரை யழித்து அவன் மார்புருவப் பாணங்களேவி மூர்ச்சிக்கச் செய்தனன், அவன் தம்பிமார் கண்டு கோபங்கொண்டு போர்செய்ய, அவருள் சேனவிந்துவையுஞ் சுதக்கன்னனையும் பிங்கலனையும் சலாசந்தனையும் வீமவாகுவையும் ஒருபால் வீமன்கொன்று திரிய அருச்சுனன் முதலியோரும் ஒருபால் அவ்வாறே நின்று போர்செய்தலால் வீஷ்மன்சேனை நூறியது, அதுநோக்கிப் பகதத்தன, சேனையை யஞ்சேலென்று தகைந்து யானைச் சேனையோடு போர்க்குவரப் பாண்டவர் அய்யானைப் போர்ச்சேனையை வென்று தம்பாடி வீடு புகுந்தனர்.

ஐந்தாநாள் போர்குறித்து இருவர்சேனைகளும் போர்க்களத்தில் வந்தன, அருச்சுனன் வீஷ்மனோடு போர்செய்யத் தேர்கடாவிச் செல்லும்போது கலிங்கராசர்கள்வந்து தகைந்தனர், அவர்களுதிரத்தில் மூழ்கித்தட்டழிய அருச்சுனன் சரபடலஞ் சிந்துநிலைநோக்கி வீஷ்மன் பாணந் தொடுக்க அருச்சுனன்கோபங்கொண்டு அவன் பிடித்தவில்லும் நாணும் அற்றுவிழப் பாணம் ஏவினன், ஒருபால் வீமனைப் பலவரசர்களுஞ் சூழ்ந்து போர்செய்யவவர்களைப் புறங்கண்டு வீமன் நிற்றலைநோக்கித் துச்சாதனன் முதலியோர் போர்செய்தாற்று தோடுதலைத் துரியோதனன் கண்ணுற்றுக் கவசம்பிளந்து மார்பில்

ழ்க வீமன்மேற் பாணப்பிரயோகஞ்செய்ய. வீமன்கோபி த்துத்துரியோதனன் வலிமைகுலையப் பாணந் தொடுத்தான், அதுநோக்கிப் பூரிசவாவந்து போர்செய்ய வீமனும் போர்செய்தமையா லிவ்விருவர் பக்கலிலுமுள்ள பல அரசர்கள் வீரசுவர்க்கஞ் சென்றனர்கள்.

ஆறுநாள் துரோணாசாரியன் வீமன்மே லம்பெய்ய வீமன் கோபித்து அவன்தேரிற்கட்டிய நான்கு குதிரைகளையுந் தேரையுமழித்துத் துணையாகவந்ததுரியோதனன் முதலியோர் நிலைகெட்டோட அத்துரியோதனன் வில்லைத்துணித்து அவன்மார்பிற் பாணமழுத்தித் தேர் சிதைத்துநிற்க, அருச்சுனன்விகன்னன் வில்லைப்பொடிசெய்ய அபிமன்னு அவன்வீரந்துவசத்தையறுத்துத் தண்டாயுதத்தை விகன்னன் மேலெறிய அவ்விகன்னன் புறங்கொடுத்துந் தன்பாடிவீடு புகுந்தனன்.

ஏழாநாள் அருச்சுனனும் வீஷ்மனும் போர்செய்யும்போது துரியோதனனும் சல்லியனும் அருச்சுனனை நகைந்து போர் செய்தலைநோக்கிக்கடோற்கசன் துரியோதனனையும். துருபதன் சல்லியனையும் நகைந்து திசை செவிடுபடக் கோஷஞ்செய்து பெரும்போர்புரிந்தனர்.

எட்டாநாள் போரில் வீமன், துரியோதனன் தம்பிமாராகிய சுந்தரன் முதலிய எண்மரைக்கொன்று சிங்கநாதஞ்செய்யத் துரியோதனன் தனதுதம்பிமார் மடிந்தமையை யுணர்ந்து கவன்று வீஷ்மன் திருவடிக்கீழடைந்து நாங்கள் பகைவரால் மடிவதோவென்று புலம்ப அன்று நான்சொன்னதைச் சிந்தியாதுபோனாய் முடிவு காறுங்கண்டு கவலாய் என்று கூறுநிற்கும் போது இராவான் போந்து அலம்பசன் சேனையை யழிக்க அலம்பசன் கருடரூபங்கொண்டு அவனைவதைக்க, அப்பொழுது வீமன் துரியோதனன் தம்பிமார்கள் குண்டலபோசன்முதலிய வெழுவரைக் கொன்றனன் இருவர்சேனையுங் கைவாங்கித் தந்தம்பாடி வீடு சென்ற துரியோதனன் பிரலாபித்துக் கன்னன் கூறியவார்த்தையில் சிறிதுமனந்தேறித்துச்சாதனனை வீஷ்மனிடத்து விடுக்க அவ்வீஷ்மனைவணங்கி எங்களுக்கு நன்

மைசெய்யக் கருதுவீராகில் நாளைப்பொழுது புல்லைக் கவ்வவே ண்டுமென்று கூற, அதுகேட்டு நாளைகாறும் என்போர் அது கழிந்தபின் அருச்சுனன் அம்பால் இறக்கின்றேன் அதன்மேல் கன்னனைக் கொண்டரசாள்வீரென்று துச்சாதனனை வீஷ்மன் விடுத்தனன்.

ஒன்பதாநாட்போரில் அரசர்கள் போர்க்களத்தில் நெருங்க வீமசேனன் அலம்பசனைக் கொன்றது கண்டு துரியோதனன் போர்க்கு வரவும் ஒருபால் வீஷ்மனுந் துரோணனும் தரும னோடு போர்புரியவும் பீமார்ச்சுனர்கள் வெகுண்டு அவ்வீஷ்ம னைச் சூழ்ந்துநின்ற அரசர்கள் குழாங்களைக் கொன்றழிந்தனர் கள் அதைப்பார்க்க ஆற்றுதவன்போலச் சூரியனத்தமிக்க இரு வர் சேனையுந் தத்தம்பாடி வீடு சென்றன.

பத்தாநாட் போரில் வேந்தர்கள் போர்க்குநெருங்கி அருச் சுனன் வீஷ்மன்மேல் தேர்நடத்தி அவன்பிடித்த விற்முதலிய வற்றின்மேல் அம்புதொடுக்கவும் பாஞ்சாலர் சூழவும் நெருக்கத் துரியோதனன் துச்சாதனன் முதலிய தம்பிமாரையும் ஏனை யரசர்களையும் அவருக்குத் துணையாகச்செலுத்த வீமன் சென் று அவர்களைக் கொன்று சிதைக்கும் பொழுது சிகண்டி வீஷ் மனை எதிர்த்துப் போர்செய்த காலையில் அருச்சுனனுங் கலந்து அவனைக் கொடிமுதலியவற்றை யறுத்துவீழ்த்திச் சரவருஷம் சிந்த அவற்றால் ஏறுண்டு அச்சரசயனத்தில் வீழ்ந்து உத்தரா யணம் வருமளவும் உயிர்விடே னென்று யோகங்கூடி யிருக் குங் காலையில் பாண்டவர்களும் துரியோதனாதியரும் கலங்கி யழுது தம்பாடி வீடுசென்றனர்கள் அப்பால் துரியோதனன் துரோணாசாரியனுக்குச் சேனைபதிபட்டங் கட்டினான்.

பதினோராநாட் போரில் துரோணன் போர்க்கெழுந்து பாஞ்சாலர்மேற் செல்லவும், ஒருபால் சகுனியோடு சாதேவன் தாக்கி யவனை நிராயுதனாக்கி முதுகுகாணவும், ஒருபால் தரு மன் துரியோதனனோடு எதிர்த்து அவனை நாகபாசத்தாற் கட் டவும், ஒருபால் வீமன் கதாயுதத்தையேந்திச் சேனைகளை நிரவி வரவும் போர் நடக்கும்பொழுது இலக்கண குமாரனோடு அபி

மன்னு எதிர்த்துத் தாக்கும்போது அவனுக்குத் துணையாக வந்த செயத்திரதனை அவன் சிகையைப்பற்றித் தேரினின் றிழுக்கும்போது, அச்செயத்திரதனுக்குத் துணையாகவந்த சல்லியனோடு போர்செய்யுங் காலையில் அந்த அபிமன்னுவுக்குத் துணையாகவந்த பாஞ்சாலன் விராடனுடைய வில் முதலியவற்றை யறுத்து வீழ்த்தி யவர்களைப் புண்படுத்தினான்.

பெருந்தேவனார் பாரதம்.

இது பெருந்தேவனார் பாரதம் எனச் செய்யுட்கிழமையெ ன்னும் பொருட்பிரிநின் கிழமைப்பொருளில்வந்த ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர். பாரதம்-சந்திரகுலத் தரசனாகிய பரதன் மரபிற்பிறந்தவர் பாரதர், அவர்கள் சரித்திரம் கூறுநூலாதலாற் பாரதம்எனக் காரணம் பற்றிவந்த முதனூற் பெயரே வழி நூலாகிய இந்நூற்குங் காரணக்குறியாய் வந்தது. இதனை வடநூலார் தத்திதாந்தபதம் என்பர். இந்நூற் குப்பெயர் பெருந்தேவனார் பாரதம் என்றது அம்மை முதலிய பத்தழகுள் தொன்மை "இடையிடையுரைப்பாவொடு விரவி வந்த பெருந்தேவனார் பாரதம்" எனத் தொல்காப்பியம் பொருளதிகாரத்தில் கூறியிருத்தலால தலைமைபற்றிய வழக்காற் போந்தபெயர். இவ்வழக்கு நோக்கியே வில்லிபுத்தூராழ்வார் பாரதம், நல்லாப்பிள்ளை பாரதம் எனவழங்குதலறிக.

யுத்தபருவம்.

யுத்தம்-போர், பருவம்-கணு. இது பிரிவென்னும் உவமிக்கப்படு பொருள்மேல் நிற்றலால் உவமை யாகுபெயர், ஆகவே முதனூலுட்காரணம் பற்றிவந்த இத்தொடரே வழிநூலாகிய இந்நூலுள்ளும் வருதல் காரணக் குறியென்றறிக, இத் தொடரைப் போரினையுணர்த்திய பிரிவுஎன உருபும் பயனும் உடன் றொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராகக் கொள்க.

பதினோராநாள்யுத்தம்.

பதினொன்றாம்நாளில் நடந்தபோர் - இது தன்னை யுணர்த்துதற்குக் கருவியாகிய படலத்தின்மேல் நிற்றலாற் காரியவாகுபெயர். அன்றித் தன்னையுணர்த்துதற்குத் தானமாகிய படலத்தின்மேல் நிற்றலாய் சானியாகுபெயர் எனினு மமையும்; ஆகவே இந்தொடர் வேற்றுமை மயக்கால் ஐந்து சொல் நான்குசந்தி யாயினும் இடையில்நின்ற ஆம் என்னும் இடைச்சொல் வருமொழியை நோக்கியே யாதலால் நான்கு சொல் மூன்றுசந்தியாகக்கொண்டு முன்னது உம்மைத்தொகை நிலைத்தொடரும், இரண்டாவது இடைச்சொற்றொடரும், மூன்றாவது உருபும் பயனுந் தொக்க ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடரும் என நான்குசொல் மூன்று சந்தியாய் இத்தொடர் படலத்திற்குக் காரணக்குறியாய் வந்தது. பத்து என்னும் நிலைமொழி ஒன்று என்றும் எண்ணுப் பெயரோடு முடியுமிடத்து "ஒன்றுமுதலீரைந்தாயிரங்கோடி" என்னும் சூ-ஆல் இன் சாரியைபெற்றும "எண்ணிறை யளவும்" என்னும் சூ-ஆல் ஈற்றுயிர் மெய்கெட்டு முதல்நீண்டும், "ஒன்றன் புள்ளி" என்னும் சூ-ஆல் னகரமெய் ரகரமெய்யாகத் திரிந்து உகரச்சாரியை பெற்றும் "உயிர்வரின்" என்னும் சூ - இல் "முற்று மற்றொரோவழி" என்றதனால் முற்றியலுகரங் கெட்டும் "எண்மூவெழுத்தீற்றெவ்வகைமொழிக்கு-முன்வரு ஞான மய வக்களியல்பும்" என்றதனால் நாள் யுத்தம் என்னும் புணர்ச்சியில் யகரம் இயல்பும் எனக்கொள்க.

அபிமன்னுவின்செய்கை.

656. கொடியுங்குனிசிலையுங்கோலாளுந்தேரும்
மடியும்படிவாளிவாங்கி—நொடியில்
மலைதுளங்கமண்டுளங்கவான்றுளங்கநெஞ்ச
நிலைதுளங்கவெய்தானெடிது.

(இ-ள்.) மலைதுளங்க-அஷ்டகுலபர்வதங்கள் நிலைகலங்கவும், மண்துளங்க-நிலவுலகிலுள்ளவர் நிலைகலங்கவும், வான்துளங்க

வின்றுலகிலுள்ளவர் நிலைகலங்கவும், செஞ்சய நிலைதுளங்க-(சல்லியன்) பரிசில கலங்கவும், கொடி இல்-ஒருயாத்திரைப் பொழுதில், வாளிவாங்கி - பாணத்தைத்தொடுத்து, கொடி உம் (அச்சல்லியனுடைய) வெற்றித்துவசமும், குனிசிலை உம் (அவன்எய்த) சிலைகளில்லும், கோல்உம்-முட்கோல்பிடித்த சாரதியும், தேர்உம் (அவனேறிய) தேரும், மடியும்படி - அழிய, நெடிதுவாய்ந்தான் அபிமன்னுவின்மைந்து பிரயோகஞ்செய்தான்.

அபிமன்னுவின் அம்பினால் வலிகெட்டுத் தேருஞ்சாரதியும் சிலையுங்கொடியும் அழிந்து புறமிட்டோடிக் காலாளாய் நின்றான் சல்லியன். பலன், வானை இடவாகுபெயர்கள். காரியகாரணப் பொருளில் வந்த துளங்க என்னும் வேறுபலவடுக்கிய வினையெச்சங்கள் எய்தான் என்னும் பிறவினைமுதல் வினைமுற்றின் முதனிலையைப் பற்றிக்கொண்டன. ச-பொது ஈ-று. துளங்க துளங்கு பகுதி, [illegible] அ எச்சவிகுதி, கொடி கால [illegible] பெயர். மடியும்படி [illegible] மடி - பகுதி, [illegible] படி புதியன [illegible] (க)

சல்லியன் செய்கை.

677. [illegible]
[illegible] -திருத்திண்டோட்
[illegible]
[illegible] து.

(இ-ள்.) செரு-போர்க்களத்தில், திண்தேர் ஊர்வானை-திண்ணிய தேரைநடத்தும் பாகனை, தேர்சிதைய நூறி(தனது) தேரோடழிய (அபிமன்னு) பொடிபடுத்த, சித்திரத்தேர் ஆர்ப்ப-சித்திரித்த தேர்வீரர்கள் (ஒருபால்) கோஷிக்கவும், செழும்பொன்கழல் ஆர்ப்ப (தன்காலிற்கட்டிய) இனிய தொழிலமைந்த பொன்னாலாகிய வீரகண்டை (ஒருபால்) ஓலிக்கவும், திருதிண்தோள்-வீரலட்சுமி வசிக்கும் திண்ணிய தோள்களையுடைய, மத்திரத்

த்தார் வேந்தன்-மத்திரநாட்டாரரசனாகிய சல்லியன், மலைந்து-போர்செய்தற்பொருட்டு, பருந்தண்டுகொண்டு-பருத்ததண்டா யுதத்தை யேந்தி, இழியபாய்ந்தான் (நிலத்தில்) இழியப்பாய்ந் துகுதித்தான்.

காலாளாய் நின்றசல்லியன் ஒருபாற் கதாபாணியாய் எதிர் மலைந்தான். நுதி, மலைந்து செயவெனச் சந்திரிபுகள் நூறு, மலைவினைப்பகுதிகள். தேர்பிறிதுபொருளையுணர்த்தி நிற்றலால் விட்ட வாகுபெயர். பருந்தண்டு பருத்தண்டு வலித்தல்விகா ரம். செருதான் நிகழ்தற்கு உரிய தானத்தின் மேல் நிற்றலால் தானியாகுபெயர். (௨)

வீமன் செய்கை.

658. உடற்கண்வெருவ வொளிநெடுந் தோள்வீமன்
தடக்கைமணித்தண்டுதாக்க—மிடற்கண்
மடங்காப்போர்மால்யானை மத்திரத்தார்வேந்தன்
துளங்காப்போய் வீழ்ந்தான்சளித்து.

(இ-ள்.) ஒளிநெடுந் தோள்வீமன் (அபிமன்னு மேற்சென்ற சல்லியன் எதிர்ந்தவீமன்மேற்செல்ல) ஒளிவாய்ந்த நீண்டதோ ளையுடையவீமன், உடல்கண் (அச்சல்லியனது) உடம்பில், வெருவ (கண்டோர்) அஞ்ச, தடக்கை-தனது நீண்டகையில் ஏந்திய, மணிதண்டுதாக்க - பூண்கட்டியகதையா லடிக்க, மிடல்கண் - (போர்செய்யும்) வலிமையில், மடங்காத - சிறிதும் தளராத, போர்மால்யானை-போர்த் தொழிலையுமத மயக்கத்தையுமுடைய யானைச்சேனையையுடைய, மத்திரத் தார்வேந்தன் - மத்திரநாட் டாரரசனாகிய சல்லியன், சளித்து (உயிர்நிலை) தடுமாறி, துள ங்காபோய்-மெய்சோர்ந்துபோய், வீழ்ந்தான் (நிலத்தில்) விழு ந்தான்.

இவ்வகை யபிமன்னு மேற்சென்ற மத்திரராசன் சல்லியன் மணித் தண்டு பிடித்து வீமசேனன் மேலோடி மலைய, அவ்வீம சேனன்கதாயுதத்தால்மொத்துண்டுமயங்கிவிழ்ந்தனன், அவனை க்கிருதபன்மாகண்டு கடிது சென்று கைக்கொண்டு போக்களங் கழியக்கொண்டு போகலுற்றான், அதுகண்டு துரியோதனன்

சேனை நிலையாற்றுதிரிந்திட்டது. மடங்கா, ஈறுகெட்டஎதிர்மறைப்பெயரெச்சம். போரென்னுந்தொழிற்பெயரையும், துளங்கா செய்யா என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சத்தையுங் கொண்டன. சுளிந்து இறந்தகால வினையெச்சம் சுளிவினைப்பகுதி. த் சந்தி, ந் இறந்தகாலவிடைநிலை, உ எச்சவிகுதி. துளங்கு-பகுதி, உகரங்கேட்சந்தி, ஆ வினையெச்சவிகுதி. (௩)

சூரியன் அத்தமித்தல்.

659. முடியுமுரசுமிடறித்தன்றாளால்
அடருமினமாவோடாங்கெய்தி-அடியிற்றிண்
கைஞ்ஞாகம்புக்கவிடக்காய்ந்திரோன்காணுன்போல்
மைஞ்ஞாகம் புக்கான் மறைந்து.

(இ-ள்.) காய்கதிரோன்-சுட்டுவருத்துங் கிரணத்தையுடைய சூரியன், தன்றாள் ஆல் - தனது கால்களால், முடியும்(அற்றுவீழ்ந்துருளிய) அரசர் மருடங்களையும், முரசும் (கிழிபட்டுக்குவிந்த) முரசங்களையும், இடறி அடரும் இனமா ஓடு (தனது தேரிற்பூட்டிய) நெருங்கியநம்முளொத்த ஏழுகுதிரைகளோடு ஆங்குஎய்தி-அப்போர்க்களத்தையடைந்து, அடியில் - முதலில் திண்-வலிய, கைஞாகம் - துதிக்கையையுடைய யானைமுதலிய இருதிறந்துச் சதுரங்கசேனைகளும், புக்கு அவிய (போர்க்களத்தில்) சென்றுமடிய, காணுன்போல (அதனை) கண்டஞ்சினவனைப்போல, மைஞாகம் - கரிய அஸ்தமனகிரியில், மறைந்து புக்கான்-மறைந்தொழிந்தான்.

இருதிறத்துச் சேனுவீரர்கள் மறந்தொழில்களையும் கண்டஞ்சினன்போல் என்றார். இவ்வகை தேருமாவுங்களிறீட்டமுங் களத்த வியக்கண்டு காந்தமைந்த ஆதித்தனும் பகலுழிகை சுருக்குவித்து அந்தமன பர்வதஞ் சென்றடைந்தான், அப்பொழுதிரண்டுபடைவீரர்களுங் கைவாங்கித்தத்தம்பாடி வீடு புகுந்தாராக. கைஞ்ஞாகம் கூறுது ஒழிந்த ஏனைகுதிரை தேர்பதாதி முதலியதன் இனத்தைகொண்டது -ந- பொது "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே" என்ற -சூ- ஆல். வருமொழி முதல் மெல்லெழுத்து ஐகாரத்தின் கீழ்மிகுதல் - ஷை - உயி "எண்

மூவெழுத்தீற்று" என்னுஞ் - சூ - இல் "ஐந்தொடுமுன் வலி மிகலுமாம்" என்றதனால். ஞகரயகரந் திரிதல் ஞெகிழ எழுத்து "ஐகான்யவ்வழி" என்ற சூ - ஆல். (௪)

துரியோதனன் பாசறை புகுதல்.

660. கைவிளக்கெங்கும் மலர்ந்தெரியக் கவரியிலா
மெய்விளக்கும் பூணருடன் மேவிப்-பொய்யில்
பொருந்தார் படையிரியப் போர்பண்டைப் போந்
திருந்தானப் போர்வேந்தனன்று.

(இ-ள்.) அப்போர்வேந்தன் - அந்தப் போர்த் தொழிலையுடைய துரியோதனன். கைவிளக்கு - கையிலேந்திய விளக்குகள், எங்கும் மலர்ந்தெரிய - இருபக்கமும் மிகுந்து ஒளிவீச, கவரியிலா ... பல் - நிரந்தரமாக இறைந்து மின்னாநிற்ப, மெய்விளக்கும் - தம்முடைய உடம்பு விளங்கச்செய்யும், பூணருடன் - ஆபரணங்களையணிந்த அரசர்களோடு, மேவி - கலந்து, பொய்யில் - பொய்மையையுடைய, பொருந்தார் - பகைவர் ... படையுடைய, படை இரிய - சேனைகள் (பாண்டவர்படை) புறங்கொடுக்க, போர் பண்டைப் போந்து - போர்த் தொழில் புரிந்த (போர்ப்பாசறையாகிய) பாசறையிடத்திற் சென்று, அன்று அன்றிரவு ... இருந்தனன்.

துரியோதனனும் போர் அற்றையிராத்திரியில் கண்ணுறக்கம் கொள்ளாது காட்டப்படாத மன்னரோடு நாலும் ... இருபக்கமும் இருபதினாயிரங் கைவிளக்கொளிர்ந்து பிரகாசஞ் செய்யத் தனதுபாடிவீடாகிய போர்ப்பாசறைக்கிருந்து தான் பட்ட பரிபவமும் தன்படைபட்ட மயக்கமும் நினைந்து கண் துயிலாது நொந்து இருந்தனன். மலர்ந்து என்னும் இறந்தகால வினையெச்சத்தின் முதனிலையையும், அவ்வெச்சம் போந்து என்னும் வினையெச்சத்தின் முதனிலையும், அவ்வெச்சம் இருந்தான் என்னும் வினைமுற்றையுங் கொண்டன. போந்து இறந்தகால வினையெச்சம் புகு பகுதி, ஈறுகெட்டு உகரம் ஓகாரமாய்த்திரிந்து நின்ற போ பகுதி, ந் சந்தி, த் இடைநிலை, உ எச்சவிகுதி. (௫)

துரியோதனன் துரோணனை நோக்கிக்கூறல்.

661. வீமன்வலியும்விசயன்பெருந்திறலும்
நாமொழியுமன்றேதனிச்சிலையோய் - ஏமுனைக்கு
நாயகமேநன்குடிக்குங்காரணனேயென்றனக்குத்
தாயகனைப்பற்றிநீதா.

(இ-ள்.) வீமன் வலிஉம்-வீமசேனனுடைய வலிமையும், விசயன -அருச்சுனனுடைய, பெருந்திறல்உம் -பெரியவலிமையும், நாம்மொழியும் அன்றே - நாமே (தருமனுக்கு மகுடஞ் சூட்டுதும்) கூறுமல்லவா, தனிசிலை யோய் -ஒப்பில்லாத வில்லையுடையவனே, ஏ-அஸ்திரபிரயோகஞ்செய்யும், முனைக்கு-போர்க்கு, நாயகமே - தலைவனே, நன்குடிக்குக்காரணனே - எனது நல்ல குடிமை யைப் பாதுகாத்தற்குக் காரணமாயுள்ளவனே-என்றனக்கு நாயகனை - எனக்குத் தாயாதியாயுள்ள தருமனை, நீபற்றி-தா-நீபிடித்துக்கொடு, (என்று குறையிரந்தான்.)

வீமன் போர்செய்தலும் அருச்சுனன் போர்செய்தலும் என் அரசைக் கவர்ந்து தம் மூத்தோனுக்குக் கொடுப்பதற் கல்லவா என்பான் குணகுணிக்கு ஒற்றுமை யுண்மையால் குணியினைக் குணத்தின்மேலேற்றி வீமன் வலியும் விசயன் பெருந் திறலும் நாமொழியு மன்றே எனவும், தருமனைச் சிறைப்படுத்தினாற் போராழியும் என்பான்பற்றி நீதா எனவுங் கூறினன். போர்முனையிற் கூற்றமன்ன வீமனும்அருச்சுனனும் பொருகின்றது தருமபுத்திரன் இராச்சியஞ் செய்வித்தற் பொருட்டல்லவா மற்றவனை நின் சாவசத்தியெல்லாங் கொண்டு சீவக்கிராணஞ்செய்து தருவாயாக வெனத் துரியோதனன் கூறினன். விசயன் வெற்றியையுடையவன். வீமசேனன் நடுக்கஞ்செய்யுஞ் சேனையை யுடையவன். பின்மொழி கெட்டு முன்மொழியே பொருளைத்தந்தது இதனை வடநூலார் நாமைகதேசநாமக்கிரகணமென்பார். (க)

துரோணன் கூறல்.

662. வெலற்கரியவெஞ்சமத்துவிண்ணவர்கோன்றன்னை
மலைக்குந்துணைபெறினுமாட்டேன்—முனைக்கண்
உருமனையான்மாமனுயிர்த்துணையா நிற்கத்
தருமனையான்பற்றித்தர.

(இ - ள்) வெலற்குஅரிய வெஞ்சமத்து. (பாண்டவர்களுடைய) வெல்லுதற்குஅரிய கொடியபோரில, விண்ணவர்கோன் தன்னை-தேவர்களுக்கு அரசனாகிய இந்திரனை, பலகலும் துணை-ஒத்ததுணைவரை, பெறின் உம்-(யான்) பெற்றாலும், முனைகண்-போரில், உருமஅனையான் - இடிபோன்றவனாகிய அருச்சுனனும், மாருதகுமாரனும், ... உயிர்த்துணையாகநிற்க,(போர்முகத்து) உயிர் துணைவராக ... முன்னும் பின்னுமாகி நிற்க, தருமன் ஐ-தருமனை, யான் பற்றிநாமாட்டேன்-நான் கவர்ந்துகொடுக்க வலிமையுடையவனல்லேன் (என்று துரோணன் கூறினான்)

தேவருங் காணற்கரிய ஸ்ரீவாசுதேவனும, தேவேந்திரன் திவ்வியாஸ் திரசதிரங் களிற் ... ஆகிய அருச்சுனனும் துணையாக நிற்கத் தருமபுத்திரனைச் சமாபூமியிற பற்றித் தருவேன் என்பது தேவராசருக்கும் அரிதாதல பற்றுவரை நாலுநாழிகை யென்னருகு வாராமற் றடுக்க வல்லாருண்டாயில் தருமபுத்திரனைப் ... தருவேன் என்று துரோணன்சொல்ல அதனைக் கேட்டு வெலற்கு ... யெச்சம்வெல்பகுதி அல்சாரியை, லகாம் ... திரிதல் சந்தி, ... எச்ச விகுதி. இந்த எச்சம அரிய எனனுங் குறிப்பு வினைப் பெயரெச்சத்தின் முதனிலை கொண்டது அருமை ..., ... உம் உகரம் இகரமாகத்திரிதலும் யகரத் தோற்றமும் சந்தி, அபெயரெச்ச விகுதி. இப்பகுதி இனமை பேசியது. பலக்கும் உவம வுருபிடைச் சொல்லடியாகப பிறந்தபெயரொச்சம் பலைடகுதி, கு சாரியை, ககரத்தோற்றமும் உகரகேடுஞ்சந்தி, உம் எச்ச விகுதி. வீமன் என்றமையால் அருச்சுனனையும் உபலக்கணமாகக்கொள்க.

உரைப்பா.

திரிகத்தனும் சஞ்சத்தகரும் பிரதிக்கினை கூறல்.

663. கடவுட்குரங்கின்கொடித்தேர் ந்தானைத் - தொலையாவூக்கத்
தடுபோர்விசயனை - அமர்க்களங்கழியவரைகூவித் - தரும
னுஞ்சேனையுந் தனிப்பட்டவனொடு - போர்புரிந் தெல்லாம்
பொன்றுதலன்றி - மற்றவன்றன்னை வானகத்துய்த்தல் -

நாளையிவ்விரண்டி லொன்றொழிதுமாகில் - மேயமணமா
லையைக் கைமிசைகொண்டு-முடிமிசைச்சூட்டி - யடியிணை
வருடி - அகிலமனைக்கிழத்தியைப்பிறரொடுங்கண்டு - பின்
னவர்கையாற்பெய்தூணும்பேதையும் - மற்றதுவொழிந்து
வன்செருவதனில் - உற்றுறுபூசலி லுறங்கிமுன்னின்ற -
குருக்களைக்கொன்றகொடியவோர்பாவியும் - அறிவிலியர
சனணிமனைக்கிழத்தியைப் - குறியலரசன்கொண்டுடன்
போகக் - கேட்டிருந்தவோர் கெடுபுகழ்வேந்தனும் - இவ்வ
கையிவரிவரிற்றிநரகம் - புக்குழிநாங்கள் புகழ்த்தோழி
ஞர் - மிக்கதேர்வேந்தர் விரைந்தவர்முன்னென.

(இ-ள்.) கடவுள்-தெய்வத்தன்மையையுடைய, குரங்குஇன் கொடி - வானரத்துவசம் நாட்டிய, தேர் - தேரையும், தானை - சதுரங்கசேனையையும் (உடையவனாகி), தொலையாஊக்கத்து - சிறிதுந்தளராத மனவலியையோடு, போர்அடு - போர்முகத்தில் (பகைவரை) மாய்க்கும், விசயனை - அருச்சுனனை, அமர்க்களம்கழிய - போர்க்களத்தில் (தருமபுத்திரனின்று) நீங்க, அறைகூவி - போர்க்குவரித்து, தருமன்உய்சேனைஉடன்தனிப்பட்டு- (வீமார்ச்சுனர்களின்றி) தருமனுஞ்சேனைகளுந்தனித்தொழிய அவனொடு - அந்த அருச்சுனனோடு, நாளை - நாளைக்கு, போர்புரிந்து - சண்டைசெய்து, எல்லாம்பொன்றுதல்-(யாங்கள்) எல்லாமழிதலும், அன்றி - அல்லாமல், அவன்தன்னை - அந்தஅருச்சுனனை, வான்அகத்துஉய்த்தல் - வீரசுவர்க்கத்திற்குச் செலுத்துதலுமாகிய, இஇரண்டில்ஒன்று - இந்தஇரண்டில் ஒன்றையேனும், ஒழிதும்ஆகில் - செய்யாதொழிவோமானால், மணம்மேய மாலைஐ - வாசம்பொருந்தியமலர்மாலையை, கைமிசைகொண்டு- (தமது) கையிலேந்தி, முடிமிசைசூட்டி - (பகையரசர்) கிரீடத்திற்சூட்டி, அடியிணைவருடி - (அவர்களுடைய) இரண்டு பாதங்களையும் (தமது மெல்லியவிரல்களால்) பரிசித்து, அகிலம்மனைக்கிழத்திஐ - (தமது வாழ்க்கைக் குரிய) நிலமகளை, பிறர்ஓடுஉம் கண்டு - அயலாராகிய அப்பகையரசரிடத்துங் கண்டு, பின் - பின்பு, அவர் கைஆல் பெய்தது உண்ணும் - அப்பகையரசர்

கள் தமது கைகளாலிட்ட வுணவை யுண்டு சீவிக்கும், பேதை உம் - அறிவில்லாதவனும், அதுஒழிந்து - அதுவொழிய, வல்செரு அரண் இல் - வலிய போர்க்களத்தில், உற்றுஉறு பூசல்இல் - பொருந்திநடக்கும் போரில். உழக்கி - முறைமுறைநடந்து, முன்னின்ற - முன்னேநின்ற, குருக்களைகொன்ற - ஆசிரியனைக்கொன்ற, கொடியஓர்பாவிஉம் - கொடியவொரு பாவியும், அறிவிலி அரசன் - பேதைமையையுடையவொருவரசன், அணிமனைக்கிழத்திஐ- (தனது) அழகிய இல்வாழ்க்கைக்குரிய குலமகளை, குறியலன் அரசன் - தனக்குமாற்றானாகிய பகையரசன், கொண்டு உடன் போக - கவர்ந்து விரைந்து செல்ல, கேட்டு இருந்த - கண்டுங் கேட்டும் வாளாவிருந்த, ஓர்கெடுபுகழ் வேந்தன்உம்-அபகீர்த்தியையுடைய ஓர் அரசனும், இவ்வகை - இவ்வகையாக, இவர் இவர் - இந்த அரசர்கள், இழிந்திடும் நரகம் - அழிவுமிக்க நரகத்தினில், புக்கஉழி - புகுந்த நரகத்தில், நாங்கள் என - நாங்களும் புகுவோமென்று, மிக்கதேர்வேந்தர் - (அலங்காரம்) மிகுந்த தேரையுடைய திரிகர்த்தரும் சஞ்சத்தகரும், விரைந்து - (ஏனையரசர்களுக்கு) முற்பட்டு, அவன்முன் - அத்துரியோதனன்முன், புகழ்ந்து - (நம்மை) புகழ்ந்து, ஓதினார் - பிரதிக்கினை செய்தார்கள்.

திரிகர்த்தராசனும் சஞ்சத்தகரும் பிரதிக்கினைபண்ணனைக் கேட்டுத் துரியோதனனு மனமகிழ்ந்து மற்றவர்க்குஞ் சபதஞ்செய்ய தாங்கவர்க்கு விடைகொடுத்துத் தானுந்தன் கோயிற்புகுந்தான். உய்த்தல் தொழிற்பெயர் உய் பகுதி, தகரமெய் சந்தி, தல் தொழிற்பெயர் விகுதி. வருடி இறந்தகாலவினையெச்சம் வருடு (தடவல்) பகுதி, இ எச்சவிகுதி. பட்டு ஒழிந்து செயவெனெச்சத்திரிபுகள். ஒழிதும் தன்மைப்பன்மை எதிர்காலவினைமுற்று ஒழி பகுதி, தும் தன்மைப்பன்மைவிகுதி, புக்கஈறுகெட்ட இறந்தகாலப் பெயரெச்சம் புகு பகுதி, முதனிலை யெழுத்தாய்த் தோன்றிய ககரமெய் இறந்தகால இடைநிலை, உகரக்கேடு சந்தி, அ எச்சவிகுதி. பெய்துறும் தொகுத்தல்விகாரம். (அ)

மூற்றிற்று.

பன்னிரண்டாநாள்யுத்தம்.

இச்செய்யுள் நான்குசீரடியாகக் கொண்டு முன்னைக்கூறிய விதிமொழிகள். பத்து இரண்டு ஒருமொழி இரண்டு என்னும் எண் வரிசையில் மொழியீற்றுயிர் மெய்கெட்டுத் தகரம் னகரமாய்த் திரிகின்றமையின் பெற்றது ஆதலால் னகரமெய் யிரட்டித்துப் பன்னிரண்டு எனநின்றன. ந உயிர் - ச அ - கு - ஆலும், பெற். மெய் - உ - கு - ஆலும் உணர்க.

கடவுள்வாழ்த்து.

664. அந்தரத்தில்வானவருந்தானவரும்பாதிரைநீர்ச்
சிந்தமுதங்கொண்டமுதஞ்செய்தந்நாள்- மந்தரத்தோன்
சேரார்முதுகைச்செறியத்துகிலுவந்த
காராண்மையார்நமக்கோர்காப்பு.

(இ-ள்.) அந்தரத்தில் - விண்ணுலகிலுள்ள, வானவர் உம் - தேவர்களாலும், தானவர் உம் - அசுரராலும், பாதிரைநீர்சிந்து - பெரியஅலையையுடைய கடலில், அமுதங்கொண்ட - இனிமை பொருந்திய, அமுதம் செய்து - அமுதம் தோன்றச்செய்து, அந்நாள் - (துரியோதனன் சகுனியோடு சூதாடித்தோற்ற) அக் காலையில், மந்தரத்தோன் - மந்தரகிரியையொத்த தோளையுடைய சேரார் - (துகிலுரிந்த) பகைவருடைய, முதுகைசெறிய (பாவத்தில்) மூத்தகைகளிற்கிரிய, துகில்உவந்த (திரௌபதிக்கு) ஆடைவளரத் தந்தருளிய, கார் ஆண்மையார் - மேகம்போல வுதவிசெய்தருளிய கண்ணமூர்த்தி, நமக்கு ஓர்காப்பு - நமக்கும் ஓர் காவலாவார்.

குறைபாடுடையோர்க்குக் குறைபாடொழிய அமுதுந் துகிலுந் தந்தருளினவ ராதலால் குறைபாடுடைய நமதுகுறையையும் ஒழிப்பார் என்பார் காராண்மையார் நமக்கோர் காப்பு என்றார். காப்பு என்னுந் தொழிற்பெயர் வினைமுற்றுப்பொருளில் வந்தது "கங்கையாளீன்கழலான்காப்பு" என்ற பெரியோர் கூற்றானுணர்க. உவந்த இறந்தகாலப் பெயரெச்சம் உவ பகுதி, ந் சந்தி, த் காலமெய் இடைநிலை, அ எச்சவிகுதி.*

கொண்ட என்னும் இறந்தகாலப் பெயரெச்சத்தின் அகரம் கெடுதல். (௬)

சூரியன் உதயஞ்செய்தல்.

665. தேனடைந்தகோதைத்திருவனையார்தம்மோடும்
ஊனடைந்தவேலாருணர்ந்தெழவே—வானின்மேற்
கானடந்தவெய்யோன்களையிருளைக்கையகற்றித்
தேனடந்துகாட்டினான்சென்று.

(இ-ள்.) தேன் அடைந்த (மதுஉண்ண) வண்டுகள் நெருங்கிய, கோதை (மலரணிந்த) கூந்தலையுடைய, திருஅனையார்தம் ஓடும் - இலட்சுமியையொத்த தத்த மனைவியரோடும், ஊன் அடைந்த (பகைவர்) ஊன்செறிந்த, வேலார் - வேலை ஏந்திய அரசர்கள், உணர்ந்து எழ - நித்திரை தெளிந்து போர்செய்தற்குஎழ, வான்இல் - ஆகாயத்திலின்று, மேற்குகால் நடந்த வெய்யோன்-மேற்றிசையை நோக்கிச்சென் றத்த மனத்துற்ற சூரியன், சென்று (உதயகிரியை) அடைந்து, தேன்நடந்து - தேன்போல இனிமையுண்டாக உதயஞ்செய்து, களை இருளை - நிறைந்தஇருளை, கைஅகற்றி (சனதுகிரணங்களாகிய) கைகளாலோட்டி, காட்டினான் (கண்களுக்குப்புலப்படாத பொருள்கள் புலப்பட யாவருக்கும்) விளக்கினான்.

இவ்வகை ஆதித்தன் உதயஞ்செய்யக் கண்டு தானும் பள்ளியுணர்ந்து புறப்பட்டுத் தன் படைத்தலைவரை நோக்கி யாது சொன்னான் துரியோதனன். நீக்கப்பொருளில்வந்த இன் என்னும் ஐந்தனுருபு, நடந்த என்னும் பெயரெச்சத்தின் முதனிலையோடு முடிந்தது. மேற்கு என்னும்திசை கால் என்னும் பிற பெயரோடு புணருமிடத்து ஈற்றுயிர்மெய்கெட்டு றகரம் லகரமாகத்திரிந்து. ந-உயி. ௩௬௯ சூ-ஆல். தங்கள் தங்களுக்கு உரிய தொழில்களை யுயிர்க்கூட்டங்கள் நடத்தற்கு உரியபோது பகற்போது ஆதலால் தேன் எனவும், உதயஞ்செய்தல் என்னும் பொருள் நிகழ்ச்சிதோன்ற நடந்து என்னுந் தொழிலால் உபசரித்துங் கூறினர். கானடைந்து, தேனடைந்து எனவும்பாடம்.

துரியோதனன் கூறல்.

பண்ணுமின்கள்சேனையெல்லாம் பாய்பரியும்பொற்றேரும்
நண்ணுமின்கள்கார்க்களிறுநாற்றிசையும்—விண்ணின்ற
தானவருமஞ்சப்பிடிப்பன்றருடனையான்
வானவரும்போய்க்காமின் மற்று.

(இ-ள்.) சேனை எல்லாம - சேனைகளையெல்லாம், பண்ணுமின்கள் - அணிவகுங்கள், பாய்பரிஉம் - பாய்ந்துசெல்லுங் குதிரைவீரர்களும், பொன்தேர்உம் - பொன்னாலாகிய தேர்வீரரும், கார்களிறுஉம் - பெரியயானைவீரரும், நான்குதிசைஉம் - நான்குதிசைகளிலும் - நண்ணுமின்கள் - சூழ்ந்துசெல்லுங்கள், விண்நின்ற - வானில்கூடிநின்ற, தானவர் உம் அஞ்ச - அசுரரும் அஞ்ச, தருடன் ஐ யானபிடிப்பன்-தருமபுத்திரனை யான்பிடிப்பேன், வானவர்உம் (அவனுக்கு உதவிசெய்பவரும்) தேவர்களும் (அஞ்ச) போய்காமின் -சென்றுபாதுகாத்தலைச் செய்யுங்கள் என்று (துரியோதனன் கூறினான்)

அசுரர் செய்யுங் கொடும்போரினும் யான் செய்யும் போர் கொடும்போர் என்பான் தானவரும் அஞ்ச என்றான். இவ்வகையார் வேந்தன் துரியோதனன் சொல்லைக்கேட்டுப் பெரும் படையுஞ் சஞ்சத்தகரும் நாராயண கோபாலரும் ஆர்த்தெழுந்து கருத்துவசம் விசும்படைவ யானை தேர் குதிரை மருவிக் காலாளுடன் போய் யாது செய்தாரோவெனில். பரி, தேர், களிறுதம் பொருளைவிடாது வீரர்கள்போல் நிற்றலால் விடாத ஆகுபெயர்கள். உம்மை உயர்வுசிறப்புப் பொருட்டு. பண்ணுமின்கள் நண்ணுமின்கள் காமின் முன்னிலைப் பன்மையேவல் வினைமுற்றுகள். பண்ணு பகுதி, மின் முன்னிலைப்பன்மை யேவல் விகுதி, கள் விகுதிமேல் விகுதி. காமின் கா பகுதி மின் முன்னிலைப் பன்மையேவல் விகுதி. நாற்றிசையும் என்பதன் இறுதியில் நின்ற உம்மைமுற்று. (கக)

திரிகத்தனும் சஞ்சத்தகரும் நாராயண கோபாலரும் அருச்சுனனைப் போர்க்கு அழைத்தல்.

667. சோதிவிளக்கெரிமுன்சூழ்சபையிற்சூளுற்ற
ஏதிப்படைவேந்தரெல்லாரும்—நீதி

நிறைகூவிக்கொள்ளுநிரைமலர்த்தார்ப்பார்த்தற்
கறைகூவிப்போயினாராங்கு.

(இ-ள்.) சோதி-ஒளியையுடைய, விளக்கு எரிமுன் சூழ்ச
பை இல்-கைவிளக்குகள் முன்னேருழ்ந்த துரியோதனன் சபை
யில், சூளுற்ற-சபதங்கூறிய, ஏடுடை-- ஆயுதங்களையேந்திய,
வேந்தார்எல்லாரஉம்-திரிகத்தன்முதலிய அரசர்கள்எல்லாரும்,
நீதிநிறை-நீதியாகியநிறையை, கூவிக்கொள்ளும்-கூவி (தனக்
கே) யுரிமையாகக்கொள்ளும், நிரைமலர்தார்-ஒழுங்குபட மல
ரார்தொடுத்த மாலையையணிந்த, பார்த்தற்கு - அருச்சுனனை,
அறைகூவி-போர்க்கழைக்க, ஆங்குபோயினார்-அப்போர்க்களத்
திற் சென்றார்கள்.

திரிகத்தராசனும் சஞ்சத்தகரோடு பதினாயிர நாராயணகோ
பாலரும் வந்து அருச்சுனனை யறைகூவியார்ப்பரவம்பண்ணக்
கண்டு உக்கிரவேகத்துடன் மற்றவர்மேற் செல்லலுற்ற அருச்
சுனனை. நிறை தம்மனத்தைநிறுத்துதல் நிறுபகுதி, உகரக்கேடு
சந்தி, ஐ தொழிற் பெயர் விகுதி. பார்த்தன் பிரதையின் புத்
திரன் பார்த்தன் தத்திதாந்தபதம். கு உருபுமயக்கம். அறை
கூவி செயவெனெச்சத்திரிபு. (கஉ)

தருமன் தடுத்துக்கூறல்.

668. ஆர்தமக்குவேறேயறைகூவிப்போயினார்
கூரிலைவேற்பார்த்தகுறித்துரைத்தார்-ஏதிலர்முன்
சீராருந்திண்டோட்டிரிகத்தர்தம்மோடு
நாராயணன்மக்கணன்கு.

(இ-ள்.) கூர்இலைவேல் - கூரியதகட்டுவடிவாகியவேலை(ஏந்
திய)பார்த்த - அருச்சுநனே, ஏதிலர்முன் - பகைவர் செய்யும்
போர்முகத்தில், சீர்ஆரும் - வெற்றிச்சிறப்புவாய்ந்த, திண்தோ
ள் - திண்ணிய தோள்களையுடைய, திரிகத்தர்தம்ஓடு - திரிகத்
தரோடு, நாராயணன்மக்கள் - நாராயணகோபாலர்கள், நன்கு-
மிகவும், வேறேஆர்தமக்கு - வேறேயாரை, அறைகூவிபோயி
னார் - அறைகூவிச் சென்றார்கள், குறித்துஉரைத்தார் - உன்னை

க்குறித்தே யறைகூவினர்கள், (என்றறியென்று தருமன் கூறினன்).

பார்த்த விளிவேற்றுமை - ந பெயர்-ஞ0 - சூ-யார் என்னும் வினைப்பெயரின் முதல்நின்ற யகரமெய் கெடுதல் புணர்ச்சியில் விகாரம். கு உருபுமயக்கம். ஏதிலர் பகைவர் ஏதில் (அந்நியம்) அர் பலர்பால் விகுதி. (கஙு)

இதுவும் அது.

669. கலங்காமணித்திண்டேர்காற்கதிபோலின்று
விலங்கெழுநீயோட்டிவினையல்-நலந்திகழுஞ்
சந்துலங்கொள்கைத்தோட்டனஞ்செயனேயிங்குடன்று
வந்தவர்களென்றான்மதித்து.

(இ-ள்.) வில்அங்குஎழும் நீ-வில்லோடு அவரிடத்துப்போர்க்கு எழும்நீ, (நின்னை யறைகூவினொன்று) கலங்காத-நிலைகலங்காத, மணி-மணிகட்டிய, திண்தேர் - திண்ணியதேரை, கால்கதிபோல் - வாயுகதிபோல, இன்று ஓட்டி - இப்பொழுதுஓட்டி-(செல்ல)வினையல் - அவசரப்படாதே, நலம்திகழும் - மணநலத்தால் விளங்குகின்ற, சந்து - சந்தனப்பூச்சையுடைய, உலம்கொள - திரண்டகல்லையொத்த, கைதோள் - புயங்களையுடைய, தனஞ்செயனே - அருச்சுனனே, இங்கு - என்னுடன், உடன்று - போர்செய்ய, வந்தவர்கள் - வந்தவர்களாம், என்றான்மதித்து - என்றுலோசித்துத் தருமன்கூறினன்.

திரிகர்த்தராசன் முதலிய சஞ்சத்தகரும் வந்தறைகூவினரிதற்கு நீ விரைந்துபோவாயல்லை வந்தபடி கேட்பாயாகென்று பின்னும் தருமபுத்திரன் யாதுகூறுகின்றான். தனஞ்செயன் வெற்றியே பொருளாகவுடையவன். கைத்தோளோ டொற்றுமையுண்மையால் கைத்தோள் என்றார். அங்கு படர்க்கையிலும், இங்கு தன்மையிலும் வந்தன. உடன்று செயவெனெச்சத்திரிபு, உடல் பகுதி, லகரம் னகரமாகத்திரிதல் சந்தி, றகரமெய் இறந்தகால விடைநிலை, உ எச்சவிகுதி. வினையல் முன்னிலையொருமை யெதிர்மறையேவல் வினைமுற்று. வினை பகுதி, அல் எதிர்மறையேவல் விகுதி, யகரத்தோற்றம் சந்தி. அன்றி அல்

விகுதி எதிர்மறை வியங்கோள் வினைமுற்று விகுதியெனக் கொண்டு விளையற்க எனப் பொருள்கொள்ளினும் அமையும் " மகனெனன் மக்கட்பதடியெனல்" என்பதனால் உணர்க (கச)

இதுவும் அது.

670. நின்னைப்பிரிவித்து நின்றாரைக்கையகற்றி
என்னைப்பிடிப்பதனுக்கெண்ணினான் — என்னைப்
பிடியாதுகாவாயேற்பேரெழிலானம்புக்
கெதிராகியார்மலைவாரின்று.

(இ-ள்) நின்னை - உன்னை, பிரிவித்து - (என்னினின்றும்)பிரியச்செய்து, நின்றாரை - துணையாகநின்ற வீமன்முதலியோரை, கை அகற்றி - தூரத்திற்செலுத்தி, என்னைபிடிப்பதற்கு - என்னைக் கைபபிடியாகப் பிடிப்பதற்கு, எண்ணினன (துரியோதனன்) நினைந்தான், எனஐபிரியாது காவாயேல் - என்னினின்றும் நீபிரியாது காக்காமலொழிந்தால், பேர்எழிலான் - (வலிமையில்) பெருந்தோற்றத்தையுடைய துரோணன் (எய்யும், அம்புக்கு - பாணத்துக்கு, இன்று - இப்பொழுது, எதிர் ஆகிமலைவார்யார் - எதிர்நின்று போர்செய்வாரெவர், (என்று தருமன் கூறினான்)

சஞ்சத்தகரறை கூவக்கேட்டு நீ யவர்கள்மேற் போயினபொழுதுனனைச் சமரபூமியிற் கழியக்கொண்டு போயினபின் தங்கள் சதுரங்கபலத்தோடுஞ் சாபசத்தியெல்லாங் கொண்டு, தானைவெள்ளத்தைத் தளர்வித் தென்னைப் பிடித்துத் துரியோதனன்கையிற் காட்டிக் கொடுப்பானாகத் துரோணாசாரிய னொருப்பட்டானென்று ஒற்றர்கள் சொல்லக்கேட்டேனாதலால், அவன்கோபாக்கினி யாற்றவல்லார் நின்னையல்லதுயாவருமில்லை, நீயின்றென்னைப் பிரிந்தாலிப்பொழுதே வந்தமராடி யென்னைப் பிடிப்பதற்குப் பிரமாதம் விளைவதற்குச் சந்தேகமில்லையென்று தருமபுத்திரன் சொல்லக்கேட்டு. எழில்தோற்றம் என்னும் பொருள்மேல் நின்ற தொழிற்பெயர் எழு பகுதி, உகரகேடுசந்தி. இல் தொழிற்பெயர் விகுதி. காவாய் எதிர்மறை யொரு

மை யேவல் வினைமுற்று கா பகுதி, ஆ எதிர்மறைவிகுதி, வக ரத்தோற்றம் சந்தி, அனைத்தும் ஒரு பகுதி, பகுதி ஆகாரந்தொகுத்தல், ஆய் முன்னிலையொருமை யேவல்விகுதி, ஏல் என்னும் எச்சவிகுதி ஆகில்என்னும் வினையெச்சத்தின்மேல் நின்றது குறிப்பு. (கரு)

அருச்சுனன் யாதுகூறுகின்றான்.

671. தேவருலகத்துங்கண்டறியேன்றிண்டிறலாய்
யாவரோவென்னையறைகூவார்—யாவர்காண்
மட்டுவெண்பூந்தெரியல்வாள்வேந்தர்கோமான்
பட்டவாவென்றான்பணிந்து.

(இ-ள்.) மட்டு - வாசமிக்க, வெண்பூந்தெரியல் - வெள்ளிய தும்பைமலர் மாலைசூடிய, வாள் - வாளையேந்திய, வேந்தர்கோமான் - அரசர்கட்கு அரசனாகிய தருமபுத்திரனே, திண்திறலாய் - திண்ணிய வன்மையுடையவனே, என்னை அறைகூவார் - என்னை யறைகூவுவார், யாவர் ஓ-எவரோ, தேவர் உலகத்தும் கண்டுஅறியேன - (அவர்களை) தேவருலகத்திலும் (இதுகாறும்) பார்த்தறியேன், யாவர்காண் - இம்மண்ணுலகத்தில் அறைகூவுவார்) எவர், பட்டஆறு - (என்சவுரியத்துக்குப்) பங்கம்வந்ததுமன்றாயிருந்தது, என்றான்பணிந்து-என்றுபணிந்து கூறினான்.

தேவேந்திரன் முதலாயுள்ள தேவசாதிகளுள்ளும் என்னையறைகூவினார் இதுகாறுமில்லை. மண்ணுலகத்தவர்வந் தறைகூவக் கேட்டிருக்குமதெனக்கு வீரசவுரிய பங்கமாங் கண்டாயென்றுளத் திவ்வகைசெய்ததிரிகத்தராசனுள்ளிட்டாரை நொடிவரையிற் படமலைந்து, ஸ்ரீவாசுதேவன் பிரசாதத்தினால் மகிதலத்துத் தலைபுரட்டி யிங்ஙனீண்டன் வருகின்றேன், ஈங்கிதற்கெம்பெருமான் வெகுளாதொழிவாயாகென்றும், எனக்கு நின்றிருவுளக் கருத்தால் விசயஞ்செய்து வருவேனாக வுன்பிரசாதபலத்தால் விடைதருவாயாகென்றும் தருமபுத்திரனை யடிபணித்து விடைகொண்டு. காவாய் முன்னிலையொருமை யேவல் எதிர்கால வினைமுற்று கா பகுதி, வ் எதிர்கால விடைநிலை, ஆய் முன்னிலையொருமை யேவல்விகுதி. ஆறு ஆதொகுத்தல். (கசு)

அருச்சுனன் வீமசேனனைக் கைதொழுது
யாதுசொன்னான்.

672\. கடுந்திறற்கானகத்திற்காரிருளில்வந்த
இடும்பனையீடழியவென்று—படர்ந்த
செருவேற்றுமன்னவனைத்திண்கையாற்பற்றி
யொருநூற்றுக்கால்சுழற்றினாய்ந்து.

(இ-ள்.) கானகத்து இல் - காட்டில், கார் இருள்இல்-இருண்டகரிய இருட்போதில், வந்த - (போர்க்கு) வந்த, கடுந்திறல் - மிக்கவன்மையுடைய, இடும்பனை - இடும்பாசுரனை, ஈடுஅழிய வென்று - வலிமைகெடவெற்றிகொண்டு, மன்னவனை - மணிமானை, படர்ந்த செரு - மிக்கபோரில், ஏற்று - எதிர்த்துவென்று, ஒருநூறு - கீசகர்நூற்றுவரை, திண்கையாற்பற்றி-திண்ணிய கையாற்கால்களைப்பற்றி, ஓய்ந்து சுழற்றினாய் - வலிமைகெடச் சுழற்றினாய்.

இருட் போதில் போர்மலைந்திடும்பனையன் றுயிர்குடித்தனை அதுவுமன்றிப் பகனைக்கொன்று எழில் நகரத்தாரிடுக்கந்தீர்த்துப் பிளந்தெறிந்தனை, வைச்சிரவணமென் மணிநகரிற் செம்பொற்சாரலுக்குக்காவலாகிய மணிமானை வானேற்றிப் பாஞ்சாலகன்னிகைக்குச் சூட்டுவித்தனை, கீசகர் நூற்றுவரையுமியமலோகத்துக்கு விடுத்தனை, கிழக்கும் வடகிழக்குமுள்ள தராபதிகளைச் செயித்து ராசசூயயாகத்திற்கு யாநிதி யெதிர்கொடுவந்து தருமபுத்திரனுக்குக் கொடுத்தனை, கின்னரர் கிம்புருடாரதத் தொடக்கத்தார் மகாபலங்களுக்கும் பயங்கர மாயினை, தேவர்களுக்கு நினைப்பரிய வீரசம்பத்து முடையனை, தேவேந்திரனுந் துணுக்க மெய்துவதோர் பீமபராக்கிரமத்தினால் பீமசேனனாகி யுக்கிரவேகமுடைய தோர் தண்டாயுதத்தடக்கை வீரனாகி நீநிற்க, நின்னருகுநின்ற தருமபுத்திரனை யாவராலுந் துளக்கவரிதோவென்றும், தருமபுத்திரனுக்குப் பிரமாதம் விளையாது காப்பாயென்றும், இது நினக்கே பணியல்லாமல் யாவராலுங் காக்கப்படாதென்றும் பீமசேனனை நமஸ்கரித்துக்கூறி.

றூற்றுவர். சுழற்றிலுய் ஈறுகெட்டு, றூற்று, சுழற்றின்என நின்றன. கடுந்திறல் கடி என்னும் உரிச்சொற்றிரிபு. ஓய்ந்து செயவெனெச் சத்திரிபு (கஎ)

விராடனையும் பாஞ்சாலனையும் நோக்கி
அருச்சுனன் கூறல்.

673 மன்னர்பெருமானேமச்சநந்நார்கோமானே
நின்னிற்பரமென்றுநில்கண்ட ப—பின்னுய
படைக்கலங்கடான்சிந்துப்பாஞ்சாலர்கோவே
அடைக்கலமாமென்றானவன்.

(இ-ள்) அவன் - அந்த அருச்சுனன், மன்னர்பெருமானே, அரசர்களுக்கு அரசனே, மச்சநந்நார் கோமானே - மச்சநாட்டார் தலைவனே, நின்இல்பரம் (தருமனைக்காத்தல்) உனக்கே பாரம், என்று உம் நில-எப்போதும் சிறிதும்நீங்காது (தருமபுத்திரனருகே நில், பின்னும்-மீளவும், படைக்கலங்கள்தான்-ஆயுதங்களை, சிந்தும் (பகைவர்மேல்) சொரியும், பாஞ்சாலர்கோவே - பாஞ்சால நாட்டாரரசனே, அடைக்கலம் ஆம் என்றான் (தருமபுத்திரனுக்கு நீ) அடைக்கலமாமென்று கூறினன்.

இவ்வகை விராடராசனுக்கும் பாஞ்சாலராசனுக்கும் அடைக்கலங் காட்டிக்கொடுத்து இல் உருபுமயக்கம். பெருமானே விளியுருப. ந - பெயர்ச்சு-கூ கண்டாய் முன்னிலையசை. (கஅ)

ஏனை யரசரகளை நோக்கிக் கூறல்.

674. வேறுரைத்தமன்னவரைவிண்ணுலகுக்கிப்போழ்தே
ஏறுவித்துமீளுவ்னென்றேகினன்—மாறடர்த்த
தென்னவரைத்தம்பியரைச்சிஞ்சையரைச்சோமகரை
மன்னவரைக்காக்கவகுத்து.

(இ-ள்.) மாறு அடர்த்த - பகைவர்களை நெருக்கிய, தென்னவர் ஐ - பாண்டியர்களையும், தம்பியர் ஐ - நகுலசாதேவர்களையும், சிஞ்சையர் ஐ - சிஞ்சையர்களையும், சோமகர் ஐ-சோமகர்களையும், மன்னவர் ஐ-ஏனையரசர்களையும், காக்கவகுத்து-(தருமபுத்திரனை) பாதுகாக்க அமைத்து, வேறுஉரைத்த மன்னவர்ஐ-

அறைகூவிச்சென்ற திரிகர்த்தன்முதலிய அரசர்களை, விண் உலகுக்கு - வீரசுவர்க்கத்திற்கு, இப்பொழுது ஏ - ஒரு கணப்பொழுதில், ஏறவிட்டு - குடியேற்றி. மீளுவன்என்று திருப்பி வருவேனென்று, ஏகினான் - விரைந்து அருச்சுனன் சென்றான்.

சஞ்சத்தகர்வந் தறைகூவினதுரை ஸ்ரீயாமளர்க்கண் பிரசாதாலத்தால் அவர்களையும் வென்றோர்த்திர் சொராசனே டு மீண்டு வருமளவுந் தருமபுத்திரனை யிரட்சித் திராமலொப்பற்ற பாஞ்டியராசனையு நகுலசகாதேவரையும் திட்டத்துய்மனையுந் துவஜகேதுவையும் பலவாயிரஞ் சேநபதிகளையுஞ் சிகண்டியையும் பாராசக்ஷத்திரியரையுங் கடோற்கசனையுந் ரோபதிபுத்திரரைக் காப்பாக்கி யறைகூவின திரிகர்த்தராசனிடத்திலே போயினான் அருச்சுனன். கு உருபுமயக்கம். ஏறவிட்டு பிறவினையிறந்தகால வினையெச்சம் ஏறு பகுதி, வி பிறவினை விகுதி, அனைத்தும் ஒருபகுதி, ந் சந்தி, ட இடைநிலை, உ எச்சவிகுதி (கக)

திட்டத்துய்மன் அணிவகுத்தல்.

675\. மன்னவனைக்காவென்னவாளமர்க்கண் மெய்விசயன்
இன்னபரிசென் றுணர்ந்தங்கேகினான்-மின்னிடை யில்
மைவகுத்தசோலைவளநாடர்கோமானுங்
கைவகுத்துநின்றான்கலந்து

(இ-ள்.) மன்னவனை காவென்ன - தருமபுத்திரனைக்காவல் செய்யுங்களென்றுகூறி, வாள்விசயன் - வாய்மையேறிய அருச்சுனன், வாள்அமர்கண் - வாளேந்திச செய்யும் போர்முகத்தில், இன்னபரிசுஎன்று - இத்தன்மையாக (நடத்தவேண்டிய) என்று, உணர்ந்து - முன்னர்த்தெரிந்து, அங்கு - அவ்விடத்து, ஏகினான்-சென்றான், மின் இடை இல் - மின்னல்நீங்காத, மைவகுத்த, மேகங்கள் தங்கிய, சோலை - சோலைசூழ்ந்த, வளநாடர்கோமான்உம் - நீர்வளமிக்க பாஞ்சாலநாட்டா ரரசனாகிய திட்டத்துய்மனும், கைவகுத்து (சேனையைமண்டல வியூகமாக) அணிவகுத்து, கலந்து நின்றான் - இடைவிடாது தானும்நின்றான்.

பின்பு வீமனைநிறுத்தி, இருபக்கத்திலும் நகுலசாதேவர்களை நிறுத்தி, முன்பு அபிமன்னனைநிறுத்தி, சேனையினடுவில் தரும

புத்திரனை நிறுத்தித் தானுங் கலந்து நின்றான் என்பார் சைவரு த்து நின்[illegible] [illegible] இன்ன இராச்சுட்டுத் திரிபு. இடை-(பின்னிடுதல்) முதனிலைத் தொழிற்பெயர் (௨0)

துரோணன் செயலை.

676 மே[illegible] [illegible]டலு[illegible] [illegible]டுமொ[illegible] பெ[illegible]ந்ததுபோற்
மே[illegible] [illegible] [illegible]த்து [illegible] [illegible]புர[illegible] [illegible]-சிர்[illegible]லிந்த
க[illegible] [illegible]ரக்[illegible] சயோனியு [illegible]காவலரும்
[illegible] [illegible]ழுந்[illegible]போயி[illegible]ந்து

(இ-ள்) மே[illegible] [illegible]ட[illegible]-மே[illegible] [illegible]டலு[illegible], [illegible]-இமை க்க[illegible], [illegible] ([illegible]) நெருங்கி, எதிர்ந்ததுபோல- ([illegible] [illegible]செய்ய) எ[illegible] [illegible], [illegible] - போரிற்குரிய, [illegible]லந்து([illegible] [illegible] [illegible]) [illegible], [illegible] புத்[illegible] [illegible] (தருமபுத்திரன் [illegible]) [illegible] [illegible] [illegible] [illegible] தொடங்கினோர்கள், சிர [illegible] [illegible], [illegible] [illegible] [illegible] [illegible], கரம் - [illegible] [illegible], [illegible] [illegible], [illegible]காவலர்உம்- [illegible] ([illegible]) [illegible], [illegible]நர்க்குமுன்ன-போர்க்கு எ[illegible]) [illegible] [illegible]ரு[illegible]ட, [illegible] - விரைந்து.

ப[illegible] [illegible] [illegible] [illegible] செயத்திரதனை எட்டா று [illegible] [illegible] சராசரமுங் கெடுபடுங்கிருத பன்மாவும் கன்னன் அசுவத்தாமாவுஞ் சகுனி சல்லியனுள்ளிட்டா ரொடுபதினொ ராம் தே[illegible] [illegible] அணிரதம் புரவியும் நூறாயிரம் கஜ மும் இரண்டக்குரோணி பராக்கிரமும் இராசராசன் து ரியோதனன் பிரதாபங்களோடும், ஆர்த்துவந்து பூதலத்தைச் சமுத்திரங் கொண்டாற்போலவும் மேகபடலங்களைச் சண்ட மாருதங் கலங்கினாற்போலவுஞ் சங்குநாதம் மிகமுழங்கத் தரு மபுத்திரன்மேற் சென்றான் துரோணாசிரியன். மேல்கடல், கீழ் கடல், ந-உயி-நகர-கு-இய் பிற " என்றமையால் நிலைமொழி யீற்றியல்பும் முதல் நீளுதலும் வருமொழிமுதல் வல்லெழுத்தி யல்புங் கொள்க. எதிர்ந்தது இறந்தகால வினைநிலைபெற்று வந்த தொழிற்பெயர் எதிர் பகுதி, ந் சந்தி, த் இடைநிலை, அ

சாரியை, து தொழிற்பெயர் விகுதி. கலசயோனி கலசத்திற்பி றந்தவன். (உக)

677. பல்பதினாயிரவர் பாஞ்சாலர்வெஞ்சமத்து
வில்லோடுடல்வளையவெஞ்சரந்தூய்க்-கொல்லை
விடைபுகுந்தாற்போலவியனெடுந்தேரோட்டி
இடைபுகுந்தான்பாஞ்சாலரேறு.

(இ-ள்.) பல்பதினாயிரவர் - பலபதினாயிர அரசர்கூட்டங்களு ம், பாஞ்சாலர் - பாஞ்சாலநாட்டாரரசரும், வெஞ்சமத்து - கொ டியபோர்க்களத்தில், வில்லொடு-(ஏமேந்திய)வில்லினோடு, உடல் வளைய - தமது உடம்புவளைய, வெஞ்சரந்தூய் - கொடியபா ணங்களைத்தூவ, கொல்லை - முல்லைநிலத்திலுள்ள, விடைபுகுந் தாற்போல் - காளைசென்றாற்போல, வியன்நெடுந்தேர் ஓட்டி-பர ந்தநெடிய தேரினைச்செலுத்தி, பாஞ்சாலர் ஏறு - பாஞ்சால நா ட்டாரரசன்-இடைபுகுந்தான் (பகைவர்சேனைமுன்)சென்றான்.

இஃது அத்துய்மனுள்ளிட்ட பல்பதினாயிரம் பாஞ்சாலருடன்வி ல்வளைத் தெரிசரங்கள் தூவி எதிர்மலைந்தி பகைசேனைமுன்பு முந்தியாது செய்தான் பாஞ்சாலராசன் ... செயவெனெச் சத் திரிபு, வியம்வியன் இறுதிநிலை போலி (உஉ)

பாஞ்சாலராசன் செய்கை.

678 வில்வளைத்தவேல்வேந்தர்வெங்களத்துட்பட்டவிய
எல்வளைக்கையம்பெங்கும்வீசினான்-கல்வளைந்த
காந்தட்கடிச்சாரற்காவலர்கோன்பாஞ்சால
வேந்தர்க்குமுன்பிறந்தவேந்து.

(இ-ள்.) கல்வளைந்த - மலையைச்சூழ்ந்த, காந்தள்கடி- காந்த ள்மலரின்வாசமிக்க, சாரல்காவலர்கோன் - சாரலையுடைய அர சர்க்குஅரசன், பாஞ்சாலவேந்தர்க்கு முன்பிறந்த வேந்து - பா ஞ்சால நாட்டரசருக்கு முன்பிறந்த அரசனும்ஆகிய துருப தன், வில்வளைத்த - வில்லினைவளைத்தெதிர்ந்த, வேல்வேந்தர் - வேலையேந்திய பகையரசர்கள், வெம்களத்துபட்டுஅவிய - வெ ய்ய போர்க்களத்தில் பட்டிறக்க, எல்-விளங்கும், வளை-கடகத்

தை யணிந்த, கை-தனதுகைகளால், அம்பு - அம்பினை, எங்கு உம் வீசினான் - எவ்விடத்தும் பிரயோகஞ்செய்தான்.

வளைபிழி குருதியிற்படவுழக்கித்துன்மருடனென்பானை மரு மத்திடை மயங்கவெய்து காளிங்கரையுங் காந்தாரரையுங் கலக் குறுத்தி மகாசேனையிரியநூறி, உற்றவயிரியாகிய துரோணசா ரியனோடே தாக்கிச் சயந்திரதன் திண்சிலையினைப் பத்தம்பினு லறுத்துக் கூறுக்கி யார்த்துக்கொண்டானதுகண்டு மிகவும் வெ குண்டெழுந் தியாதுசெய்தான் துரோணசாரியன். வேந்துஎ ன்னும் சாதிப் பண்பு அரசர்மேல் நிற்றலால் பண்பாகுபெயர். காவலர் காத்தலில் வல்லவர். அம்புசாதி யொருமை- (உரு)

துரோணச்சாரியன் செய்கை.

679. பாய்வாளியொன்பதினுற் பாஞ்சாலன்வில்லறுத்து
வாய்வாளியைம்பதினன்மான்றேரை-ஈர்வாளி
யூக்கமாமென்றங்கதிரவுடனார்த்தான்
வீக்கமால்கண்டுவெகுண்டு.

(இ-ள்.) பாய்வாளி ஒன்பதின்ஆல் - தைந்துருவும் ஒன்பது பாணங்களால், பாஞ்சாலன்வில்அறுத்து- துருபதனுகிய தன்னு டையவில்லினையறுத்து, வாய்-கூர்மைவாய்ந்த,வாளிஐம்பதின் ஆல்-ஐம்பதுபாணங்களால், மான்-குதிரை(பூண்டதனது)தேர் ஐ-தேரினை, ஈர்-பிளந்தழித்த, வாளி-அப்பாணங்கள், ஊக்கம்ஆ ம்என்று-மிகவும்வன்மையையுடையனவாமென்று கருதி, மால் வீக்கம்கண்டு - (துரோணனுடைய) பெருமையின்மிகுதியையும் பார்த்து, வெகுண்டு - கோபித்து, அங்கு - அவ்விடத்து(சேமத் தேரொன்றிலேறி) அதிர(திக்குகள்)நடுங்க, உடன்ஏஆர்த்தான்- விரைந்து கோஷித்தான்.

இவ்வகை வாள்வாயம் பொன்பதினுல் வில்லறுத்து ஐம்ப தஸ்திரத்தினுல் மணிநெடுந்தேரை யவனித்தலத்து வீழ்த்து ட்டி யார்த்துக்கொண்ட துரோணசாரியனைக்கண்டு நிலையா ருது பதாதியாய்ச் சிதறியோடி மற்றுங்கோர் சேமத்தேரே ற்ற கோளரியேபோல வெகுண்டெழுந்தொரு இ...

ஸ்திரத்தைத் தெரிந்துகொண்டு துரோணாசாரியனுடனேதாக்கி னர்வாளி வினைத்தொகையிலேத்தொடர். வெருண்டு இறந்தகால வினையெச்சம் வெருள் பகுதி, ளகரம் ணகரமாகத் திரிதல் சந்தி, ட் இறந்தகால இடைநிலை, உ எச்சவிகுதி-இதனையாக வெகு ண்ட, வெகுளுகின்ற, வெகுளும், வெகுள, வெகுளல், வெ குண்டான் என வினைவிகற்பங்கள் வரும். (உ௪)

பாஞ்சாலன் செய்கை.

680. நாகம்வளைத்தருளி நாகமசைத்தருளும்
மாகன்மேலேமலர்வாளி—ஏவுகின்ற
மன்மதனைப்போன் [illegible] பலவாளி தானெய்தான்
பன்மதராமென [illegible] து

(இ-ள்.) நாகம்வளைத்தருளி-மகாமேருவை வில்லாகவளைத்து, நாகம் அசைத்தருளும்-சர்ப்பத்தைக் கச்சாகக்கட்டியருளிய, மாகன்மேல்-ஞானாகாசவடிவாகிய சிவபிரான்மேல், ஏக-செல்லும்படி, மலர்வாளி-புஷ்பபாணத்தை, ஏவுகின்ற-பிரயோகஞ்செய்கின்ற, மன்மதன் [illegible] - [illegible] போல, பல்மதர் ஆம் என்ன-(உரு [illegible]) [illegible] என்று (கண்டோர்) [illegible], [illegible] - (எதிர் [illegible]) [illegible], பலவாளி எய்தான்-பல அம்புகளை (துரோணன் மேல்) எயினான்.

சிவபிரான்மேலே மலர்ப்பாணத்தை ஏவிய மன்மதனைப்போலத் துரோணன்மேல் திஷ்டத்துய்மன்பாணங்களையெயினான் என் பதுகருத்து திரிபுரத்தை நீறுக்குதற்கு மகாமேருவைச் சிவபெரு மான் வில்லாகக்கொண்டமையாலும், தாருகவனத்து முனிவர் கள் ஏவிய சர்ப்பங்களைக் கச்சையாகக் கட்டினமையாலும், சனகாதியர் பொருட்டுச் சிவபெருமான் நிட்டை கூடியிருக்க எல்லா வுயிர்களும் தத்தமக்குரிய இன்பங்கள் நுகராது அசை வற நிற்றலால் அச்சிவபெருமானுக்கு இச்சை மூட்டுதற் பொ ருட்டு மன்மதன் மலர்ப்பாணங்களையேவியதினாலும் நாகம் வளைத்தருளி நாகமசைத்தருளி-மாகன்மேலே கமலர்வாளி-ஏவு கின்ற என [illegible] கூறினர். என்ன உவமவுருபிடைச் சொல்லடியா

கடபிறந்த குறிப்புவினைப் பெயரெச்சம் என் உவமவுருபிடைச் சொற்பகுதி, ன் சாரியை, அ எச்சவிகுதி. பரந்து இறந்தகால வினையெச்சம் பர பகுதி. (உரு)

துரோணன் செய்கை.

681 பாஞ்சாலர் வெள்ளம் படப்பொருது பட்டவியக்
சாஞ்சாபிபப்புக டாயினான் — பாஞ்சாலன்
வில்லறுத்துத் தேரழித்து வெவ்வேந்தர் தம்முன்னே
வில்லறுத்து நாணுவித்தான் மேல்.

(இ-ள்) பாஞ்சாலர் வெள்ளம் - பாஞ்சாலநாட்டரசர்கள் கூட்டம், படக்கொன்று பட்டு அப்பொழுது ...திரப்பட்டு மடிய, பாஞ்சாலன் சாபம் - துருபதராசனது கவசம் அறும்படி காயும் அம்பு - வருத்தும் அம்பினை, கடாயினான் - எய்து, வில்அறுத்து (அவனது) ஒளியைக் கடிந்து, தேர்அழித்து (ஏறிய) சேமத் தேரையழித்து, வெவ்வேந்தர் தம்முன் - வேலேந்திய அரசர் கள்முன்னே, வில் ... (அவன் ஏந்திய) வில்லையும்அறுத்து, நாணுவித்தான் - பாணசமர்த்தன் மேல் (அதற்கு) மேல்.

இவ்வகை இரண்டாவதும பாஞ்சாலராசன் வில்லுந் தேரு மழிப்புண்டபிமானித்துப் பந்த நியாயோட அதுகண்டு. காயும் என்னும் பெயரெச்சம் பாட்டிட ஞயிர்மெய்கெட்டுக் காம் என நின்றது ந-வினை-உஉ சூ-ஆல். கடாயினான் கடாவினைப் பகுதி, இன் இறந்தகால விடைநிலை, ஆன் ஆண்பால் விகுதி. பகுதி யல்லாதனவெல்லாம் இடைச்சொற்க ளாதலால் "இடையுரிவட சொலினியம்பியகொளாதவும்" என்னும், சூ-ஆல் யகரத்தோற் றம் சந்தி, அவ்வினைமுற்று வினையெச்சமாயிற்று. ஷ வினை- நஉ சூ-ஆல். (உசு)

திஷ்டத்துய்மன்.

682. செய்கையழிந்துதிரிந்தானென்றந்தையென
வெய்யசினத்தான்மிகவெழுந்து-கையாற்
சலிக்கவேயெய்தான்றடஞ்சிலையின்வின்னு
ணொலிக்கவுடனெய்தானுடன்று.

(இ-ள்.) என்தந்தை - எனது பிதாவாகிய துருபதன், செய்கையழிந்து - தனதுபோர்த்தொழிலிழந்து, இரிந்தானென- முதுகுகாட்டிஞனென்று, வெய்யசினத்துஆல் - கொடுங்கோபத்தால், மிகஎழுந்து - ஆக்கிரமித்துப் போர்க்கெழுந்து, உடன்று- கோபித்து, கைஆல் - தனதுகைகளால், சலிக்க -(துரோணனிடத்தில்)சலிக்க, எய்தான் - பாணப்பிரயோகஞ்செய்தான், தடம்சிலைஇன் (தனது)-பெரியவில்லால், வில்நாண்ஒலிக்க-(அவன் ஏந்திய)வில்லின் நாண்அதிர, எய்தான்-(மீளவும்) அம்பு ஏவினன்

ஆசாரியன்தன்னுடனே யடற்சிலையைச்சரகோஷித்துத்திஷ்டத்துய்மன் தலைப்பெய்தான்.அப்பொழுது மண்ணும்விண்ணும் அதிர்ந்திட்டது மகாயுத்தம் விளைந்திட்டது அப்பொழுது. வெய்ய குறிப்புவினைப்பெயரொச்சம் வெம்மைபகுதி, ஈறுகெடுதலும் முன்னின்ற மெய்திரிதலும் யகரத்தோற்றமுஞ்சந்தி, அ பெயரொச்சவிகுதி. உடன்று இறந்தகால வினையெச்சம் உடல் பகுதி, லகரம் னகரமாகத் திரிதல் சந்தி, றகரமெய் இறந்தகாலவிடைநிலை, உ எச்சவிகுதி. (உஎ)

துரோணன்செய்கை.

683. இருநூறுவெவ்வாளியேவிக்கொடிவீழ்த்
தொருநூறுமல்லகலமூன்றிப்-பொருநூறு
பாகன்மேலேவியேபத்திரட்டிவெவ்வாளி
தேரின்மேலெய்தான்றிளைத்து.

(இ-ள்.) இருநூறுவெம்வாளி - இருநூறுகொடிய பாணங்களை, ஏவி (திஷ்டத்துய்மன்மேல்) பிரயோகஞ்செய்து, கொடிவீழ்த்து-அவனது கொடியையறுத்து, ஒருநூறு - நூறுபாணங்களை, மல்அகலம்ஊன்றி - மற்போர்புரியும் (அவன்) மார்பிலழுத்தி, பொருநூறு - போர்செய்யும் நூறு பாணங்களை, பாகன்மேல் ஏவி - தேர்ப்பாகன்மேற் செலுத்தி, பத்திரட்டிவெவ்வாளி - இருபதுகொடிய பாணங்களை, தேரின்மேல்-(அவனது) தேரின்மேல், திளைத்து-அழுந்த, எய்தான் (துரோணன்) பிரயோகஞ்செய்தான்.

இவ்வகையால் சேருசிலைப்பூம் சொரிபுமழிபுன்கு பல்லை நெத்துப்புன்கூரத் திப்பட்டுப்பல் நாள்டிருப்போகலும் சேகன் மயுள்ளிட்ட பாஞ்சாலகுமாரரைக் கலக்குறுதிச் சேனைமுற் றும்விடாசஞ்செய்து எதிரிருகுமாரணைட்டிருந்து மேல் செல்லு கின்ற துரோணாசாரியனை சென்றடைந்தானாகி. பொருநாறு வினை த்தொகை நிலைத்தொடராய் வென்றாமமயராப் அப்பின்மேல் நின்றது நிலைத்து சேடமெனெச்சந் திரிபு. இடைமுறி, ந் சந்தி, ந் இறந்தகால வினை நிலை, உ எச்சவிகுதி (உஅ)

பாண்டியன் செய்கை.

684\. பாண்டவர்கள் மன்றுனை பாண்டியர்கோன்சென்றெதிர்ந்
ஆண்டகைநம்மேனுடனம் ரமர்செய்தான்-பூண்டங்கு [யு
மேனிமேற்சென்றுவிடுகணைடாபங்கலச
யோனிமேற்சென்றானன்று

(இ-ள்) பாண்டவர்கள் - பாண்டுபுத்திரராகிய தருமபுத்திர ன் முதலியோர், மன்னாள-மண்ணுலகினை, ஆள - அரசாள, பா ண்டியர்கோன் - பாண்டியராசன், சென்றுஎதிர்ந்து - சென்று போரேற்று, ஆண்டகைநன்றுடனே துரோணனுடனே, அன்று - அக் காலையில், அமர்செய்தான் - போர்செய்ய, பூண்சயங்கும்- ஆப ரணம்விளங்கும், மேனிமேல் - உடம்பின்மேல், சென்று - தாக் கி, விடுகணைபாய - ராணப்பிரயோகஞ்செய்யும் அம்புகள் பாய்ந் துருவ, உடன்று-கோபித்து, கலசயோனிமேல் - அத்துரோண ன்மேல், சென்றான் - போர்க்கு எழுந்தான்.

பாண்டவர்கள் பாண்டுபுத்திரர்கள். பாண்டவர்கள் (இது தத் திதாந்தபதம். செய்தான் முற்றெச்சம். உடன்று இறந்தகால வினையெச்சம் உடல்பகுதி, லகரம் னகரமாகத்திரிதல் சந்தி, இடைநிலை, உ எச்சவிகுதி. இதனடியாக உடன்ற, உடலுகிற, உடலும், உடல, உடன்றல் என வினை விகற்பங்கள் வருதல் காண்க. (உகூ)

சேரசோழர்கள்.

685\. பாண்டியர்கோன்பத்துக்சிலையறுத்துபார்மீது
பூண்டயங்கிகொண்டயங்கிப்போதலுமேமண்டியெதிர்

தாக்கினார்மேலுந்தனித்துச்சரமாரி
போக்கினார்தேர்மேற்புரிந்து

(இ-ள்.) பாண்டியர்கோன் - பாண்டியராசன், பத்துசிலை அழிந்து - (தானேந்திய) பத்துவில்லையமிழந்து, பார்மீது-பூமியின்மேல், பூண்தயங்கி - ஆபரணம் தள்ளாடிப், நாண்தயங்கி - மாநாபரணம் நிலைகலங்கி, போதலும் - புறங்காட்டிச்செல்ல, ஈண்டி (சேரசோழர்கள்) நெருங்கி, எதிர்தாக்கினார்- எதிர்த்துப்போர்செய்தார்கள், தேர்மேல் (துரோணன்) தேரின்மேல், தனிந்து - தனித்தனியாக, மேலும்-மேன்மேலும், புரிந்து- விரும்பி, சரமாரிபோக்கினார் - பாணவருஷஞ்சிந்தினார்கள்.

இவ்வகை பாண்டியராச னென்றுகொண்டு ஐயிரண்டு சிலை பிடித் தமரழிவது கண்டு சேரசோழர்கள் விலக்குதலும் அது கண்டு. தயங்கி செயவெனெச்சந் திரிபுகள் போதலும் நிகழ்காலத்தில்வந்த வினையெச்சம் போ பகுதி, து, அல் சாரியைகள், உம் எச்சவிகுதி. தனித்து உரிசசொல்லடியாகப் பிறந்த இறந்தகால வினையெச்சம் தனி பகுதி, த் சந்தி, த் இறந்தகால விடைநிலை, உ எச்சவிகுதி. (௩0)

துரோணன்செய்கை.

626. கொற்றக்கொடித்தேரைக்கூறாக்கினார்கணையால்
வெற்றிக்கொடியோடுவில்லிணையும-அற்று
விடவாளிகொண்டேவிரைந்தெய்தானங்கே
அடலேற்றனையானவன்.

(இ-ள்.) கொற்றம் - வெற்றியையுடைய, கொடி-துவசங்கட்டிய, தேர்ஐ-(சேரசோழர்களேறிய) தேர்களை, கூறாக்கி-பிளந்து வார்கணை ஆல்-நீண்ட அஸ்திரங்களால், வெற்றிக்கொடிஓடு-விசயக் கொடியோடு, வில்இணைஉம்(அவர்களேந்திய) இரண்டுவில்லுகளும்,அற்றுவிட-துணிந்து வீழ, அடல்-வலிமையையுடைய, ஏறுஅனையான்-ஆண்சிங்கத்தையொத்த, அவன்-அத்துரோணன், வாளிகொண்டு - அம்புகொண்டு - ஆங்கே - அப்பொழுதே, விரைந்துஎய்தான் - விரைந்து பிரயோகஞ்செயதான்.

இவ்வகை துரோணனால் தேருஞ்சிலையுங் கொடியுமிழந்து கவசம்பிளக்க வேவுண்டு சேரசோழர்கள் தளர்ந்து போதலும

துகண்டு. கொண்டு கருவிப்பொருளில்வந்த மூன்றாம் வேற்று மைச் சொல்லுருபு. கொற்றம் கொல்லுதல் இது தொழிலாகு பெயராய் வெற்றிமேல் நின்றது கொல் பகுதி, து சாரியை, லகரமுந் தகரமுந் திரிதலும் உகரக்கேடும் சந்தி, அம் தொழி ற்பெயர் விகுதி. (௩௬)

விராடராசன்செய்கை.

687. மல்லாருந்திண்டிறற்றோண்மச்சத்தார்தங்கோமான்
வில்லாற்றுரோணன்றன்வெம்படைஞர்-எல்லாம்
பிணச்சேற்றிலேயழுந்தப்பேய்கூத்தங்காடி
நிணச்சேற்றின்மூழ்குவித்தானின்று.

(இ-ள்) மல்ஆரும - மற்போர்நிறைந்த, திண்திறல்தோள்-திண்ணியவலிய தோளையுடைய, மச்சத்தார்தங்கோமான்- மச்சநாட்டாரரசனுகிய விராடன்,நின்று(போர்முனையேற்று)நின்று - வில்ஆல் (நாணேற்றிய) வில்லினால், துரோணன்தன் - துரோணனுடைய, வெம்படைஞர்எல்லாம் - கொடிய சேனவீரர் களெல்லோரும், பிணச்சேறுஇல்ஏ - பிணமாகியசேற்றிலேமூழ்கவும், பேய் - பேய்க்கூட்டங்கள், அங்குகூத்துஆடி-அப்போர்க்களத்தில் (கைகொட்டிநின்று)கூத்தாடி, நிணம்சேறு இல்-நிணமாகிய சேற்றில், மூழ்குவித்தான் - மூழ்கவுஞ்செய்தான்.

படைஞர் தொழிலடியாகப்பிறந்த பெயர்ச்சொல் படை பகுதி, ஞகரம் பெயரிடைநிலை, அர் பலர்பால் விகுதி, படை கருவிப்பொருளில்வந்த தொழிற்பெயர் படு பகுதி, உகரக்கேடு சந்தி, ஐ தொழிற்பெயர்விகுதி. கோமான் பெயர்ச்சொல் கோ பகுதி, மான் பெயர்ப்பொருள் விகுதி. அழுந்த காரியப்பொருளில்வந்த வினையெச்சம் அழுந்து பகுதி, உகரக்கேடு சந்தி, அ எச்சவிகுதி. (௩௭)

துரோணன்செய்கை.

688. கைம்மேலுமார்மேலுங்காமர்சிலைமேலும்
மெய்ம்மேலுமம்பெங்கும்வீசினான்-மெய்ம்மேலு
மாய்த்திட்டதேரின்றமச்சர்கோன்மாநிலத்துப்
பாய்ந்திட்டுப்போனான்பதைத்து.

(இ-ள்) கைமேலும்-(விராடன்வில்லேந்திய) கையின்மேலும், மார்மேலும் - மார்பின்மேலும், காமர்- விருப்பஞ்செய்யும், சிலைமேலும் - வில்லின்மேலும், மெய்மேலும் - உடம்பின்மேலும், எங்கும் - அவைமொழிந்தஏனையவற்றின்மேலும், மென்மேலும் - மேலும் மேலும், அப்புவீசினான் (துரோணன்) பாணஞ்சொரிந்தான், தேர் பாய்ந்திட்டது-(ஏறிய) தேரழிந்து, நின்ற(அந்தேரில்) நின்ற, மச்சர்கோன் - மச்சநாட்டாரரசன், மாநிலத்து - பெரியநிலவுலகின்மேல், பதைத்துபாய்ந்திட்டு பதைபதைத்துப் பாய்ந்து, போனான் - புறங்காட்டியோடினான்.

இவ்வகை விராடராசனிலையாற்றுதுதேரினின்றிழியப் பாய்ந்து பதாதியாயோடுதலும் அதுகண்டு வீமசேனன் வந்தேன்று கொள்ளலும் அதுகண்டு. மார்பு மார் தொகுத்தல் விகாரம். காமமருவு காமர் தொகுத்தல் விகாரம். மாய்ந்திட்டது ஈறுகெட்ட அஃறிணை யொன்றன்பாற் படர்க்கை யிறந்தகாலவினைமுற்று மாய் பகுதி, ந் சந்தி, து சாரியை, இடு பகுதிப்பொருள் விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்தும் ஒரு பகுதி, முதனிலையெழுத்தாய்த்தோன்றிய டகரமெய் இடைநிலை, உகரக்கேடு சந்தி. து ஒன்றன்பால் விகுதி. மேலுமேலும் என்ற அடுக்குச்சொல் மென்மேலும் என நின்றது ந - உயி - சகூ - சூ - இல் "நெறியே" என்ற விதியால். கை மேல், மெய்மேல் ஐகாரத்தின் முன்னும் தனிக்குறில் யகர மெய்யின் முன்னும் மெல்லெழுத்து மிகுதல் ந - உயி- "எண்மூவெழுத்தீற்று" என்னும் சூத்திரத்தில் "குறில்வழியத்தனியைந்நொதுமுன்மெலிமிகலுமாம்" என்றவிதியாம். (௩௩)

துரியோதனன்செய்கை.

689. சிங்கக்கொடியுஞ்சினமாவுந்தேரினுடன்
மங்கத்தனிவாளிவாங்கினான்-துங்கமுடன்
போற்றரியபஞ்சவர்க்குப்போர்கொடுத்துப்பார்கொடா
மாற்றரியநூற்றுவர்க்குமன்.

(இ-ள்) துங்கம்உடன்-பெருமையோடு, போற்றுஅரிய- புகழ்தற்குஅரிய, பஞ்சவர்க்கு - ஐவர்களுக்கும், போர்கொடுத்து-

(தம்மொடு) போர்த்தொழிலைத்தந்து, பார்கொடாத- (அவர்க்குரிய) பூமியைக்கொடாத, மாற்றுஅரிய - நீக்குதற்கரிய (வன்மையையுடைய) நூற்றுவர்க்கு உள் மன் - துச்சாதனன்முதலிய நூற்றுவர்க்குள் மூத்தோனாகிய துரியோதனன், சிங்கமகொடி உட-(வீமனேறிய தேரிற்கட்டிய) சிம்மத்துவசமும், சினம்மா உம்(பூட்டிய) கோபத்தையுடைய குதிரைகளும், தேரின் உடன் மங்க- தேரினோடழிய, தனி-ஒப்பில்லாத, வாளிவாங்கினான் - பாணப்பிரயோகஞ்செய்தான்.

இவ்வகை துரியோதனன் வெகுண்டு தன்னடுசரங்களால் வீமசேனன் சிங்கக்கொடியும் தேருமிழந்து சர்வாயுதங்களாலு மறைப்புண்டான் அதுகண்டு. துரியோதனன் நூற்றுவருள் ஒருவனாதலால் உள்கூட்டிப் பிரிந்ததற்பொருளில்வந்தது. போற்று, மாற்று முதனிலைத் தொழிற்பெயர்கள். அரிய என்னுங்குறிப்பு வினைப்பெயரெச்சத்தின் அருமை என்னு முதனிலைஇன்மையேல் நின்றது. கொடாத "சாவவென்மொழியீற் றுயிர் மெய்சாதலும் விதி" என்ற-சூ-ஆல்ஈறுகெட்டுநின்றது உபலக்கணம். (௬௪)

நருமஞ்செய்கை.

690\. அம்பொன்முடிதுளக்கியாடெழிற்றேர்மேற்கொண்டு
செம்பொற்கவசஞ்செறிவித்தே-உம்பரைமுன்
ஆண்டவாவென்னவலங்கரித்துவாளமரிற்
பாண்டவர்கோன்றோன்றினன்பார்த்து.

(இ-ள்.) அம்பொன்முடிதுளக்கி - அழகிய பொன்னாலாகிய தனது கிரீடத்தையசைத்து, ஆடு (முரசக்கொடி) அசையும் எழில் - தோற்றத்தையுடைய, தேர்மேற்கொண்டு - தேரின்மேல்ஆரோகணித்து, செம்பொன் - செவந்தபொன்னாலாகிய, கவசம்செறிவித்து-கவசம்பூண்டு, உம்பரை-தேவரையும், முன்-முற்காலத்தில், ஆண்ட- ஆளுஎன்னஅலங்கரித்து-ஆளுதற்கு (அருச்சுனன்) அலங்கரித்தவகைபோலஅலங்கரித்து, வாள்-வாளேந்திச் செய்யும், அமர் இல்-போரில், பாண்டவர்கோன் - பாண்டவர்களுக்கு அரசனாகிய-தருமபுத்திரன், பார்த்து (தனதுசேனை பின்னிடுதலை) பார்த்து, தோன்றினான்-(போர்க்கு) எழுந்தான்,

தேவர்களைக்காத்தற்பொருட்டு நிவாதகவசகாலகேயர்களோடு போர்க்கெழுந்த அருச்சுனன் போர்க்கோலங் கொண்டாறபோலக் கொண்டான் என்பார் உட்டனைமுன் ஆண்டவாவென்ன என்றார். இவ்வகை தலைக்கிராணமும் வீரப்புட்டிலுஞ் செம்பொற் கவசமும்சாத்திப் படைக்கோலத்துடன் தருமபுத்திரன் வந்து. துளக்கி இறந்தகால வினையெச்சம் துளங்கு பகுதி, உகரக்கேடு சந்தி, உ எச்சவிகுதி ஆண்ட என்னும் பெயரெச்சம் தொழிற்பெயர்ப் பொருளில் வந்தது. ஆள் பகுதி, ளகரம் ணகரமாகத்திரிதல் சந்தி, டகரமெய் இடைநிலை, அ எச்ச விகுதி. ஆறு ஈற்றுயிர் மெய்கெடுதல் செய்யுள் மரூஉ. (ருரு)

இதுவும அது.

691. மானத்திடையடரும்வாரிநெடுங்கடலிற்
சேனைத்தனியாறுசெல்வதுபோல - தானை
அடனோக்கிவேனோக்கியாடெழிற்றோனோக்கிப்
படைநோக்கிவந்தான்பரிந்து.

(இ-ள்.) இடைஅடரும்-நிலவுலகில்நெருங்கிய, நெடுவாரிகடல்இல்-(தனது சேனையாகிய) பெருங்கடலில், சேனை (துரியோதனன்சேனையாகிய) தனிஆறு செல்வதுபோல் - ஒப்பில்லாத பேராறு மடுப்பதுபோல, தானை-(மேலெழுந்துவரும) சேனையின், அடல் - வலிமையை, மானததுநோககி-போரபிமானமிகுதியால்பார்த்து, வேல்நோக்கி(ஏந்திய)வேலின்வீக்கத்தையும் பார்த்து, ஆடு-(வீரருடைய) வெற்றிபொருந்திய, எழில்தோள் நோக்கி - அழகிய தோளின்வீக்கத்தையும் பார்த்து, படைநோக்கி (ஏந்திய) வனையாயுதங்களின் பெருக்கத்தையும் பார்த்து, பரிந்துவந்தான் (போரில்) - அன்புகூர்ந்து (தருமபுத்திரன் யுத்தகளத்தனாய் வந்தான்)

தருமபுத்திரன் திண்டேரோட்டிச் செருமலைந்து எதிர்வில க்கினாரை மலைந்தூறிப் பின்னுமொருயாற் றுரோணசாரியனைத் தாக்கி. நோக்கி என்ற வினையெச்சங்கள் போர்செய்து, நாரியென்னும் பொருள்மேல் குறிப்பாகப்போதரல் காண்க. வாரிகடல் இன்றொனைத் தரவந்த ஒருபொருட்கிளவி. படைகருவிப் பொருளில் வந்த தொழிற்பெயர். (ருசு)

கருமபுத்திரன்செய்கை.

692. மாமலையுமண்ணுமறிகடலும்வானகமும்
கோமலையுமஞ்சிக்குலைந்தனவே-போர்முனையில்
விற்கையான்றன்மன்விசைத்துச்சிலைநாணைப்
பொற்கையானாணெறிந்தபோது.

தன்மன்-தன்மபுத்திரன், போர்முனை இல்-யுத்தமுனையில், வில் கைஆல்-தநுநூலிற் கூறியமுறையால், பொன்கைஆல் - தனது பொன்னிறம்வாய்ந்த கரங்களால், சிலைநாண்ஐ - வில்லிற்பூட்டியநாணினை, விசைத்து - விசைபடவாங்கி, நாண் எறிந்தபோது- குணத்தொனிசெய்தபோது, மாமலைஉம் - பெரியஅஷ்டகுலபர்வதங்களும், மண்உம்-நிலவுலகமும், மறிகடல்உம்-(அலைகள்)மடங்கிவரும் எழுகடல்களும், வானகம்உம்-விண்ணுலகமும், கோமலைஉம்-அரசத்தன்மையையுடைய மகமேருவும், அஞ்சி-துணுக்குற்று, குலைந்தன-நிலைகுலைந்தன.

கை-ஒழுங்கு. விசைத்து பெயரடியாகப்பிறந்த இறந்தகால வினையெச்சம். விசை பகுதி, தகரமெய் சந்தி, தகரமெய் இடைநிலை, உ எச்சவிகுதி. (௬௭)

இதுவும் அது.

693. மற்றைத்துரோணன்றன்மார்மேலுந்தோள்மேலுங்
கொற்றச்சிலைமேற்கொடிமேலுஞ்—சுற்றும்
சரபடலம்போர்ப்பத்தலைப்பெய்தான்றன்மன்
விரைபடலத்தேர்முடுகவிட்டு-

(இ-ள்.) தன்மன் - தருமபுத்திரன், விரை - விரைந்துசெல்லும், படலம் - மணிக்கூட்டங்கள் (செறிந்த) தேர்முடுகவிட்டு- தேரைவிரைந்துசெலுத்தி, துரோணன்தன் மார்மேலும் - துரோணனுடைய மார்பின்மேலும், தோள்மேலும்-தோளின்மேலும், கொற்றம் - வெற்றியையுடைய, சிலைமேலும் (அவனேந்திய) வில்லின்மேலும், கொடிமேலும் - விசயதுவசத்தின்மேலும், சுற்றும் - எல்லாப்பக்கங்களிலும், சரபடலம்போர்ப்ப - அம்புக்கூட்டங்கள் புதைபட, தலைப்பெய்தான் - பிரயோகஞ் செய்தான்.

விரைபடருந் தேர்-படலை இடைப்பிரவரல். உம்மை தொகு... விரைதேர் வினைத்தொகை. சுற்று என்னு முதனிலைத்தொழிற் பெயர் இடத்தின்மேல் நின்றது. (௯௩)

694. காய்க்கலசயோனிகடுஞ்சரத்தைக்கார்மழைபோற்
போர்ச்சிலையினொடும்புரிவித்தான் — பார்க்குக்
கரமாரியன்னகருணையான்கையிற்
சரமாரியாலேநகைத்து.

(இ-ள்.) பார்க்கு - உலகிற்கு, கரம் - தனதுகைகளால், மாரி அன்ன - மேகத்தையொத்த, கருணையான் - கிருபையையுடைய தருமபுத்திரன், கார்மழைபோல் - சூல்கொண்ட மேகம்போல, கையில்-முறையால் சரம் மாரி ஆல் (வருவிக்குஞ்சரவருஷத்தால்) கார்-மேகம்போல, கலசயோனி - துரோணன் (எய்யும்) கடுஞ்சரத்தை - கொடியபாணங்களை, போர் சிலையின் ஒடும் (அவனெதிர்ந்த) போர்க்குரிய வில்லோடும், நகைத்து புரிவித்தான் - தடுத்துப்போர்செய்தான்.

துரோணாசாரியன் விட்ட அஸ்திர சஸ்திரங்களைத் தருமபுத்திரன் அஸ்திரங்களாலறுத்து மாற்றி மகாயுத்தம் விளைத்திட்டது, அப்பொழுது திருதிராஷ்டிரர் சேனையுங் குலைந்திட்டன. பிரதியுபகாரங்கருதாது கொடுத்தலால் கரமாரியன்ன என்றார். நகைத்து இறந்தகாலவினையெச்சம்; நகை பகுதி, த் சந்தி, த் இடைநிலை, உ எச்சவிகுதி. அன்ன உவம வுருபிடைச் சொல்லடியாகப் பிறந்த குறிப்புவினைப் பெயரெச்சம். அன் உவம வுருபிடைச்சொற் பகுதி, னகரமெய் சந்தி, அ எச்சவிகுதி.

வீமன்முதலியோர்போர்க்கெழுதல்

695. வீமனுஞ்சேயும்விசயன்பெருமகனும்
மாமனுமச்சத்தார்கோமானும் — சோமகரும்
பைத்தோடியாவமேற்பாய்பகழிகால்வீழ்த்து
மொய்த்தோடிபுக்கார்கண்முன்.

(இ-ள்.) வீமனும் - வீமசேனனும், சேய்உம்-கடோற்கசனும், விசயன் பெருமகன்உம் - அருச்சுனனுடைய சிறந்த புத்திரனாகிய அபிமன்னுவும், மாமன்உம் - சாதகியும், மச்சத்தார் கோ

மான் உம்சோமகர்உம்-விராடனும்சோமகர்களும, பைதுழுடி (தருமபுத்திரனுக்குத்துணையாகி எங்கும) பரந்துசென்று,ஆவம்மேல் (துரோணனுடைய) வில்லினுண்மேல், பாய்பகழி - தைந்துருவும் அம்புகளை, கால்வீழ்த்து-காலிறங்கிச்சொரிந்து, மொய்த்துழுடி - நெருங்கிச்சென்று, முன்புக்கார்கள்-முன்னே போர் செய்யப் புகுந்தார்கள்.

வீமசேனனுங் ந —றகசனும் அபிமன்னுவுஞ் சாத்தகியும் விராடராசனு முள்ளிட்டார் பன்னூறுயிரம்பலத்தினேடு மணி நெடுந்தேர் விரையவேவி ச் சரகோஷஞ் செய்து சங்கமூதித் தருமபுத்திரனுக்காக முன்புகுந்தார்கள். பைத்து, மொய்த்து இறந்தகால வினையெச்சங்கள். பை பகுதி, த் சந்தி, த் இறந்தகாலவிடைநிலை, உ எச்சவிகுதி. மொய் பகுதி. உம்மை எண்ணுப் பொருளன. (௬0)

வீமன் அசுவத்தாமா கிருபனோடு தலைப்பெயது
போர்செய்தல்.

696. காலாளாய்த்தேரிழிந்துகையிற்கதையினுற்
றேராட்களாரைத்தேரழித்துத்—தேராட்கள்
நிற்பாரைக்காணுதுநின்றுனெழிற்றருமன
பொற்பாதஞ்சென்னிமேற்பூத்து.

(இ-ள்.) காலாள்ஆய் - பதாதியாய், தேர்இழிந்து-தேரினின்றுமிறங்கி, கையில் - கையிலேந்திய, கதையின்ஆல் - கதாயுதத்தினுல், தேர்ஆட்கள் ஆனுர் ஐ - தேர்வீரர்களாகிய அசுவத்தாமா கிருபன் முதலியோரை, தேர்அழித்து - (அவர்களேறிய) தேரினையழித்து, தேர்ஆட்கள் நிற்பார் ஐ - தேர் வீரர்களாய்ப் போர்முனையில் நிற்பவர்களை, காணுது-காணுமல், எழில்-தோற்றத்தையுடைய, தருமன் - தருமபுத்திரனுடைய, பொன்பாதம்-பொன்போன்ற அரிய பாதமாகிய தாமரை, சென்னிமேல் பூத்து நின்றுன் - தனது சிரத்தில் மலரநின்றுன்.

போர்முகத்தில் வெற்றிகொண்டமையால் தன்மூத்தோனைவணங்கினுன் என்பார் எழிற்றருமன் பொற்பாதஞ்சென்னிமேற் பூத்து நின்றுன்என்றுர். இவ்வகை மகாசேனையோடுந் தாக்கித்

காலாளாயத் தண்டுகொண்டு, தேர்வேந்தராயினுரை யுத்தபூமி யினில்லா தெப்பக்கமு மோடத் துரத்தித் தேரரட்க ளெதிர்ப் பாரைப் பெறுது மகாவாயு திரிவதாமெனத் திரிந் தார்க்கி ன்ற வீமசேனன் தன்னேடுந் துருவிவந்த ராக்ஷதர்வந் தாரை யார்ப்பரவத்திறுற் பயங்கொளுத்தி, துரோணன் கிருபன் அசு வத்தாமா இவர்களை யாயுதஙகளையழிய மோதிச் சர்வசத்திரை யுந் திசைதிசை சிந்துவித்துத், துரியோதனனையு மெப்பக்கமும் ஓடத் துரத்திச் சல்லியன்வந் தானைவன் மத்திற் பிரகரித்து, செயத்திரதன்வந் தானைத் தேரோடு மெடுத்தெறிந்து, சகுனி வந் தானையஞ்ச வுரப்பிமான் கணங்களைப் புலிதுரந்ததாமென மானவேந்தனை யோடத்துரத்தித் தருமபுத்திரன் ஸ்ரீபாதங்க ளில் நமஸ்கரித்து நின்முன் வீமசேனன் அதுகண்டு. பூத்து என்றமையால் பாததாமரை என்ரும். பூ பகுதி த் சந்தி த் இற ந்தகால விடைநிலை, உ எச்சவிகுதி. பூத்து செயவெனெச்சத் திரிபு. (சக)

பகதத்தன்செய்கை.

697. சாடலந்துதங்கள்படையிரியத்தானெதிரே
ஓடவிறல்யானையுந்தினன்—கூடார்
உரம்பொருதவெற்றிபுனையும்பர்க்காத்தெவ்வ
சுரர்பொருதவேந்தன்சுளித்து.

(இ-ள்.) சாடு (பகைவரைக்) கொல்லுதலை, அலந்து-ஒழிந்து, தங்கள் படை இரிய - தங்கள்சேனை முதுகிட்டோட, தான் எதிர் ஏ - தான் (அப்பகைவர்சேனைக்கு) எதிரே, விறல்யானை ஓட - தனது வெற்றியையுடைய யானை விரைந்துசெல்ல, கூடார் - பகைவருடைய, உரம்-மார்பை, பொருத-போர்செய்து பிளந்த, வெற்றிபுனை-வெற்றிமாலையைத்தரித்த, உம்பர்க்குஆக- தேவர்களுக்காக, தெவ்-பகையையுடைய, அசுரர்பொருத-அசுர ரொடு போர்செய்துவென்ற, வேந்தன் - பகதத்தன், சுளித்து- கோபித்து, உந்தினன் - செலுத்தினன்.

சுரர்பதிக்குத் தோழனுகி யசுரர்குலப் பகைதணித்துக் கொடுத்துத் தேவர்களோடு மமுதங்கடைந்த பகதத்தன் என்னுமோ

ரிராகஷதன் பதினாயிரம் யானை பலமுடையனாகி, நூறாயிரம் யானையின் பலமுடைய தோர் சுப்பிரதீபமென்னு மதகசத்தின் மேற்கொண்டு தாக்குமளவில். சாடுமூதனிலைத் தொழிற்பெயர். அலந்து இறந்தகால வினையெச்சம் அல பகுதி, ந் சந்தி, த் இடைநிலை, உ எச்சவிகுதி - அவ்வெச்சம் காரியப்பொருளில் வந்த இரிய என்னும் எச்சத்தின் முதனிலையையும், அவ்வெச்சம் காரணப்பொருளில் வந்த உந்தினான் என்னும் இறந்தகால வினைமுற்றின் உந்துஎன்னு முதனிலையையுங்கொண்டன.(சஉ)

அப்பால்.

698. தேர்துகைத்துமாப்பிளந்துசேண்வரைபோலாள்விலக்கிப
போர்விலக்கியானைமுன்னேபோய்ப்பிறங்க—வீரர்
இரிந்தோடவோடியிகற்களிறுந்தானுமு
திரிந்தானத்தெம்முனைமேற்சென்று.

(இ-ள்.) தேர்துகைத்து (எதிர்த்தவீரர்களேறிய) தேர்களை யழித்து, மாபிளந்து - குதிரைகளைப்பிளந்து. சேண்-நீண்ட, வரைபோல் - மலைபோலநின்ற, ஆள்விலக்கி - காலாட்களைத்துரத்தி, போர்விலக்கி - போர்முனையைவிலக்கி, யானை (தானேறிய) யானை, முன் ஏ போய்ப்பிறங்கமுன்னேசென்று விளங்கவும், வீரர் - போர்மன்னர்கள், இரிந்துஓட - முதுகிட்டோடவும், ஓடி - விரைந்து, இகல் - வலிமையையுடைய, களிறுஉம் தான் உம் - யானையுந் தானுமாக, அ - அந்த, தெவ்முனைமேற்- பகைவர் போரின்மேல், சென்றுதிரிந்தான் - சென்றுபோராடினான்.

வெம்முனையில் என்றும் பாடம். பகதத்தன் சரவருஷஞ் சொரிந்து பகடுந் தேரும் பாய்மாவும் பாவடியிற் படவுழக்கி, தன்பெருங்கோட்டுப் புண்சுமந்த காலுடையதோர் மால்வரை நிலமிசைத் திரிவதாமெனக் கடுங்காற்றின் வடிவுகொண்டதாமெனக் கொடுங்கூற்றங் கொதித் தெழுந்ததெனக் கொல்லாநின்ற பகதத்தனுக்கு நிலையாற்றா தெட்டுத்திசையு மிரிந்தோடுகின்ற தருமபுத்திரன் சேனையைக்கண் டழிபடைதாங்கி வந்தென்றுகொண்டு. துகைத்து முதலிய இறந்தகால வினையெச்சங்

ஙளொன்றனை யொன்றுகொண்டு பிறங்க என்னும் நிகழ்கால வினை யெச்சத்தின் முதனிலையையும், அவ்வெச்சம் ஓடி என்னு ம்வினையெச்சத்தின் முதனிலையையுங் கொண்டன. துகைத்து இறந்தகால வினையெச்சம் துகை பகுதி. தெவ் பண்பாகுபெய ராய்ப் பகைவர்மேல் நின்றது. வருமொழிமுதல் மகரம் ஆத லால் நிலைமொழியீற்று வகரமெய் மகரமெய்யாகத் திரிந்தது. ந - மெ - ௩௩ சூ - ஆல். தானும் என வந்தமையால் அதனோடு விரவியகளிறு என்னும் அஃறிணைப்பெயரும் விரவிச் சிறப்பால் திரிந்தான் என்னும் உயர்திணையொருமை முடிபேற்றது திணை வழுவமைதி. ந-பொ-௨௭-சூ. இல் "ஒருமுடிபின" எனவாளா கூறினமையால். (௬௯௮)

வீமன்செய்கை.

699 ஆலாலவா சுகிதன்வாயிற்புறப்பட்ட
ஆலாலம்போலவடுசினமாய்க்—காலாளாய்
அம்பொற்றண்டேந்தியமராடப்போயினான்
செம்பொற்றோள்வீமன்செயிர்த்து.

(இ-ள்,) ஆலாலம்-கொடிய, வாசுகிதன் (மந்தரகிரியாகிய மத்தில் தாம்பாகப்பூட்டிய) வாசுகியினுடைய, வாய்இல்புறப்ப ட்ட-வாயினின்றுபுறப்பட்ட, ஆலாலம்போல-விஷத்தைப்போ ல,அடு-கொல்லுதற்குரிய, சினம்ஆய்-கோபமுண்டு, கால்ஆளா ய்-பதாதியாய்,அம்பொன்-அழகியபொற்பூண் (கட்டிய) தண்டு ஏந்தி-கதாயுதத்தையேந்தி, செம்பொன் தோள்-செவந்தபொன் னிறம் வாய்ந்த தோள்களையுடைய, வீமன்-வீமசேனன், செயிர் த்து-கோபித்து, அமர்ஆட போயினான்-போர்புரியச்சென்றான்.

இவ்வகைகொண்டுசென்று பகதத்தன் வாகனமாகிய சுப்பிர தீபத்தின் வன்மத்திடை புடைத்தார்த்தான் வீமசேனன். செ யிர்த்து இறந்தகால வினையெச்சம் செயிர் பகுதி, த் சந்தி, த் இடைநிலை, உ எச்சவிகுதி. அடுவினைத்தொகைநிலைக்குறிப்பு.

இதுவும்அது.

700. வாமவேலேந்திவரைதடிந்தவள்ளல்போல்
வீமனைசென்றுவிலக்கினான்—கோமான்

புனைவயிரக்கோட்டியானைபொன்னுதற்மேற்றன்கைச்
சினவயிரத்தண்டேவிழச்சென்று.

(இ-ள்.) வாமம் - ஒளிவாய்ந்த, வேல் ஏந்தி - வேலையேந்தி, வரைதடிந்த - கிரவுஞ்சகிரியையழித்த, வள்ளல்போல்-முருகக் கடவுள்போல, கோமான் - பகதத்தனுடைய, புனை - (கிம்புரி) பூண்ட, வயிரம் - வயிரம்பற்றிய, கோடு - கொம்பினையுடைய, யானை - சுப்பிரதீபத்தினுடைய, பொன்-நெற்றிப்பட்டமணிந்த, நுதல்மேல் - நெற்றியில், தன்கை - தனது கையில் (ஏந்திய) சினம் - கோபமிக்க, வயிரம்தண்டேவிழ - சேகுபற்றிய கதாயுதந் தாக்க, சென்று - பாய்ந்து, வீமன்ஏ-வீமனே, (போய்) விலக்கினான் (தன் சேனைமெற் செல்லுதலை) விலக்கினான்.

இவ்வகை பகதத்தனோடுஞ் சுப்பிரதீபத்தோடும் வீமசேனன் றலைப்பட்டுச் சிங்கநாதமுஞ் சங்கத்தொனியு மெழுப்பி யார்ப்பரித்து எம்மருங்குந் திசைசிலம்பத் தன் மகாசேனைமேற் போகாமல் மற்றதனைத் தகைந்திட்டு மகாயுத்தஞ் செய்யாநின்றான் வீமசேனன். தடிந்த இறந்தகாலப் பெயரெச்சம் தடி பகுதி ந் சந்தி, த் இறந்தகால விடைநிலை, அ எச்சவிகுதி. பொன் பட்டத்தின்மேல் நிற்றலாற் கருவியாகுபெயர். உடையவன் தொழிலை யுடைமை மேலேற்றிச சினத்தண்டு என்றார். (சரு)

அப்பால்.

701. ஒருவரொருவர்க்கங்கொல்காதுபோரில்
இருவருமேசென்றங்கெதிர்ந்தார்—விரவியெழுங்
கார்முழக்கோமாகடலோகாற்றோவெனவன்றிப்
போர்முழக்கோவென்னப்புகுந்து.

(இ-ள்.) விரவி எழும் - கலந்தெழாநின்ற, கார்முழக்கோ - மேகங்களின் முழக்கமோ, மாகடலோ - பெரியகடலின்முழக்கமோ, காற்றோ - சண்டமாருதத்தின் முழக்கமோ, அன்றி - இவையல்லாமல், போர்முழக்கோ - போர்க்களத்தி லெழுந்த முழக்கமோ, என்ன - என்று கேட்டோர்கருத, ஒருவர்க்கு ஒருவர் - ஒருவருக்கொருவர், அங்கு - அப்போர்க்களத்தில், ஒல்காது (சிறிதும்) தளராது, போர்இல்புகுந்து - போர்த்தொழிலிற்

புகுந்து, இருவர்உம்ஏ - பகதத்தனும் வீமசேனனுமே, சென்று அங்கு எதிர்ந்தார்-(தம்முள்) அப்போர்க்களத்தில் கலந்தெதிர்ந்து போர்செய்யத் தொடங்கினார்கள்.

கார் கருமையென்னும் பண்புப்பெயர் ஈறுகெட்டு முதல் நீண்டுநின்ற கார் பண்பாகு பெயராய் மேகத்தின்மேல் நின்றது. ஒருவரொருவர்க்கு இறுதியில்நின்ற எல்லைப்பொருளில் வந்த நான்கனுருபைமுன்னர்க்கூட்டிப் பொருள்கொள்க. ஒல் காது எதிர்மறை வினையெச்சம் ஒல்கு பகுதி, உகரக்கேடு சந்தி, ஆ எதிர்மறைவிகுதி, அனைத்தும் ஓர்பகுதி, து சாரியை உகரக்கேடுசந்தி, உ எச்சவிகுதி. மாகடல் உரிச்சொற்றொடர் ஆதலால் " இயல்பினும்விதியினும்" என்ற பொதுச்சூத்திரத்தால் மிகாது " இடையுரிவடசொலின்" என்ற கு - ஆல் வருமொழி முதல் வல்லெழுத்து இயல்பாயிற்று. (௬௬)

பகதத்தன் செய்கை.

702. பாண்டவர்கள்சேனையென்னுங்காட்டைப்பகதத்தன்
தூண்டுசினத்தீயாற்சுடும்பொழுதில்—காண்டீபப்
போர்வண்ணவிற்கைப்புயல்கொண்டுவந்ததே
கார்வண்ணனென்பதோர்காற்று.

(இ-ள்.) பாண்டவர்கள் - பாண்டவர்களுடைய, சேனை என்னும்காட்டை - சேனையாகிய பெரியகாட்டினை, பகதத்தன் - பகதத்தனனவன், தூண்டு - மூளாநின்ற, சினம் - கோபமாகிய, தீ ஆல் - பெருந்தீயினால், சுடும்பொழுது இல்-சுடாநின்றகாலத்தில், காண்டீபம் - காண்டீபமென்னுஞ் சிறப்புப்பெயரையுடைய, போர் - போர்த்தொழிற்குரிய, வண்ணம்-நிறத்தையுடைய, வில்கை-வில்லையேந்தியகையையுடைய,புயல்(அருச்சுனனாகிய) மேகத்தை, கார்வண்ணன் என்பது - கரியநிறத்தையுடைய கண்ணமூர்த்தியென்று சொல்லப்படும், ஓர்காற்று-ஒருகாற்றானது, கொண்டுவந்தது (அத்தீயை யவிக்கும்படி) கொண்டுவந்துசேர்த்தது.

எத்தனை யோராயிரம் யானையின் பலமுடையதோர் சுப்பிரதீபத்தின்மேற் கொண்டு பகதத்தனென்னு மகாபல பராக்கிர

மன் புகுந்து பாண்டவர் சேனையைக் கொல்லுகின்றுனென்று ஸ்ரீவாசுதேவன் தன் திருவுளத்தே நினைந்து பதினுயிர நாராயண கோபாலரையும் பதினுயிரஞ் சஞ்சத்தகரையு மபசெயப் படுத்துவித்து அருச்சுனனைக் கொண்டுவந்து யுத்தபூமி புகுந்தான். துண்டு சினம் வினைத்தொகை நிலைத்தொடர். காண்டீபவில் இரு பெயரொட்டுப் பண்புந்தொகை. இதுஉருவகவணி.

அப்பால்.

703. விசையன்வருதலுமேவீமன்கணின்றும்
விசையன்மேலேதிரியவிட்டான்—திசைசுழலும்
வாலுடைத்தாய்மூன்றுமதமுடைத்தாயீரிரண்டு
காலுடைத்தாயோடுங்களிறு.

(இ-ள்.) விசையன் வருதலும்-அருச்சுனன் போர்க்குவர, வீமன்கண் நின்றும்-வீமசேனனிடத்தினின்றும், விசையன்மேல் ஏ - அந்த அருச்சுனன்மேலே, திரிய (சுளித்துத்) திரிய, திசை சுழலும் - திக்களவுஞ்சென்று சுழலும், வால் உடைத்து ஆய்- வாலினையுடையதாய், மூன்றுமதம் உடைத்துஆய் - மும்மதங் களையுடையதாய்,ஈரிரண்டு கால்உடைத்து ஆய - நான்கு கால் களையுடையதாய், ஓடும்களிறு - ஓடும் சுப்பிரதீபத்தை, விட்டான் (பகதத்தன்) ஏவினுன்.

வீமசேனனேடு யுத்தம்பண்ணி மற்றவனை வெல்ல வொண்ணுமற் கைவிட்டு அருச்சுனனுடனேபகதத்தன்தாக்கி. வருதலு ம நிகழ்காலவினையெச்சம் வா பகுதி, வாவெனக் குறுகுதலும் ரகரவுகரம் விரிதலும் விகாரம், து, அல் இரண்டுஞ் சாரியை, உகரக்கேடு சந்தி, உம் எச்சவிகுதி. கண் இடப்பெயர்ச்சொல் லாதலால் நீக்கப் பொருளில்வந்த நின்றும் என்னுஞ் சொல்லுருபேற்றது. மூன்று ஈரிரண்டு சொன்முரணணி. (சஅ)

யாதுசெய்தானென்னில்.

704. மார்மேலுந்தோண்மேலுமால்வண்ணன் றன்மேலும்
தேர்மேலும்பொற்பகழிசிந்தினுன்—போர்முனையில்
என்றுன்சரமாரியெண்ணுயிரங்கோடி
குனறுமலெய்தான்கொதித்து.

(இ-ள்.) மார்மேலும் (அருச்சுனன்) மார்பின்மேலும், தோள்மேலும்- தோள்களின்மேலும், மால்வண்ணன் தன்மேலும்- மேகம்போலுங் கரியநிறத்தையுடைய கண்ணமூர்த்திமேலும், தேர்மேலும் - தேரின்மேலும், பொன்-பொற்கட்டினையுடைய, பகழிசிந்தினான் - பாணப்பிரயோகம்செய்து, போர்முனை இல்- யுத்தமுனையில், ஏன்றான் - எதிர்த்து, எண்ணாயிரங்கோடி சரம் மாரி - எண்ணாயிரங்கோடி பாணவருஷம், குன்றாமல் - குறைவுபடாமல் (நிரம்ப என்றபடி) கொதித்து எய்தான்-கோபித்து மீளவும் பிரயோகஞ்செய்தான்.

இவ்வகை தேர்மேலும் வாநரக்கொடிமேலும் ஸ்ரீ வாசுதேவன்மேலும் யாவராலுந் தாங்கவொண்ணாவகை சரமாரி பொழிந்துநின்றான் பகதத்தன். சிந்தினான் ஏன்றான் முற்றெச்சங்கள் ஏல் பகுதி, லகரம் னகரமாகத்திரிதல் சந்தி, றகரம் இறந்தகாலவிடைநிலை, ஆன்விகுதி. ஏன்றான் என்றான் குறுக்கல்விகாரம். குன்றாமல் எதிர்மறை வினையெச்சம் குன்று பகுதி, ஆ எதிர்மறை விகுதி, உகரக்கேடுசந்தி, அனைத்தும் ஒருபகுதி. மல் எதிர்மறை யெச்சவிகுதி. (சஉ)

அருச்சுனன்செய்கை.

705. வில்லறுத்துநாணறுத்துவெற்றிக்கொடியறுத்து
மல்லறுத்தங்கானைமதமறுத்து—வில்லென்றான்
தேனாறுசோலைத்திருநாடர்கோமானைப்
பூநாறுவேலான்புகன்று.

(இ-ள்.) வில்அறுத்து (பகதத்தன் ஏந்திய) வில்லினையறுத்து, நாண்அறுத்து-(வில்லிற்பூட்டிய) நாணையும் அறுத்து,வெற்றிக்கொடி (அவனேந்திய) வெற்றித்துவசத்தையும், அறுத்து- துணடுசெய்து, மல்அறுத்து (அவனது) மற்போரையுந் தொலைத்து, அங்கு - அவ்விடத்தில், ஆனை - சுப்பிரதீபத்தினுடைய, மதம் அறுத்து - மதத்தையும் அடக்கி, தேன்நாறு-தேன்வாசம் வீசும், சோலை - சோலைசூழ்ந்த, திருநாடர்கோமானை - செல்வமிக்க நாட்டோர் அரசனாகிய பகதத்தனை, (நோக்கி) பூநாறுவேலான் - மலர்மாலை கமழும் வேலையேந்திய அருச்சுனன், புகன்

று - நெடுமொழிகூறி. நில் லென்றான் (ஓடாது போர்முகத்தில்) நில்லாயென்று கூவினான்.

இவ்வகை பகதத்தன் வில்லுங் கொடியுங் கொல் யானையுங் குறைபட்டாற்றலன் அபஜயப்பட்டோடிப் பின்னும் பதிகோ பத்துடன் யாவராலுந் தாங்கற்கரிய தோர் சத்தியினை யபிமந் திரித்து ஸ்ரீவாசுதேவன்மேல் வெகுண்டு விட்டான், அப்பொ ழுது விண்ணு மண்ணும் பதற வருகின்ற சத்தியினைக் கண்டு அனைவரு மதிசயங்கொண்டு அறுக்கவொட்டு பலவில். நெடு மொழி கூறல் ஆவது [illegible] புகழ்ந்து கூறல். நில்-ஆய் விகு தி குன்றியாந [illegible] ற்று. புகன் று நின்றமையின் வியப் [illegible] டுக் கூறுதி. [illegible] கரபா கந்திரிகம் சந்தி. [illegible] (௫0)

அருச்சுனன் [illegible] செய்தமை-

706\. [illegible]
[illegible]
[illegible] துவீழ்த்தான்
[illegible]

(இ-ள்.) [illegible] - வெறிய கடல்போலுங் கரிய [illegible] சத்தியினுடைய, மல்லூர் - மற்போர் [illegible], வலை [illegible] பாய்ந்த பாரின்மே ல், [illegible] ஓர் வெய்யவேல் ஐ - ஒரு [illegible], [illegible] (கண்ணுறாத்தி கடைக்கணிக்க) பா ர்த்து, [illegible] - இரண்டு பாணங்களினால், மூன்று ஆக (அவ்வேலை) மூன்றுதுண்டுபட, இரண்டாண் காய் (கா ண்டீபத்திற்பூட்டிய) இரண்டு நாணின்கால், சென்று அலேட்ப (காதளவும்) பொன்றுமாக்க (வலித்து) எய்து - பிரயோகஞ்செ ய்து, அறுத்துவீழ்த்தான் - அறுத்துவீழ்த்தனன்.

மற்றதனை ஸ்ரீவாசுதேவன் அருச்சுனனுக்குக்காட்டினவுடன் அமோகமான சத்தியினையுடைய அவ்வேலை யறுத்து வீழ்த்தா னருச்சுனன், அப்பொழுது பின்னுமொருபால்வெகுண்டுபோது செய்தான் பகதத்தன். வந்து அஃறிணையொன்றன்பாற் படர்

க்கை யிறந்தகாலவினை முற்றுப்பெயரெச்சமாய் நின்றது. வலி
த்து இசையெச்சம் - கதுவகாரியப் பொருளில் வினையெச்சம்
கதுவு பகுதி, உகரங்கெடுசந்தி, அ எச்சவிகுதி. (ருக)

அப்பால்.

707. மால்வரையேபோன்றான் [illegible] மால்வரையின்
மேல்வரையின் மாசறப் பெய்மழையிற் —கோலிப்
பெருமாரிபெய்வதெனப் பெய்தான்சிலையால்
சரமாரிபெய்சிலை [illegible]

(இ-ள்.) மால்வரைபோன்ற - பெரிய மலையையொத்த, தன் மால்யானை - தன்னுடைய [illegible] மதகத்தையுடைய யானை(மே மேலேறி) வரைஇல - அளவில்லாத, [illegible] பெரிய [illegible] ரங்களை, வில் - வில்லிலே, [illegible], கோலி-ஏறிட்டு, மால்வரைஇல் [illegible] பெருமாரிபெய்வது என - [illegible], பெய்தான் - (பகதத்தன்) பிரயோகஞ்செய்தான், [illegible], சரமாரி - சரவருஷத்தை, பெய்சிலை [illegible] அருச்சுனன்.

இவ்வகை [illegible] தன் [illegible] சிலையால் [illegible] சரமாரிபெய்தானென்று [illegible] கண்டு மிக வும்வெகுண்டு பொங்கி. கோலி இறந்தகாலவினையெச்சம் கோல் பகுதி, இ எச்சவிகுதி. என்ன உவமவுருபிடைச் சொல்லடியாகப்பிறந்தபெயரெச்சம் என் உவமவுருபிடைச் சொற்பகுதி, ணகரமெய்சந்தி, அ எச்சவிகுதி. எனதொகுத்தல்விகாரம். [illegible] எனபபின்னும் வருதல் சொற்பின் வருநிலையணி. (ருஉ)

அருச்சுனன்செய்கை.

708. கணைமாரியெல்லாங்கலக்கிக்கார்கோலி
அணைமார்பினுண்புரளவார்த்தே—இணையில்லாக்
காலன்கடும்படையைவிட்டான்கருதலன்மேல்
மால்வண்ணன்றோழன் மதித்து.

(இ-ள்.) கணைமாரி எல்லாம் (பகதத்தன்) எய்த சரவருஷங் களையெல்லாம், கலக்கி - அறுத்து, கார்முகங்கோலி - வில்லைவ ளைத்து, மார்பில் அணைநாண்புரள - மார்பிற்பொருந்தி வில் நா

ண்புரள, ஆர்த்து - குணத்தொனிசெய்து, இணை இல்லாத (த ஸக்கோர்) ஒப்பில்லாத, கடுங்காலன்படை - கடிய இயமாஸ்தி ரத்தை, சுருநலன்மேல் - பகதத்தன்மேல், மால்வண்ணன் - மே கம்போலுங் கரிய நிறத்தையுடைய கண்ண மூர்த்தியினுடைய, தோழன் - தோழனுகிய அருச்சுனன், மதித்துவிட்டான்- அபி மந்திரித்து எறிந்தான்.

இவ்வகை பகதத்தன்விட்ட திவ்வியாஸ்திரங்களைத் தேவரா சன் பிரசாதத்தினுல் இயமாஸ்திரத்தா லறுத்துமாற்றி யபசெ யப்படுத்தக்கண்டு. கார்முகம் கார்தொகுத்தல்விகாரம். அணை யென்னு முதனிலை வினையெச்சப் பொருளில்வந்தது. படைகரு விப்பொருளில்வந்த தொழிற்பெயர் பகுபகுதி, உகரக்கேடுசந்தி, ஐ கருவிப்பொருளில்வந்த தொழிற்பெயர்விகுதி. (ருரு)

பகதத்தன் செய்கை.

709. கூர்வாளிநூறுகொடியின்மேற்கோத்தெய்து
போர்வாளிமுந்நூறுபொற்பரிமேல்—ஈராறு
வச்சிரம்போலெய்தான்மலைந்தான் றடந்தோளிற்
சித்திரம்போன்மன்னன்செயிர்த்து.

(இ-ள்.) சித்திரம்போல் (அருச்சுனன் பாணத்தினுல்) சித்தி ரம்போல் (அசைவறநின்ற) மன்னன்- பகதத்தன், செயிர்த்து- கோபித்து, கூர் - கூரிய, நூறுவாளி-நூறுபாணங்களை, கொடி இன்மேல்-வானரதுவசத்தின்மேல், கோத்து எய்து (வில்லில்) கோத்துப் பிரயோகஞ்செய்து, போர் - போர்த்தொழிற்குரிய, முந்நூறுவாளி - முந்நூறுபாணங்களை, பொன்பரிமேல் - அழ கிய சுவேதக்குதிரைகள்மேலும், ஈராறு- பன்னிரண்டுபாணங் களை, மலைந்தான் (தன்னெடு) போர்செய்த அருச்சுனனுடைய, தடந்தோளில் - பெரியதோளிலும், வச்சிரம்போல் எய்தான்- வச்சிராயுதம்போலப் பிரயோகஞ்செய்தான்.

இவ்வகை பகதத்தன் அஸ்திரமெல்லாம க்ஷயஞ்செல்லவும் வானவராலுந் தடுப்பதற்கரியதனை, வெகுவித சகஸ்தர வருஷ நிறைவுடையதனை மணிபூஷணசாலசோபிதமாகியவதனை வை ஷ்ணவாஸ்திரமாக வபிமந்திரித்து முனையிரியவிட்டெறிதலும்,

அது அக்கினிச்சுவாலையா யரசர்குழாம்வெந்துவிழ பாய்ச்சடல் வலையந்தலைப் பனிப்பச் செல்லா நின்றதனைக்கண்டு அருச்சுனனும் வைஷ்ணவாஸ்திரந் தொடுக்கவுற்றானைத் தகைந்து மற்றதற்கு வக்ஷஸ்தலத்தைக்கொடுத்தான் ஸ்ரீவாசுதேவன். கோத்து இறந்தகால வினையெச்சம் கோபகுதி, த் சந்தி, த் இறந்தகால விடைநிலை, உ எச்சவிகுதி. மலைந்தான் இறந்தகாலவினை முற்றுப்பெயர் மலைபகுதி, ந் சந்தி. த் இறந்தகாலவிடைநிலை, ஆன் ஆண்பாற் படர்க்கைவிகுதி. (௫௪)

அப்பொழுது.

710. மன்னன்வெருண்டெதிர்ந்தவன்கைவளையெஃகந்
தன்னையுடையான்றடமார்பில்—துன்னிருளைக்
காலைவாய்ச்சேர்ந்தகடவுட்கதிர்மணிசேர்
மாலையாய்ப்பூண்டதேவாங்கு.

(இ-ள்.) மன்னன் - பகதத்தன், வெருண்டு - கோபித்து, வன்கைஎறிந்த - வலியகையால் (அழுத்தி) எறிந்த, வளை எஃகம் - சக்கரம், தன்னை உடையான் - (பிரமன்முதலியோர்போற் பரதந்திரனாகாது) சுதந்திரனாகிய கண்ணபிரானுடைய, தடம் மார்பு இல் - பரந்தமார்பில், துன் இருள் ஐ - நெருங்கிய இருளை, காலைவாய் - விடியற்போதில் (ஓட்டி) சேர்ந்த - செயலகமெழுந்த, கடவுள் - சூரியனையொத்த, கதிர் - ஒளியையுடைய, மணிசேர்மாலை ஆய் - மாணிக்கமாலையாய். வந்து பூண்டது - வாய்ந்திருந்தது.

இவ்வகை மற்றவனுல்விடப்பட்ட திவ்வியாஸ்திரம் ஸ்ரீவாசுதேவன் திருமார்புக்கு இரத்தினங்களாலழுத்தப்பட்ட வயிரகண்டியென்னும் ஓர்மாலையாய்ப் பூண்டிலங்கிற்று, அதுகண்டு தேவர்களு மதிசயப்பட்டுப் புஷ்பவருஷம் பொழிந்தார்கள், அவ்விரண்டுபடைக்குழாமு மாச்சரியமாயின. வெருண்டு இறந்தகாலவினையெச்சம் வெருள்பகுதி, ளகரம் ணகரமாய்த்திரிதல் சந்தி, டகரம் இடைநிலை, உ எச்சவிகுதி. வளைஎஃகம் ஒருசொற்கிளவி. ஓட்டி இசையெச்சம். சேர்ந்தபண்படியாகப்பிறந்த இறந்தகாலவினையெச்சம் சேபகுதி, ந் சந்தி, த் இறந்தகால விடைநிலை, அ எச்சவிகுதி. (௫௫)

அருச்சுனன்செய்கை.

711. காற்றுமெரியுங் கடுகியெதிர்மண்டுங்
கூற்றமெனும் வாளிகோத்தெறிய—மாற்றரிய
அம்பொற்கவச மறுக்கவறியாமற்
றனபொற்றேர்மீண்டதேதான்.

(இ-ள்.) காற்றுமெரியும்-காற்றையும் நெருப்பையும், கடுகி-கலந்து விரைந்து, எதிர்மண்டும் - (பகைவர்) எதிர்நெருங்கிய, கூற்றம் என்னும்வாளி - இயமனேயென்று கண்டோர்சொல் லும்அம்பினை, கோத்து (வில்லில்) கோத்து, எறிய-பிரயோகஞ் செய்ய, மாற்று அரிய நீக்குதற்கரிய, அம்பொன்-அழகிய பொ ன்றாலாகிய, கவசம் அறுக்க (பகதத்தன்) கவசத்தையறுக்க,அறி யாமல் - உணராமல், தன் - தன்னுடைய, பொன்தேர்- பொன் னாலாகியதேரை (கொண்டு) மீண்டது-திரும்பியது.

யுகாந்தகாலத்திற்கிளம்பு மூழிக்காற்றுப்போலக் கடுங்கணைகளை யருச்சுனன் பெய்ய, அங்கதுவும் போய்ப்பகதத்தன் கவசம்பிள க்கமாட்டாமை மீண்டுவரக்கண்டு ஸ்ரீவாசுதேவன் தன் நாராய ணாஸ்திரங்கொடுக்க. மாற்று முதனிலைத்தொழிற்பெயர். மீண் டதுஒன்றன்பாற்படர்க்கை யிறந்தகாலவினைமுற்று. மீள்பகுதி ளகரம் ணகரமாகத்திரிதல் சந்தி, டகரம்இடைநிலை,அசாரியை, து ஒன்றன்பால் விகுதி. (௫௯)

இதுவுமது.

712. விரிகடல்வண்ணன்றன்வெவ்வாளியேவப்
புரிகடல்சூழ்பூதலத்துப்பொங்கிக்—கரிசேர்
மலைதுமிக்குமால்யானைமன்னுபகதத்தன்
தலைதுமியப்போயிற்றேதான்.

(இ-ள்.) விரிகடல்வண்ணன்தன்-பரந்தகடல்போன்ற கரியநிற த்தையுடைய கண்ணமூர்த்தியினுடைய, வெம்வாளி-கொடியநா ராயணாஸ்திரத்தை,ஏவ-பிரயோகஞ்செய்ய,புரிகடல்சூழ் (யாவ ராலும்) விரும்புங்கடல்சூழ்ந்த, பூதலத்து - நிலவுலகில்,பொங் கி-கொதித்தெழுந்து, கரிசேர் - யானைகள் சஞ்சரிக்கும் - மலை துமிக்கும் (உன்னதத்தோற்றத்தால்) மலையைவென்ற, மால் -

மதமயக்கத்தையுடைய, யானைமன்னு - யானைமேலுள்ள, பகத த்தன் - பகதத்தனுடைய, தலைதுமிய - தலைதுண்டுபட, போயி ற்று - சென்றது.

ஆங்கதனை வாங்கி யாவாகனம் பூரணமாகத் தொடுத்துவிட அதுசென்று. வெவ்வாளிஈறுகெட்டுநின்ற வெம்மையென்னும் பகுதிவருமொழிமுதலெழுத்தாகத் திரிந்து ந-பந-அ சூத்திரத் தில் 'ஈறுபோதல் "முன்னின்ற மெய்திரிதல்" என்பவற்றால் உணர்க. துமிக்கும் இறந்தகாலப் பொருள்மேல்நின்ற பெயரெ ச்சம் துமிபகுதி, கு சாரியை ககரந்தோற்றம் உகரக்கேடும் சந்தி, உம் விகுதி. உம் விகுதி மூன்றுகாலத்தின்மேலும் வரும்.

713. திக்குநடுங்கத்திகைப் பயாத்தேர்வேந்தர்
மிக்கவியச்சென்றுவிசையினால்—தொக்க
பகதத்தன்றன்றலையைப்பார்மேற்புரட்டிச்
சுகமுற்றுப்போயிற்றேதொக்கு

(இ-ள்.) திக்குஉம்நடுங்க-எட்டுத்திக்கிலும் உள்ளோர் நடுக்க மடையவும், திகைப்பு ஓயாத-பிரமை நீங்காத, தேர்வேந்தர்-தே ரையுடையஅரசர்கள், மிக்கு அவிய - மிகவுமடியவும், விசையி ன்ஆல்சென்று-விசையோடுசென்று, தொக்க - நெருங்கிய, பக தத்தன்தன் தலை ஐ-பகதத்தனுடையதலையை, பார்மேல்புரட்டி-நிலவுலகின் மேலறுத்துவீழ்த்து, தொக்கு - நெருங்கி, சுகம் உற்றுபோயிற்று-தடுக்கும் வீரரில்லாமற் சென்றது.

இவ்வகை பகதத்தனை நாராயணாஸ்திரத்தால் வீரசுவர்க்கத்து க்குப்போக விடைகொடுத்துப்பின்னுஞ் சுப்பிரதீபத்தை. திக்கு -வாகுபெயர். நடுங்க, அவியஎன்னும் வினையெச்சங்களின் பின் எண்ணும்மை தொகுத்தல் புரட்டி இறந்தகாலவினை யெச்சம் புரட்டுபகுதி,உகரக்கேடுசந்தி, இ எச்சவிகுதி.உற்று, தொக்குஎன்னும் வினையெச்சங்களில் முதனிலை யெழுத்தாய்த் தோன்றிய றகரமெய்யும், ககரமெய்யும் இறந்தகாலத்தைக்காட் டின. உறு, தொகு பகுதிகள். (ருஅ)

714. வில்விறற்காண்டீபவார்சிலையினுனுதைத்த
பல்பதினாயிரமாம்பாய்கணையால்—புல்லான்

தலைக்களிற்றையப்புருவத்தன்னடிக்கீழ்வீழ்த்திக்
கொலைக்களிற்றைக்கொன்றான்கொதித்து.

(இ-ள்.) புல்லான்-பகதத்தனுடைய, தலைகள் இற்று-தலைகளற்றுவிழும்படி, ஐ அப்புஉருவ-ஐந்துபாணங்கள் தைத்துருவ, தன் அடிகீழ் - தன்காலின்கீழ், வீழ்த்தி-அறுந்துவீழ்த்து, வில்-விளங்கும், விறல்-வெற்றியையுடைய, காண்டீபம்-காண்டீபமாகிய, வார்-நீண்ட, சிலைஇன் நாண்-வில்லிற்பூட்டியநாண், உதைத்த, செலுத்திய, பல் - அளவில்லாத, பதினாயிரம் ஆம் - பதினாயிரமாகிய, பாய்கணை ஆல் - தைத்துருவும் அம்புகளால், கொலை-கொல்லுதற்றொழிலையுடைய, களிறு ஐ-சுப்பிரதீபம் என்னும் யானையையும், கொதித்து கொன்றான் (அருச்சுனன்) கோபித்துக்கொன்றான்.

இவ்வகை அமரேந்திரனாற் சிறகறுப்புண்டு வீழ்ந்ததோர்வியன் குன்றுபோல அருச்சுனன் திவ்யாஸ்திரம் பட்டுருவச்சுப்பிரதீபமுஞ் சுவர்க்கலோகம்புக்கது. இவ்வகை பகதத்தன்பட்டு வீழ்ந்ததும் அவனைப்பிரதக்ஷிணமாகத் தேர்கடாவி ஸ்ரீவாசுதேவனை நமஸ்காரஞ்செய்து, சுதக்ஷிணனென்பவனைத் தலைதுமித்துச்செயத் திரதனையுஞ் செய்ரதரையும் பயத்தினொடு நடுகுறத்திக், கிருபனையுங் கிருதவன்மாவையும் பொருகணையாற் சிலையறுத்துப் போகாநின்ற அருச்சுனனெதிரே காந்தாரரெல்லாம் எதிர்மிலைந்தி. புல்லான் எதிர்மறை வினையாலணையும்பெயர் புல் பகுதி, லகரமெய்சந்தி, ஆ எதிர்மறை விகுதி, அனைத்தும் ஓர் பகுதி, ஆன் ஆண்பால் விகுதி, விகுதி ஆகாரமுதற்குறை. தலைகள் தலைக்கள் ககரமெய் விரித்தல் விகாரம். வீழ்த்தி இறந்தகாலப்பிறவினை வினையெச்சம் வீழ்த்துபகுதி, உகரக்கேடுசந்தி, இ எச்சவிகுதி. (௫௧)

காந்தாரர்செய்கை.

715. எல்லாரும்வெஞ்சிலையாரெல்லாருந்திண்டேரார்
எல்லாருமிட்டகவசத்தார்—எல்லாரும்
பூந்தார்களார்ப்பத்தம்போர்வலியான்மூடினர்
காந்தாரரெல்லாங்கலந்

(இ-ள்.) எல்லார்உம் (வந்துசூழ்ந்த) யாவரும், வெம்சிலையார் (ஏந்திய) கொடிய வில்லினையுடையவராகி, எல்லார்உம் திண தேரார்-யாவரும் திண்ணியதேர் மேற்கொண்டவராகி, எல்லாருஉம் இட்ட கவசத்தார் - யாவரும் போர்க்குஇட்ட கவசத்தராகி, எல்லார்உம் - யாவரும், பூதார்கள் - தும்பை மலர்களாலாகிய மாலைகளில், ஆர்ப்ப - (வண்டுகள்) ஒலிக்க, தம்போர்வலிஆல் - தமதுபோர்தொழிலுக்கு ஏற்றவலிமையினால்,காந்தாரர்எல்லாம் - காந்தாரநாட்டரசர்களெல்லாம், கலந்து மூடினார்-(தம்முள்) கலந்து அருச்சுனனைச் சூழ்ந்தார்கள்.

இவ்வகைசகுனி யுள்ளிட்ட காந்தாரரிருபதின்மரிரவர்சென்று வளைத்துக்கொண்டார்கள். சிலையார்,தேரார் கவசத்தாரென்னும் உடைமைப்பொருளில்வந்த குறிப்புவினைமுற்றுகள் எச்சங்களாய்த்தனித்தனி மூடினார் என்னும் வினைமுற்றின் முதனிலையைக் கொண்டன. (௬௦)

அருச்சுனன்செய்கை.

716 காந்தாரர்சேனைக்கடலைக்கணைமழையால்
பூந்தாரமார்பன்புரட்டினான்—காந்தாரர்
கல்லேறுதம்மிற்கடலேறனையாரை
மல்லேறுவென்றான் மதித்து.

(இ-ள்.) காந்தாரர் - காந்தாரநாட்டரசருடைய, சேனைகடல் ஐ-சேனாசமுத்திரத்தை, கணைமழைஆல்-சரவேகத்தால், பூதார் அம்மார்பன் - மலராற்றொடுத்த மாலையினழகுமிக்க மார்பினையுடைய அருச்சுனன், புரட்டினான் - உறப்பச்செய்தான், காந்தாரர்-அக்காந்தாரராகிய, கல் (பூமியை) துளைத்துச்செல்லும், ஏறு தம் இல் - இடியேற்றையொத்தவருள், கடல் - கடலிலுள்ள, ஏறு அனையார் ஐ - மகரஏற்றையொத்த சகுனிமக்களை மூவரையும், மல் ஏறு-மற்போரையுடைய ஆண்சிங்கத்தையொத்த அருச்சுனன், மதித்து (அவர்களைஇலக்காக) கருதி, வென்றான் - வெற்றிகொண்டான்.

இவ்வகை காந்தாரர் பலத்தைக்கட்டழித்துச் சகுனிமக்களை மூவரையும் போர்க்களத்திற்றலைபுரட்டி நிஷதரையும் கலிங்க

னையும் நிமிஷமாத்திரத்திற் கொன்றுழக்கித்திரியாநின் றதனைஞ்செயனொடுநோக்கி. கல்லேறு கல்லுநிலையுடைய ஏறு எனவும் பொருள்தந்து நிற்றலால் இரண்டுபொருளால் மயங்கிய ஒரு தொடர் தொகைச்சொல். இல் கூட்டிப்பிரித்தற்பொருளில்வந் தஐந்தனுருபு. மகரவேறு நீர்வாழுயிர்களை வருத்துதல்போல நிலவுலகில் வாழ்வோரை வருத்துதலால் கடலேறனையார் என்றார். வென்றான் உயர்திணையாண் பாற்படர்க்கை யிறந்தகாலவினைமுற்று வெல்பகுதி, லகரம் னகரமாகத்திரிதல் சந்தி, றகரமெய் இறந்தகால விடைநிலை, ஆன் விகுதி. (௬௧)

சகுனிசெய்கை.

717. அம்பொற்சிலைமேலடுகணை தாயெய்து
வெம்புசரமாரிவித்தினான்—முன்பொருவர்
செய்யாதவண்ணந்தன்சேனைநடுவுட்புகுந்தங்
கெய்தார்த்தான்காந்தாரரேறு.

(இ-ள்.) காந்தாரரேறு - காந்தாரநாட்டரசர்களுள் ஆண்சிங்கம்போன்ற சகுனி, அம்பொன்-அழகியபொற்கட்டியையுடைய, சிலைமேல் (அருச்சுனன் ஏற்றிய) வில்லின்மேல், அடுகணைகள் தாய் - கொல்லும் பாணங்களை, எய்து-பிரயோகஞ்செய்து, வெம்பு - வருந்தாநின்ற, சரமாரி-சரவருஷத்தை, வித்தினான்(எங்கும்) சிந்தினான், முன்பு- முன்னம், ஒருவர்செய்யாதவண்ணம்(தன்னைப்போல்) மற்றொருவர் செய்யாதபடி, தன்சேனைநடு உட்புகுந்து - தனதுசேனையினடுவிலிருந்து, எய்துஆர்த்தான்-பாணப்பிரயோகஞ் செய்து வீரகோஷஞ்செய்தான்.

வீரர்கள் போர்முனையில் நின்று போர்புரிதல்போலாது தன் சேனை நடுவுள் நின்று அஞ்சிப் போர்செய்தான என்பார் முன் பொருவர் செய்யாதவண்ணம் என்றார். அடுகணைகள் வெம்பு சரம் வினைத்தொகை நிலைத்தொடர்கள்.

அருச்சுனன்செய்கை.

708. தாரறுத்துநாணறுத்துக்காந்தாரர்கோமானைப்
போரறுத்துமுன்னேபுறங்கண்டான்-சீரறுத்துப்
பார்வேந்தர்கோமான்படைநாகமுன்னுயர்த்த
போர்வேந்தன்முன்னேபுரிந்து.

(இ-ள்.) பார்வேந்தர் - நிலவுலகையாளும் அரசர்களுடைய, கோமான் - அரசனாகிய அருச்சுனன், புரிந்து-விரும்பி, படம் நாகப் - படத்தையுடைய சர்ப்பக்கொடியை, முன் உயர்த்த-(தனதுசேனைமுன்)உயர்த்திய, போர்வேந்தன்முன்ன - போர்த்தொழிலையுடைய துரியோதனன்முன்னே, காந்தாரர்கோமான் ஐ-காந்தாரநாட்டாரரசனாகிய சகுனியை, தார்அறுத்து - (போர்க்குச் சூடிவந்த) தும்பைமாலையையறுத்து, நாண்அறுதது(வில்லிற்பூட்டிய) நாணினையறுத்து, போர்அறுத்து -(அவன்செய்யும்) போர்த்தொழிலையும் ஒழித்து, சீர்அறுத்து-அவமானப்படுத்தி, முன்ன - முன்பு, புறங்கண்டான் - முதுகுகாட்டி யோடச்செய்தான்.

இவவகை சகுனி புறங்காட்டியோடக் கடற்படையைக் கலக்குறுத்திச் சிங்கநாதஞ்செய்தான் அருச்சுனன். புரிந்து இறந்தகால வினையெச்சம் புரி பகுதி, ந சந்தி, தகரமெய் இறந்தகால இடைநிலை, உ எச்சவிகுதி. அறுத்து என்னும் இறநதகால வினையெச்சங்கள் தனித்தனி புறங்கண்டான் என்னும் வினைமுற்றின் புறங்காண் என்னு முதனிலை கொண்டன (௬௩)

அப்பால்.

709. சேனைமுதல்வனையுஞ்சென்றங்காநாடர் தம்
கோனையுங்கொண்டுகுலவேந்தன்-வானுலவு
மாமதியைச்சூழ்போனமண்டிலம்போலெண்டிசையும்
வீமனைச்சூழ்போனான்விரைந்து.

(இ-ள்.) குலவேந்தன் - குருகுலபதியாகிய துரியோதனன், சேனைமுதல்வன் ஐஉம் - சேனாபதியாகிய துரோணனையும், சென்ற-(போர்க்குப்) புகுந்த, அங்கநாடர்தம்கோன் ஐஉம்-அங்கநாட்டாரரசனாகிய கன்னனையும், கொண்டு-துணையாகக்கொண்டு, வான்உலவும் - ஆகாயத்திற்சஞ்சரிக்கும், மா-கலைநிறைந்த, மதி ஐ-சந்திரனை, சூழ்போனமண்டிலம்போல் - வளைந்தவூர்கோள் போல, விரைந்து - விரைவாய், எண்திசைஉம்- எட்டுத்திக்கிலும், வீமன்ஐசூழ்போனான் - வீமசேனனை வளைந்தான்.

துரோணாசாரியனையும் அங்கராசனையுந் தன்பிரதாக்களையுமு

டன்கொண்டு துரியோதனன்போய் வீமசேனனைச் சூழ்ந்து கொள்ளலும், அது கண்டு. சென்ற என்னும் இறந்தகாலப்பெயரெச்சத்தின் அகரவீறு தொக்குநின்றது செல் பகுதி, லகரம் னகரமாகத்திரிதல் சந்தி, றகரமெய் இறந்தகாலவிடைநிலை, அ எச்சவிகுதி. விரைந்து இறந்தகாலவினையெச்சம் விரை பகுதி. மா வடசொற்றிபு. (௬௪)

அரசர்கள்செய்கை.

710. ஒருகைச்சிலைகுனித்தங்கோர்கைச்சரந்தேர்ந்
திருகையுஞ்சென்றங்கிசைந்தார்-ஒருகையே
முன்றொடர்ந்துபோனமுனைவேந்தரெல்லாரும்
பின்றொடர்ந்துசென்றார்பெயர்ந்து.

(இ-ள்.) ஒருகை - ஒருகையால், சிலைகுனித்து- வில்லைவளைத்து, ஓர்கை - ஒருகையால், சரம்தேர்ந்து - பாணங்களையாராய்ந்து (கோதது) இருகைஉம் சென்று - முன்பின்னுஞ் சென்று, அங்கு-அப்போர்க்களத்தில், இசைந்தார்-(வீமனோடுபோர்செய்யத் துரியோதனன் முதலியோர்) ஒருப்பட்டார்கள், ஒருகைஏ-ஒருமுகமாகவே, முன்தொடர்ந்துபோன- முன்னேயவர்களைத் தொடர்ந்துசென்ற, முனை-போர்த்தொழிலையுடைய, வேந்தர்எல்லார்உம் - அரசர்களெல்லாரும், பெயர்ந்து- மீள, பின்தொடர்ந்து (அவர்களுக்குத் துணையாக) பின்னே தொடர்ந்து, சென்றார் - போயினார்கள்.

பெயர்ந்து செயவெனெச்சத்திரிபு. பெயர் பகுதி, ந் சந்தி, த் இறந்தகால விடைநிலை உ எச்சவிகுதி. குனித்து இறந்தகால வினையெச்சம் குனி பகுதி, இவ்வெச்சம் தேர்ந்து என்னும் எச்சத்தின் முதனிலையையும் அவ்வெச்சம் சென்றுஎன்னும் எச்சத்தின் முதனிலையையும் அவ்வெச்சம் இசைந்தார் என்னும் வினைமுற்றின் முதனிலையையுங் கொண்டன. முதனிலைகள் தேர் செல், இசை. முன்னின்ற அங்கு அசைநிலை. (௬௫)

அதுகண்டியாதுசெய்தான்வீமன்.

711. அலையுமுழைவையன்னனடுசரங்கள்பாயச்
சிலையழிவார்தேரழிவாராகி - நிலையழிந்து

மாவெந்துயரான் மடங்கிப்புறமிட்டார்
ஆவந்திகரோடாங்கு.

(இ-ள்.) அலை-வருத்தும், உழுவை அன்னான்-புலியைப்போன்றதை யொத்த வீமன் (எய்யும்), அடுசரங்கள்-கொல்லுகின்ற பாணங்கள் தைத்துருவ, நிலைஅழிவார்(காலொடிந்து) [illegible], நேர்அழிவாராகி - நேருடைந்து, நிலைஅழிந்து ([illegible]) போர்க்கோலம் ஒழிந்து, மா - பெரிய, வெந்துயரால் கொடிய துன்பத்தால், மடங்கி-[illegible], ஆவந்திகரோடு - (தமக்குத்துணையாகவந்த) அவந்திநாட்டரசரோடும், ஆங்கு-அப்போர்க்களத்தில், புறமிட்டார் - புறங்காட்டியோடினார்கள்.

இவ்வகை இரண்டாக [illegible] பெற்றுவந்த வீடசேனனும் [illegible] ருஞ்சிலையும் அழிப்புண்டு நாளும் ரணபிரதாபரும் மகாசேனையும் நிலையாற்று தடைபெற்றிட்டாம். நிலைஅழிவார் [illegible] திணையொடுசேர்ந்த அஃறிணையுயர்திணை முடிபெற்றது திணைவழுவமைதி. க-பொது-உரை-கூ அழிவார் முற்றெச்சம் அவந்திநாட்டரசர் ஆவந்திகர் [illegible] தத்திதாந்தபடம் ([illegible])

அப்பொழுது.

712. ஓங்கிவரம்பிழந்தங்குள்வாங்குமோதம்போற்
பூங்கழலார்மன்னர்பெருஞ்சேனை-யாங்கிரண்டும்
பூண்டும்போர்செய்கழிந்து புண்ணீருடல்சோர
மீண்டும்போய்ப்புக்கார்தம்வீடு

(இ-ள்.) ஓங்கி - பெருகி, வரம்புஇழந்து-எல்லைகடந்துபரந்து, அங்கு-அவ்விடத்து, உள்வாங்கும்- சுருங்கும், ஓதம்போல்-கடல்போல, பூங்கழல் - பொலிவையுடையவீரகண்டையும், தார்-வெற்றிமாலையையுமுடைய, மன்னர் - அரசருடைய, பெருஞ்சேனை இரண்டும் - போர்செய்யும் இருதிறச்சேனைகளும், போர் பூண்டும்- போர்த்தொழிலைமேற்கொண்டும், செய்கழிந்து-போர்செய்தலையொழிந்து, புண்ணீர் - உதிரநீர், உடல்சோர - தமது உடம்பினின்றுஞ் சிந்த, மீண்டும்போய் - மீளவுஞ்சென்று, தம்வீடுபுக்கார் - தம்முடைய பாடிவீடு புகுந்தார்கள்.

பெருஞ்சேனை வினைத்தொகை நிலைத்தொடர். ஆங்கு அசை

நிலை. மீண்டு செயவெனெச்ச[illegible]திரிபு - செய்முதனிலைத்தொழிற்பெயர். (௬எ)

[illegible] மிருதல்.

713 [illegible] ளெண்டிசையும்
அ[illegible] [illegible]று
புணரி[illegible]ரான்மேலைப்
புணரி[illegible]து

(இ[illegible]) [illegible] அரிய - போர்செய் திறக்க, [illegible] ளவர்களும், எண்திசை[illegible] - [illegible] (பதி னோராநாள் [illegible]) இ[illegible] முடி[illegible], அறியா[illegible] - [illegible]-நிலைபெ[illegible], புணரி இன் மேல் [illegible]-வந்து தோற்றிய, பொன் க[illegible] - [illegible] செக்கிறம்வாய்ந்த சூரியன், மேலைபுணரி [illegible] - [illegible]லில், அப்போதுபுககான் - அ[illegible]

அ[illegible] வீமசேனனுக்கிரந்துக்கு ஆற்றுமையா[illegible] யுங் கைவாங்கித் தம்பாடிவிடுபுக்கன. [illegible] பொருபகுதி, த் இறந்தகாலயிடைநிலை, உ எச்சவிகுதி, அன்ன அகரச்சுட்டின்திரிபு. அகர இகரச்சு[illegible] செயயுளவழக்கு. புணரி மூன்று நீரும் கலந்தநிலையுடையது என்னும்பொருள்மேல் நிற்றலால் காரணப்பெயர் - புணர்பகுதி, இ பெயர்விகுதி, மூன்று நீர் ஆற்றுநீர், ஊற்றுநீர், மேகநீர். (௬அ)

முற்றிற்று.

பதின்மூன்றாநாள் யுத்தம்.

பதின்மூன்று ஆம் நாள்யுத்தம் எனப்பிரித்து முன்னர்க்கூறி [illegible] ௬௨௩.

கடவுள்வாழ்த்து.

714. மூன்றுருவாயப் பான்மூத[illegible]வேறில்லாத
சான்றுருவாயப் பா[illegible]முருவாய்த்—தோன்றி
யணையாககாகத்தறி துயில்வானென்றுந்
துணையாகநெஞ்சேதொழு.

(இ-ள்.) மூன்று உருஆய் (சிருட்டி, திதி, சங்காரம், என்னு முத்தொழிற்கு) சங்கரிஷணன், பிரத்தியுமநன், அநிருத்தன் என மூன்றுதிருவுருவாய், அபால் - அம்மூவருக்கும் அப்பாற்ப ட்ட, முதல் உரு - முதற்கடவுள், வேறு இல்லாத - தானன்றி யில்லாத, சான்று உருஆய் (யாவைக்கும்) சாட்சிப்பொருளாய், அபால் - அதற்கு அப்பால், தரும் உருஆய் (யாவும் தன்சந்நிதி யில்) தோன்றநிற்கும்நின்மலவடிவாய், தோன்றி (ஆன்மாக்கள் நிமித்தம்) இத்திரு வுருக்கள்கொண்டு, அணை ஆக சயனமாக, நாகத்து - ஆதிசேடன்மேல், அறிதுயில்வான் - யோக நித்திரை செய்யுமுதல்வனை, என்றுஉம் - எப்பொழுதும், நெஞ்சே - மன மே, துணை ஆக - ஓர்பற்றுகோடாக, தொழு - வணங்காய்.

"மூவராயவர்களுக்கு முதல்வனாகிய மூர்த்தி" எனப்பின்னூ லாருங் கூறுதல்காண்க. ஆய்என வேறு பலவடுக்கிய வினையெ ச்சங்கள் தனித்தனி தோன்றி என்னும் தன்வினை முதல்வினை யெச்சத்தின் முதனிலைகொண்டது. (கூகூ)

சேனைவீரர் செய்கை.

715. வெய்யகதிரோன்விளங்கவுலகெங்கும
துய்யபொற்குன்றின்மேற்றோன்றுதலும்—கைவகுத்துப்
பாராளுமன்னர்படையிரண்டுமார்த்தெழுந்து
போராளப்புக்காரப்போது.

(இ-ள்.) வெய்யகதிரோன் - வெய்யகிரணத்தையுடைய சூ ரியன், உலகு எங்கு உம் - நிலவுலகமுற்றும், விளங்க - இருள் நீங்க, துய்ய - களங்கமில்லாத, பொன் - பொன்மயமாகிய, கு ன்று இன்மேல் - உதயகிரியின்மேல், தோன்றுதலும் - உதயஞ் செய்ய, கைவகுத்து - அணிவகுத்து, பார் ஆளும் மன்னர் - நில வுலகையாளும் அரசர்களுடைய, படை இரண்டு உம் - இரண் டுசேனைகளிலுமுள்ள வீரர்களும், ஆர்த்து எழுந்து - கோஷித் தெழுந்து, போர் ஆளபுக்கார் - போர்செய்யப் புகுந்தார்கள், அ ப்போது - அக்காலையில்.

ஆதித்தனுதயங்கண் டிரண்டுபடையும் பதின்மூன்றும்நாட் சமரபூமி புகுந்தபொழு தருச்சுனனைச் சங்கபதகரொழிந்தார்

வந்தறைகூவிக்கொண்டு யுத்தமண்டலங் கழியக்கொண்டு போயின பின்னைக், காலிங்கராசனையுங் கவுகிலேசுபரனையும் வணிகரையுஞ் சுரசேனரையுஞ் சுற்றுமுற்று மதற்கு விளிம்பாக நிறுத்தி, லக்ஷணகுமாரனையும் எழுபத்தாறாயிரந் தேராட்களையுந் துரியோதனனையு முள்ளே நிறுத்திச் செயத்திரதனையும் பலபதினாயிரம் யுத்தவீரரையும் தாசிமுகத்தின்க ணிற்பாராக்கி, சக்கரயூபம்வகுத்து வேதக்கொடிவிசும்பணுவ அசுவங்களேழுடுக்கவேவி முப்பதினாயிரந் தேர்க்குழாந்தோடு மச்சயூப ரக்ஷிதனாய் நின்றான். பார்பர என்னு முதனிலைத் தொழிற்பெயர் ஈற்றகரங் கெட்டு முதலெழுந்து நீண்டுபரத்தலையுடையது என உலகின் மேல் நிற்றலால் தொழிலாகுபெயர். துய்யகுறிப்புவினைப் பெயரெச்சம் தூய்மைஎன்னும் பண்புப்பகுதி முதல்குறுகல் விகாரம், ஈறுகெடுதலும் யகரத்தோற்றமும் சந்தி, அஎச்சவிகுதி. ()

சல்லியன் முதலியோர்செய்கை.

716. சல்லியனுங்குண்டலனுஞ்சாளுவனுமர்ளுவ்ளுங்
கொல்லவருங்கொங்கணருங்கோசலரும்—பல்லவரும்
கங்கணருங்காந்தாரர்காலிங்கர்தம்மோடு
பொங்கணையாற்போர்புரிந்தார்புக்கு.

(இ-ள்.) சல்லியனும் காந்தாரர் - சல்லியன்முதல் காந்தாரிறுதியாயுள்ளார், காலிங்கர்தம் ஓடு உம் - கலிங்கநாட்டரசரோடும் (கூடி) புக்கு - போர்க்களத்திற் புகுந்து, பொங்கும் கணை ஆல் - கொதிக்கும் அஸ்திரங்களால், போர்புரிந்தார் - (பாண்டவர்சேனையோடு) யுத்தஞ்செய்தார்கள்.

இவ்வகை சல்லியன் துசுபாசனனுள்ளிட்ட மகாபலபராக்கிரமர் தம்மிற்றிரண்டு வீமசேனனை யறைகூவிக்கொண்டுபோய்க் கொல்லவேண்டுமென்று மனத்தெழுந்த களிப்பினோடு யவ்வர்னபூமி புக்கார் அப்பொழுது, இப்பால் துரோணாசாரியன் திஷ்டத்துய்மனால் வகுக்கப்பட்ட மண்டலமென்னும் யூபத்தைப் பிளந்துபுக்கு மகாசேனையோடு வந்து மூடிக்கொண் டெதிர்மலைந்தாரைக் கொன்றுழக்கி, சோமதத்தன் தலைதுமித்துத் துஷ்கேதுவினைத் துண்டஞ்செய்து பாஷணனாய்ப் படவுழக்கிப் பத்

திரசாலனைப் பரிந்துகொன்று குண்டலனைக் குடல்சரிவித்துக் கோசலனைக் குருதியிற் பாய்ச்சிச் சித்ரசேனையைச் சிரந்துணித்துச் சித்திரசேனனையுந் திட்டத்துய்மனைந் தேருந்தேரையும் அழியவெய்து களிற்றினங்களைக் கலைவித்துச் சத்தியசாத்தகியைத் தளர்வித்து, தருமபுத்திரனைக் காத்தவரையெல்லாம யமலோகத்துக் கேற்றித் தருமபுத்திரனை வளைத்துக்கொண்டான். காந்தாரர் என்பதனிறுதியில் எண்ணுமைதொக்குச்சல். போங்கும் என்னும் பெயரெச்சத்தின் ஈற்றுயிர் மெய்கெட்டது. நடவினை - உரு - கூ. கலிங்கநாட்டரசர் காலிங்கர் இது தத்திதாந்த பதம். (எக)

தங்கள் பெரும்படையினழிவுகண்டு தம்மருகு நின்ற அபிமன்னுவைநோக்கி யாதுசொன்னான் தருமபுத்திரன்.

717. மாயன்றானன்றேல் மகனன்றேல் நல்வானவர்கோன்
சேயன்றேயன்றேல் நீ நற்றேர்வேந்தே—நீயன்றி
யானைக்கட்டார்சிதைப்பாராழ்கடல்போல் முன்னின்ற
சேனைக்கட்டார்சிதைப்பார்சென்று.

(இ-ள்.) நல்தேர்வேந்தே-நல்லதேரையுடைய அபிமன்னுவே, (மாற்றார்சேனையின் கட்டழிப்பவர்) மாயன்தான்-மாயையில் வல்லகண்ணமூர்த்தியே, அன்றேல்-அவனல்லனாயின், மகன்-அக்கண்ணமூர்த்தியின் புத்திரனாகியபிரத்தியும்நன், அன்றேல்-அவன்அல்லனாயின், வானவர்கோன் சேய்அன்றேஏ-இந்திரன்புதல்வனாகிய அருச்சுனனல்லவா, அன்றேல்-அவனும் அல்லனாயில், நீஅன்றி-நீயல்லாமல், யானைகட்டு-யானைசேனையின் கட்டை, சிதைப்பார்ஆர் - அழிப்பவரார், ஆழ்கடல்போல் - ஆழ்ந்த கடலைப்போல, முன்நின்ற - நமமுன்னின்ற, சேனைகட்டு - மற்றைச் சேனைகளின் கட்டினை, சென்று (போர்முகத்து)சென்று, சிதைப்பார்ஆர் - அழிப்பவரெவர்.

தேவராசன் ஸ்ரீவாசுதேவனாதல் அருச்சுனனாதல் பிரத்தியுமனாதல் அன்றிச் சக்கரவியூகம் பிளக்கவல்லாராதலில்லை, ஆதலா அருச்சுனன் வருமளவும் நம்படைக்கும் நமக்கும் பிரமாதம்

வினையும், பாணுமின்றூ துரோணுசிரியன் கையிற் பிடியுண்ணுத ல், இவவிரண்டுமானைறு ... யாயிருக்கலால் ஈயிந்த யூயக் ...ப்பினாந் துட்புகுவாய ... ... ருபடிந்திரன் சொல்ல. நி ...யினகன் ஐயா... ... ...பை தோன்றியவழி அன் ... ... அன்றோல் மகனெ னக்கூறிறைர். ...-...- ... ...பதில் ...விகுதி ஐ ம்பால் மூவிடங்கருக்கு ... ... அன்று ... துவ் விகுதி ஐம்பால் மூவி... ...ம் ... ...யனபுகு தல். அன்று அன்னை ... ...க திரிதலும் ... , ...விகுதி ... ...டலின்றாது, ஆயிப் என்னுய வி... ... ... (எஉ)

அதுகேட்டு அபிமன்னு ... ...

718. வி... ... ...
புக்கு ... ...
வெஞ்சிலை... ... ...தோன்றினன்
வெஞ்சின... ... ...மிக்கு

(இ-ள்) புக்கு-(...யிட்டில்) சென்று, வில்பூட்டு இல் இட்டு-வில்லில் ...பூட்டு, ...பட்ட ...ாந்தி (நெற்றியில்) ...ரடட்டங்கட்டி, மிசு-மிகப்ட, சாப் பணி- அம்பறாத்தூணியை, மேற்போக்கி-(முதுகின்மேல்)கட்டி. ... ...ராய் - அதிகோப மாய், வெஞ்சிலையூன்றி - கொடிய வில்லையொன்றையேந்தி, விறல் - வெற்றியையுடைய, கரிபோல் - ஆண்யானைபோல, வெ ம்சினம்வேல் - வெய்யகோபத்தையுடைய வேலையேந்திய, மா ல்மருகன்- கண்ணமூர்த்தியின் மருகனுகிய அபிமன்னு, மிக்கு- போராவேசங்கொண்டு, தோன்றினன் - புறப்பட்டான்.

மிக்கு உரிச்சொல்லடியாகப்பிறந்த இறந்தகாலவினையெச்சம் மிகு பகுதி, முதனிலை யெழுத்தாய்த் தோன்றிய ககரமெய் இ றந்தகால விடைநிலை, உகரக்கேடு சந்தி, உ எச்சவிகுதி. (எ௩)

இதுவுமது.

719. மூரிச்சிலையுமுரட்கோதையுங்கட்டிப்
பூரித்தகண்டம்புனைந்துடனே-வீரக்

கொடிமேற் குரங்குயர்த்திக் கொண்டு க்கே சென்றான்
அடிமேற் றொழுவானை ந்து.

(இ-ள்) மூரி பெரிய, சிலை உம் - வில்லையும் (ஏந்தி) முரண் வலிய, கோதை உம் கட்டி - முன்கைத்தோற் கட்டையையும் கட்டி, பூரிக்க - இறுமாந்து, கண்டு புனைந்து - சமுக்கை யலங்கரித்து, உடன் ஏ - விரைந்து, வீரக்கொடிமேல் - வெற்றிக் கொடியின்மேல், குரங்கு உயர்த்திக்கொண்டு - வானரத்தைச் சித்திரித்துப் பிடித்து, அடிமேல் தொழுவான் - (தருமபுத்திர னுடைய) பாதங்களை வணங்குதற்கு, அங்கு அடைந்து சென்றான் - (அபிமன்யு) அவ்விடத்திற் சென்றான்

இவ்வகை போர்க்கோலங்கொண்டு சன்றியம்பேரை வந்து நமஸ்காரம்பண்ணி நேர்கொண்டு கடுவிசையாற் சென்று. பூரிக்க இறந்தகாலவினையெச்சம் பூரி பகுதி, க சந்தி, த் இறந்தகாலவிடைநிலை, அ எச்சவிகுதி தொழுவான் எதிர் காலவினையெச்சம் தொழு பகுதி. வான் எச்சவிகுதி. (எச)

தருமபுத்திரனைக்கண்டு யாதுசெய்தான் அபிமன்யு.

720 விற்கையாலே தொழுதான் வேந்தனை வேந்தனுக்குத்தான்
பொற்கையாலே தழுவிப்போக்கினான் — நற்குலத்து
மாமனையுந் தந்தையையும் போலவயவேந்தர்
ஏமுனையை யெய்தழிப்பா யென்று.

(இ-ள்.) வேந்தன் ஐ - தருமபுத்திரனை, விற்கை ஆல் - வில் லையேந்தியகையினாலே, தொழுதான் (சென்று) வணங்கினான், வேந்தன் உம் - அத்தருமபுத்திரனும், பொற்கை ஆல் - பொன் னிறம்வாய்ந்த தனதுகைகளால், தழுவி - கட்டித்தழுவி, நல்கு லத்து - நல்லயதுகுலத்துத்தோன்றிய, மாமன் ஐ உம் - உனது மாமனாகிய கண்ண மூர்த்தியையும், தந்தை ஐ உம்போல - உனதுபிதாவாகிய அருச்சுனனையும்போல, வயம் - வெற்றியை யுடைய, வேந்தர்முனை ஐ - அரசர்போர்முனையை, ஏ - ஏயென் னும் இரண்டுமாத்திரைப்போதளவில், எய்து - பாணப்பிரயோ கஞ்செய்து, அழிப்பாய் என்றுபோக்கினான் - சிதைப்பாயென் று அனுப்பினான்.

இவ்வகை நகுலசகாதேவனைச் சென்று தருமபுத்திரனை நமஸ்கரித்து நிற்ப, அபிமன்னுவைத் தழுவிக்கொண்டு தன்றந்தைக்குறுந்தை, அன்று தானவரைக்கொன்று கொடுத்தாற்போல நீயும் என்பகை தணித்துத் தருமபாலகன் அபிமன்னுவுக்கு விடைகொடுப்ப. போதல் வினைக்கு அபிமன்னு இயற்றுதற் கருத்தாவும், போக்குதல் வினைக்குத் தருமபுத்திரன் ஏவுதற்கருத்தாவுமாக நிற்றலால் போக்கினுன் இருவரின்முடியும் ஒருவினைமுற்று. ஏ யென்னும் எழுத்துத்தன்னையுணர்த்தாது காலவரையறைமேல் நிற்றலால் விட்டவாகுபெயர் "ஏமயாறு ளவில்" என வருதல் காண்க. (எரு)

பின்னும் யாதுசெய்தான் அபிமன்னு.

721. மற்றொழிந்த தந்தையரைத் தாளிறைஞ்சி மாமணித்தேர்
உற்றங்கே மேல்கொண் டுருமுப்போற் — செற்றதிர்ந்து
சேனையின்முன் சென்று திறலழிக்கப் புக்கானே
யானையின்மேற் சீயம்போ லார்த்து.

(இ-ள்.) ஒழிந்த தந்தையர் ஐ - (தருமன்) ஒழிந்த நகுலசாதேவரை, தாள் இறைஞ்சி - பாதம்வணங்கி, மா - பெரிய, மணி-மணி (கட்டிய) தேர் உற்று - தேரையடைந்து, அங்கு ஏ மேல் கொண்டு - அத்தேரின்மேலேறி, உருமுபோல் - இடிமுழக்கம்போல, செற்று - கோபித்து, அதிர்ந்து - (சேனை) வெருவ வீரகோஷஞ்செய்து, யானை இன் மேல் - யானைக்கூட்டத்தின்மேற் செல்லும், சீயம்போல் - ஆண்சிங்கம்போல, ஆர்த்து - கோஷஞ்செய்து, சேனை இன் முன் சென்று (மாற்றார்) சேனைமேற்சென்று, திறல் அழிக்க - (அவர்கள்) வலிமையையழிக்க, புக்கான் - புகுந்தான்.

இவ்வகை தருமபுத்திரனை விடைகொண்டு பின்பு நகுலசாதேவரையுங் கடோற்கசனையும் நமஸ்கரித்து மற்றவரையும் விடைகொண்டு வெம்முனையின்மேற்போன வீமசேனனைத் தேடிக் காணாது, மற்றவனையும் அருச்சுனனையும் ஸ்ரீவாசுதேவனையும் நினைந்து நமஸ்காரம்பண்ணிச் சீக்கிரவேகத்தாற் றேர்கடாவி முடுகச்சென்று சத்துருக்கள் சேனைமுகத்துத்தாக்கி. "கடவுளை

யடிதொழுது" என்றார்போலத் தகைமையாரைத் தாளிறைஞ்சி எனவந்தது - இறைஞ்சி, சென்று இறந்தகாலவினையெச்சங்கள் இறைஞ்சுபகுதி, உகரங்கெடுசந்தி, இ எச்சவிகுதி-செல்பகுதி, முதனிலையெழுத்தாய்த்தோன்றிய றகரமெய் இறந்தகாலவிடைநிலை. உகரங்கெடுசந்தி, உ எச்சவிகுதி (எசு)

அபிமன்னுவின்செய்கை.

722 அதிரதர்கள்சேனைப்பெருவெள்ளமாழ்கடலினுள்ளே
முதிர முறைமுறைதேரோட்டி—அதிரில்லா
மாதவிதான்பெற்ற மரக்கலந்தானோடிற்றே
போதவிழ்தார்மன்னர்குழாம்புக்கு

(இ-ள்) அதிரதர்கள் - அதிரதர்களுடைய, சேனை என்னும்-சேனையாகிய, ஆழ்கடலின் உள்ளே - ஆழ்ந்தகடலினிடத்தே, முதிர - மடங்காது, முறைமுறை வரிசைப்படி, அதிர் இல்-கெடுதலில்லாத, வளர் பேரழகு (வாய்ந்த), மாதவிதான்பெற்ற - மாதவிபெற்ற, மரக்கலந்தான் - (அபிமன்னுவாகிய) கப்பலானது. தேரோட்டி - தேரைச்செலுத்தி, போது அவிழ் - மலர் விரிந்த, தார்-மாலையை (அணிந்த) மன்னர் - பகையரசருடைய, குழாம்புக்கு-கூட்டத்திற்புகுந்து, ஓடிற்று - ஓடியது

அதிரதர்கள் வில்வித்தையில் வல்லவராய் ஆயுதங்களையேந்திப் பலரோடும்போர்செய்வோர், தன்னையும் பரிவாரத்தையுங் காத்துப் போர்செய்வோர் என்றலும் ஒன்று. முறைமுறை பன்மைப்பொருளில்வந்த அடுக்குத்தொடர் அதிர் முதனிலைத் தொழிற்பெயர். சேனையைக் கடலாகவும் அபிமன்னுவை மரக்கலமாகவுங்கூறியது உருவகவணி மன்னர்குழாம் ஒன்றன் கூட்டத்தற் கிழமைப் பொருளில்வந்த ஆறும்வேற்றுமைத் தொகை நிலைத்தொடர். (எஎ)

இதுவுமது.

723. முன்னின்றதுரிசிப்படைமுழுதுந்தூரறுத்துப்
பின்னின்றரசர்களைப்பிற்படுத்தி—முன்னின்ற
சக்கரக்கையூபங்கலங்கச்சரந்தொட்டான்
சக்கரத்தான்றங்கைமகன்.

(இ-ள்.) சக்கரத்தான் - சக்கரத்தையேந்திய கண்ணமூர்த்தியின், நங்கைமகன் - தங்கை புத்திரனாகிய அபிமன்னு, முன்நின்ற - தன்முன்னே நின்ற, தூசி படை முழுதும்-குதிரைச்சேனையிலுள்ள வீரரெல்லாரையும், தார் அறுத்து - அடியோடறுத்து, பின்நின்ற - பின்னேநின்ற, அரசர்களை - (துணையாக வந்த) மன்னர்களை, பின்படுத்தி - பின்னிடச்செய்து, முன்நின்ற - முற்பட்டுநின்ற, கை - வகுப்பினையுடைய, சக்கரயூபம் - சக்கரயூபமானது, கலங்க - பிளவுபட, சரம் தொட்டான் (கண்ணமூர்த்தியிடத்துப்பெற்ற) அம்பைப் பிரயோகஞ்செய்தான்.

ஸ்ரீவாசுதேவன் பக்கல்பெற்றதோர் அஸ்திரத்தினை யுச்சரித்துத் தூசிமுகத்துநின்ற யுத்தவீரரனைவரையுங் கலங்கவுழக்கி, எதிர்மலைந்தாரை மலங்கநூறி, துரோணகிருபகர்ணனரையும் அசுவத்தாமனையுஞ் சிலையறுத்துச் சல்லிய சகுனி முதலியோரை கருநிறத்திடை யம்புபாய்ச்சி, மற்றவரைச்சூழ்ந்த யானைதேர் குதிரை கருவிகாலாட்களையுங் கட்டழித்துத் துரோணாசிரியனால் வகுக்கப்பட்ட சக்கரயூபத்தைப் பிளந்துள்புக்குச் சேனைமுகத்தையிரித்து, கசதுரங்கபதாதிகளை நிலைப்படுத்திப்பின்னும். சரம் கிழிப்பது. நின்ற என்னும் பெயரெச்சத்தின் அகரவீறு தொகுத்தல். தொட்டான் இறந்தகாலவினைமுற்று தொடுபகுதி, முதனிலை யெழுத்தாய்த் தோன்றிய டகரமெய் இறந்தகால விடைநிலை, உகரக்கேடுசந்தி, ஆண் உயர்திணை யாண்பால்விகுதி. (எஅ)

இதுவும் அது.

724. எவ்விடத்தனென்னிலிமைப்பளவிலெங்கெங்கும்
அவ்விடத்தானாகியமர்புரிந்தே—யெவ்வுடலுங்
கூறுகூறாக்கிக்கொடுஞ்சினம்வாய்கூற்றம்போல்
வேறுவேறாய்ப்பொருதான்வேந்து.

(இ-ள்.) வேந்து - அபிமன்னு, எ இடத்தன் என்னில்-எந்த இடத்திலுள்ளானென்று (ஒருவரையொருவர்) வினவில், இமைப்பு அளவில் - இமைகொட்டும் அளவில், எங்கு எங்கு உம்- எவ்விடத்திலும், அ இடத்தான் ஆகி - அந்த அந்த இடத்திலுள்ளானாகி, அமர்புரிந்து - போர்செய்து, எ உடல் உம் - எவ்

வகைப்பட்டோர் சரீரத்தையும், கூறுகூறு ஆக்கி - துண்டுசெய்து, கொடுஞ் சினம்வாய் - கொடிய கோபம்வாய்ந்த, கூற்றம்போல் - இயமனைப்போல, வேறு வேறு ஆய் - அவர் அவர் வன்மைக்குப்பொருந்த, பொருதான் - போர்செய்தான்.

இடைப்பு என்னும் தொழிற்பெயர் பெயரெச்சத்தின்மேல் நின்றது. ஆய்மெய்யவை யெனச்சுதிரிபு - எங்ஙனங்கு பன்மைப் பொருளில்வந்த ஆடுக்குந்தனார்- உடைமையுற்றது. யேங்குடமன பாகுபெயராய் அரசனையுணர்ந்தது. பொருதான் இறந்தகாலவினைமுற்று பொருபகுதி, த் இடைநிலை, ஆன் ஆண்பாற் படர்க்கைவிகுதி. (எக)

725. தார்த்தரட்டிசேனையென்னுஞ்சாதுரங்கத்தாழ்கடலைத்
தீர்த்திரட்டியோட்டித்திசைதூவி—வீழ்த்துருட்டி
மாதவிதான்பெற்றமதகயந்தானோடிற்றே
போதவிழ்தார்மன்னர்குழாம்புக்கு.

(இ-ள்.) தார்த்தராட்டிரன் - திருதராட்டிரன் மைந்தனாகிய துரியோதனனுடைய, சேனை என்னும்-சேனையாகிய, சாதுரங்கம் தாழ் கடல் ஐ-ரதகஜ துரக பதாதியென்னும் ஆழ்ந்தகடலை, தீர்த்து இரட்டி-நிலைகெட அசைந்து, திசை - திசைகள்தோறும், ஓட்டி - சிதறவோட்டி, போதுஅவிழ்தார் - மலரவிழ்ந்த மாலையையணிந்த, மன்னர்குழாம் - அரசர்கூட்டத்துள், புக்கு- புகுந்து, தூவி (அம்புகளைச்) சிந்தி, வீழ்த்து உருட்டி - (அவர்களைத் தலையறுத்து) வீழ்த்து உருட்டி, மாதவிதான்பெற்ற - மாதவிபெற்ற, மதகயம்தான் - (அபிமன்னுவாகிய) மதத்தையுடைய யானையானது, ஓடிற்று - ஓடியது.

தார்த்திரட்டி எனப்பாடங்கூறி வகுப்பின்றிரட்சியையுடைய எனப்பொருள் கூறுவாரும் உண்டு. இவ்வகை சக்கரயூபம்பினுள்புக்கு மகாயுத்தஞ்செய்கின்ற அபிமன்னுவுக்குத் துணைப்போவாரைப்பெறாது நின்றளவில், வீமன்றன்னொடு போர்மலைந்த சத்துருபட்சத்தாரை விநாசஞ்செய்து விரைவில்வந்து தருமபுத்திரனைப் பணிந்துநின்றான், அப்போது வீமசேனனைநோ

[illegible] சொல்லுவார் - ஸ்ரீவாசுதேவர் சகுனியை [illegible]
[illegible] துரோணாசாரியன் [illegible]
[illegible] துரியோதனனை [illegible]
கொண்டு சகாதேவன் [illegible]
[illegible]
[illegible]
[illegible] இது [illegible]
[illegible] இட்டு [illegible]
[illegible]
[illegible]
[illegible]
[illegible] சினக்கும் [illegible]
[illegible] போரவிழ் [illegible] (அ0)

வீமசேனன் துருமபுத்திரனை நோக்கிக்கூறல்.

726 காலனைய [illegible]
பாலனை [illegible]—ஏலக்
குநலைவாய்நாறுங் குருநாடர்கோவே
மதலையாய்வாழுதியோவின்று.

(இ-ள்) காலன் ஏ அன்ன-இயமனையேயொத்த, சடலபடை நூர்தம்பல்-[illegible] அளவிறந்த சேனைவீரர்மேலே, பாலன் ஐ ஏ படை செல்ல - அபிமன்னுவாகிய பாலனையே யச்சேனை மேல் போர்க்குச்செல்ல, ஏல-டனைய் பொருந்த, விடுத்தாய்-ஏவி னாய், குருநாடர்கோவே - குருநாட்டாரரசனாகிய தருமபுத்திர னே, குநலைநாறும்வாய் - குநலைச்சொல்பேசும்வாயையுடைய, மதலைஆய் (இன்னும்) சிறுபிள்ளையாய், வாழுதியோ - வாழு கின்றாயோ.

அதுவன்றியு முன்னஞ்சகுனியது மாயச்சூதினு லிராச்சிய முந் தோற்றேந்திழையையுந்தோற்றுத் துசுபாசனனாற்கேசக் கிரகணஞ்செய்து பாரறியப்பரிபவப் படுவித்தாய், அதுவுமன்றி யும் வனவாசமும் உழக்குமாக்கினை, இன்று துரோணனையுள்ளி மகாபராக்கிரமரைக்கொன் றிராச்சியம்பெறுவதாக இருக்

இன்றேழுக்குச் சோடசவருஷமும் நிரம்பிற்றில்லாதபாலனைப் படையின்மேல்விடுத்தாய், ஆவறுக்கொரு பிரமாணபுகின் ஒரு மூர்த்தத்தின் யாங்களும் படுகின்றோம் எம்பெருமானே பிழை செய்தாயென் றெல்லையில்லாததோர் சஞ்சாரத்தோடும் யாவரு னம்போயினான். படைஞர்பலர்பாற் பட்டார்க்கைப்பொருட் பெயர்ச்சொல் படை பகுதி, ஞகரம் பெயரிடைநிலை, அர் பலர்பால்விகுதி. வாழுதி முன்னிலையொருமையெதிர்காலவினைமுற்று வாழ்பகுதி, உ சாரியை, தி விகுதி. சப்பவிபாலா. இ முன்னிலையொருமைவிகுதி. இவ்விகுதி எதிர்காலங்காட்டி நின்றது. ஏலங்கழ்காலவினையெச்சம் ஏட்டுறி, ஆ விகுதி. (அங)

727 நன்மகான் திருவடியைக் கைதொழுது தண்டேந்திப்
பொங்கோதம் போலக் கொதித்துப் போயினான் அங்கோதை
மால்வண்ணன் தன்மருகன் தன்மதலை நின்றளவுங்
காலவண்ணனாய்க் கடிது.

(இ-ள்) நன்மகான் - நல்லதர்மநெறியையுடைய தருமபுத்திரனது, திருஅடிஐ கைதொழுது - திருவடிகளைக் கைகூப்பிவணங்கி, தண்டு ஏந்தி - கதாயுதத்தையேந்தி, பொங்கு ஓதம்போல - கொதித்து நிலைபெயருங் கடல்போல கொதித்து முழங்கி, அங்கோதை - அழகிய துழாய் மாலையணிந்த, மால்வண்ணன் - மேகம்போலக் கரியநிறமுடைய கண்ணமூர்த்தியின், மருகன் - மருகனும், தன்மதலை-தன்புத்திரனுமாகிய அபிமன்னு, நின்ற அளவு உம-நின்றுபோர்செய்யும் அவ்விடமட்டும், காலவண்ணன் ஆக - கால்நடையாக, கடிதுபோயினான் - விரைந்துசென்றான்.

இவ்வகை வீமசேனன்வெகுண்டெழுந்து காலாளாய்த் தண்டாயுதம்பிடித்தோடித் தூசிமுகத்தின்கண்ணின்ற துரியோதனன்சேனையோடுதாக்கி. நின்றஎன்னும் இறந்தகாலப் பெயரெச்சத்தின் அகரவீறுதொகுத்தல். கடிது உரிச்சொல்லடியாகப் பிறந்த ஒன்றன்பாற் படர்க்கைக்குறிப்பு வினைமுற்று கடிபகுதி, து ஒன்றன்பால்விகுதி. இம்முற்று எச்சமாய்நின்றது. பகுதிப் பொருள் விகுதியேற்ற உரிச்சொல் எனினும் அமையும். து பகுதிப்பொருள் விகுதி. (அஉ)

இதுவும் அது.

728. ஆனைகளுந் தேருமடையப் பிளந்துழ்த்துச்
சேனைகளைத் தண்டாற் சிதைவித்துத்—தானை
முடியரசைக் கொன்றுடக்கி முரிநீர் சூழ்ந்த
படியரசைக் கொன்றான் பரிந்து.

(இ-ள்.) ஆனைகளும் தேரும் - ஆனைகளையும் தேர்களையும், அடைய - ஒருசேர, பிளந்து வீழ்த்து - பிளந்துந் தரையிலடித்து, சேனைகளை - சேனாவீரர்களை, தண்டினால் சிதைவித்து - கதாயுதத்தாலழித்து, தானை - சேனை முகத்தில் நின்ற, முடிஅரசை - மகுடவர்த்தனர்களை, கொன்றுஉடக்கி - கொன்றுகலக்கி, முரி - பெரிய, நீர்சூழ்ந்த - கடல்சூழ்ந்த, படிஅரசை - உலகாளு மன்னர்களை, பரிந்து - அன்புகூர்ந்து, கொன்றான் - வதைத்தான்.

யுகாந்தகாலத் துக்கிரத்தோடெழுந்த ஊழிக்காற்று முகாந்தாக்கினியும்போலக் கடூராங்க பலத்தையுந் தகரப்படுத்தி, மகாசேனையைப் பொருது நேர்தோறுஞ் சிதறுவித்துக் கூற்றமேபோலக் கொதித்தெழுந்து சேனையைச் சுருங்குவித்து, அபிமன்னுவுக்குத் துணையாக வீமசேனன் வருகின்ற அதிவேகமுந் தன்னுடைய பெரும்படையி னூற்றமையுங்கண்டு செயத்திரதனைச் சென்றெய்தி. சிதைவித்து பிறவினையிறந்தகால வினையெச்சம் சிதை பகுதி, வி பிறவினை விகுதி, அனைத்தும் ஒருபகுதி, த் சந்தி, த் இறந்தகாலவிடைநிலை, உ எச்சவிகுதி. உடக்கி இறந்தகாலவினையெச்சம் உடக்கு பகுதி, உகரக்கேடு சந்தி, இ எச்சவிகுதி. (அஅ)

துரியோதனன் கூறல்.

729. நின்றகுலமதலைநம்படையைநேராகக்
கொன்றுகுவித்திடுவன்கூற்றம்போல்—இன்றிவனை
விண்ணுலகுக்கேற்றுயேல்வீமன்றுணைபுகுந்து
மண்முழுதுந்தாளுவான்மற்று.

(இ-ள்.) நின்ற - இங்குப் போர்செய்து நின்ற, குலமதலை - குருகுலப் புதல்வனாகிய அபிமன்னு, நம்படைஐ - நமதுசே

லனையை, நேர் ஆக கொன்று - நேர்ந்து கொலைசெய்து, கூற்றம் போல் - இயமனைப் போல, கொன்று குவித்திடுவர் - கொலை செய்து குவிப்பர், இவன் ஐ - இந்த அபிமன்னுவை, இன்று - இப்பொழுது, விண்ணுலகுக்கு - வீரசுவர்க்கத்திற்கு, ஏற்று யல் - ஏற பேற்றுதலிடல், வீமன் துணை பகர்ந்து - வீமசே னனை (அவனுக்கு) துணையாகச் சென்று, மண்முழுதும் - மண் ணுலகமுற்றும், தானே ஆள்வானை - தானேயாள்வான்.

யாவராலும் பிளக்கவரிய சக்கரவியூகத்தைப் பிளந்து உட்புகு ந்தருமேறென மகாசேனையைக் கொல்லாநின்ற அபிமன் னுவுக்குத் துணையாக வீமசேனன் கூடுமாகில், காற்று மெரி யும்போல நம்மகாசேனையை நீறாக்குங் கண்டாய் மற்றவன் கூடுவதன்முன்னம் பரமேசுவரன் பக்கற்பெற்ற கொன்றை மாலையாற்றடுத் தபிமன்னுவைத் தனியனாக்கிக் கொல்விப் பாயாகெனக் கேட்டு மற்றவனும் வருத்தத்தோடுடன்பட்டு. குவித்திடுவன் வினைமுற்று. குவி பகுதி, து சாரியை, இடு பகு திப்பொருள்விகுதி, தகரத் தோற்றமும் உகரக்கெடுதலும் சந்தி, அனைத்தும் ஒரு பகுதி, வகரமெய் எதிர்காலவிடைநிலை, அர விகுதி. ஏற்றுய் முன்னிலை யொருமை யெதிர்மறை வினைமு ற்று ஏற்று பகுதி, உகரக்கெடு சந்தி, ஆ எதிர்மறை விகுதி, அனைத்தும் ஒரு பகுதி, ஆய் முன்னிலை யொருமை விகுதி, விகுதியின் ஆகாரம் தொகுத்தல். (அசு)

செயத்திரதன் செய்கை.

730. மன்சொன்னசூழ்கழற்கானமன்னவர்கண்மாமுனைமே
முன்சென்றமூரிந்தேர்கால்காப்பப் பின்சென்று [ன்
கொற்றவன்றான்வந்தமரிற்கூடியுமையீசனபாற்
பெற்றவரத்தாற்றடுத்தான்பின்.

(இ-ள்.) மன்சொன்ன - துரியோதனன் கூறிய, சூழ் - ஆலோசனையின்படி, கழல்கால்-வீரகண்டையையணிந்தகாலை யுடைய, மன்னவர்கள் - அரசர்கள் செய்யும், மாமுனைமேல்- பெரிய போரில், முன் சென்ற - முன்னே சென்ற, மூரிதேர் - -பெரிய தேர்வீரர், கால்காப்ப - சூழ்ந்துகாக்க, பின்சென்று - தான்பின்னே சென்று, கொற்றவன்தான் வந்து - செயத்திர

தன்வந்து, அமர்இல்கூடி - போர்முனையிற்கூடி, உமைஈசன் பால் - உமாதேவியார்க்குந் தலைவருகிய சிவபெருமானிடத்து, பெற்றவரத்தால் - தான்பெற்ற கொன்றை மாலையால், தடுத்தான் - வீமசேனனைத்தடுத்தான, பின் - பின்பு.

தான் முன்னம் வீமசேனரு லபசெயப்பட்ட அவமானந் தீரவேண்டிப் பரமேசுரரைநோக்கித் தவமபண்ண, ஆங்கவரும் பிரசன்னராா யுன்னபிப்பிராயம் என்னெனறலும் பாண்டவரைச் செயஞ்செய்யுமாறெனக் கருள்வாயாகென்றிரப்பச், சக்கரபாணி சகாயராகிய பாண்டவரை யுன்னல் வெல்வரிது மற்றவரை யொருநாள் மானபங்கப் படுத்தியென்று தஞ்சடாமகுடத்துங் கொன்றைமாலையைப் பிரசாதிப்பப் பெற்றுப் போந்த கொன்றைமாலையால் வீமசேனன துணை புகுதாதுவிலக்கியிட்டான் செயந்திரதன். மனஅன் ஈறுதொக்குநின்ற பெயர்ச்சொல். மாலையைப் பெறுதற்கு வரம் காரணம் ஆதலால் காரியத்தைக் காரணமாக வுபசரித்தார்.(அரு)

வீமசேனன் செய்கை.

731. கனறிமயரில்கடிதெழுந்துகாலன்போல்
வென்றிசேர்வீமன்விரைந்தேகிக்—கொன்றைத்
தொடைமாலைகண்டளவிற்கைதொழுதான்வீமன்
அடன்மாலைவேலார்முன்றங்கு.

(இ-ள்.) கன்றி - மனவயிரங்கொண்டு, மயர்இல் - சிறிதுஞ் சோம்பலில்லாமல், கடிதுஎழுந்து - விரைந்தெழுந்து, காலன்போல் - இயமனைப்போல, வென்றி சேர் - வெற்றி மிக்க, வீமன் விரைந்து ஏகி - வீமன போர்முனையில் விரைந்து சென்று, கொன்றை தொடைமாலை - சிவபெருமான்கொனறை மாலையை, கண்ட அளவில் - கண்ட அப்பொழுதே, வீமன் - அவ்வீமசேனன், அடல்மாலை - வெற்றி மாலையைப் புனைந்த, வேலார்முன் - வேலையேந்திய அரசர்முன், ஆங்கு - அவ்விடத்தில், கைதொழுதான் - கைகூப்பிவணங்கிநின்றான்.

செயத்திரதன் விட்ட கொன்றை மாலையைக் கண்டு, அதிவேகத்தோடுஞ் செல்கின்ற வீமசேனனு மகாசேனையுந் தடு

ப்புண்டு குருவசனம் பிழையாமல் நமஸ்காரஞ் செய்துநின்றான் வீமசேனன். கன்றி இறந்தகால வினையெச்சம். கன்று பகுதி, உகரக்கெடு சந்தி, இ எச்சவிகுதி. தொடை - செயப்படு பொருளில்வந்த தொழிற்பெயர் தொடு பகுதி, உகரக்கேடு சந்தி, ஐ தொழிற் பெயர் விகுதி. அடல் கொல்லுதல் அடு பிரதாபத்தின்மேல் நிற்றலால் தொழிலாகுபெயர் அடு பகுதி, உகரக்கேடு சந்தி, அல் தொழிற்பெயர் விகுதி. தொடை மாலை இன்னிசையுட்ட வர்க்க ஒருபொருட்கிளவி. (அசு)

திஷ்டத்துய்மன் வீமனை நோக்கிக் கூறல்.

732\. நின்றகுலமதலைநின் னுடையமைந்தனிவ
னென்றுகருதாதிங்கென் செய்தாய்—இன்றுதவி
மண்ணரசர்முன்னேமதலையைநீகாவாயேல்
விண்ணரசனுவான்விரைந்து.

(இ-ள்.) நின்ற - (போர்முகத்து) நின்ற, குலமதலை - இந்தக்குலமைந்தன், நின் உடைய மைந்தன் - உனது புத்திரனே, இவன் என்று கருதாது - இவனென்று நீ கருதாமல், இங்கு - இவ்விடத்தில், என் செய்தாய் (இந்தக் கொன்றை மாலையை யோர் பொருளாகக் கருதி) என்னகாரியஞ்செய்தாய், இன்று உதவி - இன்று (போர்முனையிற்புகுந்து) உபகரித்து, மண்அரசர்முன்னே - நிலவுலகையாளும் அரசர் முன்னே, மதலையை - இப்பிள்ளையை, நீகாவாயேல் - நீகாவாதுவிடில், விரைந்து - அதிசீக்கிரத்தில், விண் அரசன் ஆவான - (அபிமன்னு) வீர சுவர்க்கத்திற்கு அரசனாவான்.

உன்புத்திரன் அபிமன்னு தனியே நின்று சத்துரு பட்சத்தாருடன் மகாயுத்தம்பண்ணி யதிகிலேசப்படக்கண்டு நீசென்றுதவி மற்றவனைக் காத்து மலைந்தார் சேனைகுலைந்தோடக் கொல்லாது நின்றனையென்று கூறி, கொன்றை மாலையைக் கடந் துட்புகாநின்ற திஷ்டத்துய்மன் சாத்தகி கடோற்கசத் தொடக்கத்தாரைத் தகைந்து மிகவெகுண்டு. உதவி இறந்த காலவினையெச்சம் உதவு பகுதி, உகரக்கேடு சந்தி, இ எச்ச விகுதி. (அஎ)

வீமசேனன் கூறல்.

733. எங்கள்குடிப்பிறந்தாரெல்லாமிறந்தாலுஞ்
சங்கரன்றன்மாலைதனைக்கடவோம்— அங்கவனும்
பட்டானேயாகிற்படுத்தான்றனைப்படுத்தென்
கட்டாவியுங்களைவன்காண்.

(இ-ள்.) எங்கள் குடிப்பிறந்தார் எல்லாம் - எங்கள் குடியிற் பிறந்தவரெல்லாரும், இறந்தாலும் - (ஒருசேரச்) செத்தாலும், சங்கரன்தன்மாலை தன் ஐ - சிவபெருமானுடைய கொன்றைமாலையை, கடவோம் - (சிறிதும்) கடக்கோம், அங்கு - அவ்விடத்தில், அவன் உம் பட்டான் ஏ ஆகில் - அவனும் இறந்தானானால், படுத்தான தன் ஐ - கொன்றவனை, படுத்து - கொன்று - என்கட்டு ஆவிஉம் - என்னுடைய உறுதியைத்தரும் பிராணனையும், களைவன் - நீக்குவன்.

படுத்து இறந்தகால வினையெச்சம் படு பகுதி, த் சந்தி, த் இடைநிலை, உ எச்சவிகுதி. என் கட்டாவி அவனும் உயிரும் வேறில்லாமையால் ஒற்றுமைக் கிழமைப் பொருளில் வந்த ஆறும் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர். (௮௮)

அபிமன்னுவின் செய்கை.

734. தேர்மேலுமாமேலுந்திண்கருங்கைவெண்கோட்டுக்
கார்மேலுங்காலாட்கடன்மேலும்—வீரன்
விலங்கினார்தம்மேலும்வெஞ்சரங்கவேவக்
கலங்கினார்மன்னர்களத்து.

(இ-ள்.) வீரன் - அபிமன்னு, தேர்மேலும் - (அரசர்கள்) தேரின் மேலும், மாமேலும் - குதிரைகளின் மேலும், திண் திண்ணிய, கருங்கை - கரிய துதிக்கையையும், வெண்கோடு- வெள்ளிய கொம்பையு முடைய, கார்மேலும் - மேகம்போன்ற யானைகள் மேலும், காலாள் கடல் மேலும் - பதாதியாகிய கடலின் மேலும், விலங்கினார் தம்மேலும் - (போரினின்று) விலகினவர் மேலும், வெம்சரங்கள் தூவ - கொடியசரங்களை யேவ, மன்னர் - அப்பகை யரசர்கள், களத்து - போர்க்களத்தில், கலங்கினார் - மனநிலை குலைந்தார்கள்.

நாற்பத்தெட்டி யோசனை பார்த்தகடற் சேனைவெள்ளந் தைப் படவுழக்கிச் சுருக்குவித்துப், புகவரியதோர் மகாவனத்தைப் பொங்கெரிபரந்து சுட்டாற்போல மதயானையுங்கொடித்தேருமாவுங் காலாளு நெருங்கக் கட்டிய பதாதி சங்கத்தையுங் கோலாகல மெனக்கலக்கிக் கொல்லாநின்ற அபிமன்னுவை, துரோண கிருப அசுவத்தாமா வுள்ளிட்ட பெருந் தேராட்களுந் திருதராஷ்டிர ரோடுஞ் சென்று சரமாரி பொழிந்து தாக்கினார். ஏவவசாரணப பொருளின்மேல் நிற்றலால் இவ்வெச்சம் இறந்தகாலத்தின் மேல் நின்றது, இது கலங்கினார் என்னும் பிறவினைமுதலின் முடிவிலே கொண்டது. ந - வினை - உந் - கு - ஆல உணாக. கருங்கை வெண் கோட்டுக்கார் இல் பொருளுவமையணி. (அக)

துன்முகன் செய்கை.

735. வார்கடாமால்யானைமன்னன் குலமதலை
போர்கடாவெம்முகத்த போர்வாளி—போர்புகா
முன்புக்கார் எய்தார்முகங்கூர்நெடும்பகழி
யொன்பதுகாறெய்தா னுடன்று.

(இ-ள்.) வார் - மிக்க, கடாம்மால் - மதமயக்கத்தை யுடைய, யானை - யானைச் சேனையை யுடைய, மன்னன் - அருச்சுனனுடைய, குலமதலை - குலபுத்திரனது, போர்கள்தா - போர் முகங்களில் ஊடுருவிச் செல்லும், வெம்முகத்த - வெய்ய நுனியையுடைய, போர்வாளி - போர்த்தொழிலை யுடைய அம்புகள், போர்புகாமுன் - போர்முகத்தில் புகுதற்குமுன்னே, புக்கார் - போர்க்குவந்த துன்முகன படைவீரர்கள், முகம் கூர் - கூர்மைமிகுந்த, நெடும்பகழி - நெடிய பாணங்களை, எய்தார் - பிரயோகஞ் செய்தார்கள், உடன்று - கோபித்து, ஒன்பதுகாறு - ஒன்பதுடாணம் வரைக்கும், எய்தான் - (துன்முகன்) பிரயோகஞ் செய்தான்.

தாவாளி, வெம்முகத்தவாளி, போர்வாளி எனப்பிரித்து முன்னது வினைத்தொகை நிலைத்தொடரும் பின்னது குறிப்புவினைப் பெயரெச்சத் தொடரும் மற்றது உருபும் பயனுந்

தொக்க இரண்டாம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடரு னாகக் கொள்ள நிற்றலால் தாவாளி வினைத்தொகை நிலைத் தொடரில் வந்த இடைப்பிறவரலின் றேட்க வேணு. கொ ள்க. வாளிசாதி யொருமை. இவ்வகையாங் கெதிர்ப்பட்டவ னாயு மஸ்திர சஸ்திரங்களு மறுத்து மாற்றி மற்றுநின்ற க்ஷ த்திரியர் கூட்டங்களையுங் கலங்கச் செய்தார்க்கின்ற அபிம ன்னுவினைத் துன்முகன் விலங்கியாது பட்டானே னெனில்.

இதுவும் அது.

736. வடிக்கணையான்வில்லுதைந்தவாயம்புபாய
அடற்சிலையுந்தேருமழிந்து—பிடித்திழிந்த
வாளுந்தன்கேடகமுமண்மேல்விழவிழுந்தான
றோளுந்தலையுந்துணிந்து.

(இ-ள்.) வடி - வடித்தலைப்புடைய, கணையான் - அம்பினையு டைய அபிமன்னுவினை, வில்உதைந்த - வில்லினின்றுஞ் செ ன்ற, வாய்அம்பு - கூரியஅம்பு, பாய - தைத்துருவ, அடல்சி லைஉம் - வலிமையை யுடைய வில்லும், தேர்உம் அழிந்து - தேரும் சிதைந்து, பிடித்து - கையிற் பிடித்து, இழிந்த - (தேரினின்றும்) இறங்கிய, வாளும - வாளாயுதமும், தன் கேடகம் உம் - தனது கேடகமும், மண்மேல்விழ - மண்ணு லகின்மே லற்றுவிழ, தோள்உம தலைஉம் துணிந்து - புய முந் தலையும் அறுபட்டு, விழுந்தான் - (நிலவுலகின் மேல்) விழுந்தான்.

இவ்வகையினாற்றேருஞ்சிலையு மழிப்புண்டு மார்புந்தோளு மொடிப்புண்டு வாளுங்கேடகமும் பிடித்தொடித்துத் தோ ளுந்தலையு மறுப்புண்டு துன்முகன் பட்டுவீழ்ந்தலு மதுகண்டு அதிபயங்கர மெய்தி யிரிந்திட்டது துரியோதனன் சேனை. சி லையுந்தேரும்மழிந்து உயர்திணையைத் தொடர்ந்த அஃறிணை ப்பொருள்களும் உயர்திணை முடிபெற்று நிற்றல் திணைவழு வமைதி. ந - பெய - உசு - சூ. இழிந்த இறந்தகாலபெயரெச் சம் இழிபகுதி. உடையவன் றொழிலையுடைமை மேலேற்றி இழிந்தவாள் என்றார். (௯௧)

அப்பால்.

737. அங்கர்கோனுள்ளிட்டரசர்குழாமெல்லாம்
எங்கடாபோவதினியென்றுப்—பொங்கிவரும்
தேரரசர்சூழ்ந்தெரிசரமேற்றூவினார்
போரரசரெல்லாம்புகுந்து.

(இ-ள். அங்கர்கோன்உள்ளிட்ட - அங்கநாட்டாரரசனாகிய கன்னனுள்ளிட்ட, அரசர்குழாமெல்லாம் - இராசாக்கள் கூட்டங்களெல்லாம், எங்கு - எவ்விடத்தில், அடா—, இனிபோவது - இனி நீ செல்வது, என்று - என்று சொல்லி, பொங்கிவரும் - கோபித்துவாராநின்ற, தேர்அரசர்சூழ - தேரையுடைய அரசர்கள்சூழ்ந்துவர, போர் - போர்த்தொழிலையுடைய, அரசர்எல்லாம் - அந்த அரசர்கள் யாவரும், புகுந்து - (போர்க்களத்தில் ஒரேமுகமாக) புகுந்து, தெரிசரம் - ஆராய்ந்தெடுத்த பாணங்களை, மேல் - (அபிமன்னு) மேல், தூவினார் - சொரிந்தார்கள்.

உள்ளிட்ட ஈறுதொக்குநின்ற இறந்தகாலப்பெயரெச்சம். உள் என்னும் பெயர்ச்சொல் தன்னை வினைப்படுத்த வரும் இடு என்னும் வினைப்பகுதியோடுகூடி யொருசொற்றன்மைப்பட்டு நின்ற உள்ளிடு பகுதி, முதனிலை யெழுத்தாய்த் தோன்றிய டகரமெய் இறந்தகால விடைநிலை, உகரக்கேடு சந்தி, அ எச்சவிகுதி. (௮௨)

அபிமன்னுவின் செய்கை.

738. வந்தெதிர்ந்தபல்வேந்தர்மார்மேலுந்தோண்மேலும்
பந்தியாய்நின்றபடைமேலும்—முந்தி
விடுத்தானடுசரங்கள்வேல்வேந்தர்தம்மைக்
கெடுத்தான்றிறலாற்கிளர்ந்து.

(இ-ள்.) வந்துஎதிர்ந்த - வந்து (தன்னோடு போர்க்கு) எதிர்ந்த, பல்வேந்தர் - பலஅரசர்களுடைய, மார்மேலும் - மார்பின்மேலும், தோள்மேலும் - தோளின்மேலும், பந்திஆய்நின்ற - வரிசையாய்நின்ற, படைமேலும் - சேனையின்மேலும், அடுசரங்கள் - கொலைத் தொழிற்குரிய பாணங்களை, முந்திவிடுத்

தா[illegible] - முறைகேட்டில் அபிமன்னுவைக் கொன்றோனை, திறல்வாய் - போர்வலிமையால், கூர்த்த - கூர்மையுள்ள, வெம் - கொடிய (ஏந்திய) வெஞ்சரத்தால் - அம்புகளால், கெடுத்தான - சிதைத்தான.

[illegible] சயத்திரதனை [illegible] அருச்சுனன் [illegible] வில்லால் [illegible] புரிசை [illegible] சேனைகளை சிதறவித்து [illegible] யையுந் தேருஞ் சிலையு [illegible] [illegible] யடைந்தாகி, ஊழிக்கால [illegible] லக் கொலைத் தொழிற் குருதிப் புனல் பெருகிக் குமிழியிட, யானை தேர் குதிரை காலாட்களும் பட்டவிந்து நிணமலி [illegible] பிணமலைப் பட்ட, [illegible] பெருகாநின்ற [illegible] புனலி [illegible] குளித்தெதிர் பொருவாரை [illegible] களித்தெழுந்த மனத்தனாகித் [illegible] [illegible] [illegible] [illegible] [illegible] திரியும் [illegible] இம்பர்தாங்களு [illegible] அபிமன்னுவை [illegible] [illegible] சூழ்ந்து [illegible] வெகுளிபட [illegible] கொல்லாநின்ற அபிமன்னு வைக்கண்டு [illegible] [illegible] [illegible] வந்து பற்றுமோவா [illegible]. ஆய் செயவெனச் [illegible]. [illegible] இறந்தகால வினையெச்சமமுற்று பகுதி, உகரங்கெடு சந்தி, இ எச்சவிகுதி. (௬௯)

இதுவும் அது.

739. கொற்றக்குரங்குயர்த்தான் கோமதலைகோளரவம்
வெற்றிக்கொடிகொண்டான் மெய்ம்மகனை—அற்றுத்
தலைபுரண்டுவீழச்சரந்தொட்டானுங்கோர்
மலைபுரண்டுவீழ்வதுபோன்மாண்டு.

(இ-ள்.) கொற்றம - வெற்றியையுடைய, குரங்குஉயர்த்தான் - வாநரக் கொடியையுயர்த்திய அருச்சுநனுடைய, கோ - கண்போன்ற, மதலை - புத்திரனாகிய அபிமன்னு, கோள் - வலிமையையுடைய, அரவம - பாம்பினை வெற்றிக்கொடி கொ

ண்டான் - விசய துவசத்தின் மேற்கொண்ட துரியோதனன், மேய - விரும்பிய, மகன் - இலட்சணகுமாரன், ஆங்கு - அப் போர்க்களத்தில், ஓர்மலை - ஒருமலை, புரண்டு வீழ்வதுபோல் - புரண்டுவிழுதல்போல, மாண்டு - மடிந்து, தலைஅற்றுபுரண்டுவீழ-தலைதுணிந்துபுரண்டுவிழ, சரம்தொடடான் - பாணப்பிரயோகஞ்செய்தான்.

இவ்வகையினுல் இராசராசன் துரியோதனன்மகன் இலட்சணகுமாரனை யஸ்திர சஸ்திரத்தாற் றலைதுமித் தவனோடும் வந்த க்ஷத்திரியர் குமாரர் எண்ணிறந்தாரைத் தலையு மிடையுந் துணித்துச் சிங்கநாதஞ்செய் தெம்மருங்குந் தானேயாய்ப் பொரு கணைமாரி பொழிகின்ற மாதேவி புத்திரன் மகாபல பராக்கிரமனை யெண்ணிறந்தார் சூழ்ந்துகொள்ளலும், மத்திரேஸ்வரனைத் தேரழித்து மற்றவனைப் புறங்கண்டு வந்தெதிர்ந்த ராசாக்களை யெப்பக்கமுமோடத் துரத்தி யநேக சகஸ்திரமதகசங்களையும், அநேகசகஸ்திரபாய்மாவையுமெண்ணிறந்த தன்னடுசரங்களா லவிய நூறிக் கொடிப் படையை யிரிவிக்கின்ற அபிமன்னுவுக்கு, நிலையாற்று திரிந்தோடுகின்ற மகா.சேனையைக் கண்டு மகாவுக்கிரத்தோடு மகனுக்கிரங்கி, துரோண கிருப கன்ன அசுவத்தாமாவையுநோக்கி. மேய இறந்தகாலப்பெயரெச்சம் மே பகுதி, யகரமெய் இறந்தகாலவிடைநிலை, அ எச்சவிகுதி. இப்பெயரெச்சம் மகன் என்னும் செயப்படு பொருள்கொண்டது. (கூச)

துரியோதனன் கூறல்.

740. இம்மகியுமிவ்வரசும்வேண்டேனிகலமருள்
நின்மகனுநின்கண்ணுந்தான்காண—என்மகனைக்
கொன்றுளனுய்நிற்கவோர்கூனல்வில்வேள்போலமா
வின்றுளனுயென்செய்கேன்யான்.

(இ-ள்.) இமகிஉம் - இந்நிலவுலகையும், இஅரசுஉம் - இந்தஅரசியலையும், வேண்டேன் - இனி ஒரு பொழுதும் விரும்பேன், இகல்அமர்உள் - போர் செய்யும் போர்க்களத்தில், நின்மகன்உம் - உன்புத்திரனுகியஅசுவத்தாமாவும், நின்கண் உம் - உன்துக்கண்களும், காண - பார்க்க, என்மகன்ஐ - என்

புத்திரனாகிய இலட்சணகுமாரனை, கொன்றுளன்ஆய் - கொன்றவன்ஆய், ஓர் - ஒரு, கூனல் - வளைந்த, வில்வேள்போல - தனுசேந்திய மன்மதனைப்போல, நிற்க - (அபிமன்னு இங்குச் சிறிதும் சலியாது) நிற்க, மால் - மயக்கத்தை, இன்று - இப்பொழுது, உளன்ஆய் - உள்ளவனாய், யான் - நான், என் செய்கேன் - என்னசெய்யப்போகின்றேன்.

அதுவனறியும் எனக்குச் சிநேக பாந்தவத்தால் யுத்தஞ் செய்ய வந்த அபிஷேக க்ஷத்திரிய ராறுபதினாயிரவரும் இராசகுமாரர் நூறாயிரவரும் ஐம்பதுலக்ஷமதகசமும் நூறாயிரலக்ஷம் அசுவங்களும், இரண்டு நூறுலக்ஷ மணிநெடுந் தேரும் எண்ணிறந்த பதாதி வெள்ளமும் என்மகனிலக்ஷணகுமாரனு முன்பு பட்டார்கள், இனிச் செயத்திரதனொருவனொழிய மித்துரு பாந்தவமும் ஒழிந்த மகாசேனையும் இவன்கண் முன் நிற்கப பயந்தோடுகின்றன, யானு மிவன கையிற்படுகின்றேன் இனிச் சிறிது பொழுதி லருச்சுநன் வந்து இவனுக்குத் துணைசெய்யுமாகில் பின்பு மூவராலும் வெல்வதரிது அதற்கு முன் இவனை மலைந்து கொன்மினென்று துரியோதனன் வெகுண் டுரைப்பத், துரோணன் முதலியோர் சௌபுத்திரனைச் சூழ்ந்து கொள்ளலும். மகன் ஆண்பாற் படர்க்கைப் பெயர்ச்சொல் மக பகுதி, னகரமெய் ஆண்பால் விகுதி. சுமித்திரையின் புத்திரன் சௌபுத்திரன். (கூரு)

கன்னன் செய்கை.

741. மன்னனுரைகேட்டுமாமறையோனுள்ளிட்ட
மன்னர்பலரோடும்வந்தெதிர்ந்து—கன்னன்
சரமாரிதூவித்தடுத்தான்கதத்தாற்
பொருமால்களிற்றனைப்புக்கு.

(இ-ள்.) மன்னன் - துரியோதனன் (கூறிய) உரைகேட்டு - வசனத்தைக்கேட்டு, மா - பெருமையமைந்த, மறையோன் உள்ளிட்ட - துரோணனுள்ளிட்ட, மன்னர்பலர்ஓடும் - அரசர்கள் பலரோடும், கன்னன் - கன்னனனவன், கதத்துஆல் - கோபாவேசத்தால், பொரு - போர்செய்யும், மால்களிற்றுஐ - பெரிய ஆண் யானையை யொத்த அபிமன்னுவை, புக்

குவந்து - அடித்துவந்து, எதிர்ந்து - எதிர்ந்து, சரமாரி - பாண வருஷங்களை, தூவிதடுத்தான் - சிந்தி நிலைபெயராது தடுத்தனன்.

கன்னன் குந்தியின் கபோலத்திற் பிறந்தவன். மால் உரிச்சொல்லாதலால் வருமொழி வல்லெழுத்தை நோக்கித் திரியாது இயல்பாய் நின்றது. "இடையுரி வடசொலின்" என்னும் சூ - ஆல். (கக)

அபிமன்னுவின் செய்கை.

742. அங்கவளநாடனெய்தானை யையைந்து
வெங்கணைகொண் டெரிநுகால் வில்லறுத்தே—அங்கவன்
கோலாளைக்கொன்றுகொடித்தேரழித்தவனைக் [றன்
காலாளாய்ச்செய்தான் கறுத்து.

(இ-ள்.) வளம் அங்கம் நாடன் - வளமிகுந்த அங்க தேசத்தையுடையவனாய், எய்தான் ஐ - பாணப்பிரயோகஞ்செய்தகன்னனை, ஐயைந்து - இருபத்தைந்தாகிய, வெங்கணை கொண்டு - கொடிய அம்புகளால், எரிநுகால் - நெருப்புத்தரும், வில் அறுத்து - (அவனேந்திய) வில்லினையறுத்து, அங்கு - அப்போர்க்களத்தில், அவன்தன் - அக்கன்னனுடைய, கோலாள் ஐ - சாரதியை, கொன்று - மடித்து, கொடி - கச்சைக்கொடி (கட்டிய) தேர் அழித்து - தேரைச் சிதைத்து, அவன் ஐ - அக்கன்னனை, கறுத்து - கோபித்து, காலாள் ஆய் - பதாதியாய் (ச்) செய்தான் - (அபிமன்னு) தூரத்தினன்.

இவ்வகை வில்லுந் தேரும் அழிப்புண்டு சாரதியை டக் கொடுத்து, வேறு நிலத்திடை யிழியப் பாய்ந்து வி. தோடித் துச்சாசனன் றேரேறி யுக்கிரவேகத்தோடு முறு பொங்கி யபிமன்னுவினுடன் வந்துதாக்கி. அங்கநாட. இடத்தினடியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று எச்சமாய் எய்தான் என்னும் வினைமுற்றுப் பெயரினைக் கொண்டது. கொண்டு கருவிப் பொருளில் வந்த மூன்றாம் வேற்றுமைச் சொல்லுருபு. கறுத்து இறந்தகாலவினையெச்சம் கறு பகுதி. தகரமெய் சந்தி, த் இறந்தகால இடைநிலை, உ எச்சவிகுதி.